
2019 க.பொ.த (உயர் தர)ப் பரீட்சை எழுதும் மாணவர்களுக்கான







K.S. Nimalraj B.A

ஆனந்தா கல்வி நிலையம்

அரசடி,மட்டக்களப்பு.

கட்டணம் 300/=

மாணவர்களுக்கான அறிவுறுத்தல்

- **இவ்வினாப்பத்திரம் பகுதி A,B,C என 03 பகுதிகளை உள்ளடக்கி மொத்தம் 10 வினாக்களை உள்ளடக்கியுள்ளது**
- **பகுதி A இல் இருந்து ஒரு வினாவையும் பகுதி B இல் இருந்து இரு வினாக்களையும் பகுதி C இல் இருந்து ஒரு வினாவையும் கட்டாயம் தெரிவு செய்து மொத்தமாக 05 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்**
- **நீர் தெரிவு செய்யும் 05 வது வினாவை பகுதி A,B,C ஏதேனும் ஒன்றில் இருந்து தெரிவு செய்யலாம்**
- **ஒரு வினாவுக்கு 20 புள்ளிகள் வீதம் 05 வினாக்களுக்கும் 100 புள்ளிகள் வழங்கப்படும்**
- **இவ்வினாப்பத்திரத்திற்கான நேரம் 03 மணித்தியாலங்கள் வழங்கப்படும்**

பகுதி A

வினா 01 (20 புள்ளிக்குரிய வினா)

01. அரசியலுக்கும் அரசியல் விஞ்ஞானத்திற்கும் இடையில் உள்ள தொடர்புகளும்,வேறுபாடுகளும்

அல்லது

02. அரசறிவியல் கற்கை நெறியையும் அதன் அரசியல் பிரிவுகளையும் தெளிவுபடுத்துக.

அல்லது

03. அரசறிவியல் கற்கை நெறியையும் அதன் உபதுறைகளையும் தெளிவு படுத்துக

01. அரசியலுக்கும் அரசியல் விஞ்ஞானத்திற்கும்(அரசறிவியல்) இடையிலான தொடர்பு,வேறுபாடு

அரசியல், அரசறிவியல் என்பன மிகவும் பிரதானமான விடயங்கள் ஆகும். இவை இரண்டினையும் நோக்குகின்ற போது ஒரே கருத்தினையுடையன போல் காணப்படுகின்றது. ஆயினும் இவை இரண்டும் வேறுபட்ட எண்ணக்கருக்களாகும். அதாவது அரசறிவியல் என்பது கற்கை மற்றும் பாடப்பரப்பு க்களை அடிப்படையாகக் கொண்ட ஓர் கோட்பாட்டு அம்சமாகும். மாறாக அரசியல் என்பது நடைமுறை சார்ந்த பிரயோக வடிவத்தினை குறிப்பிடுவதாகும். அரசியலுக்கும் அரசியல் விஞ்ஞானத்திற்கும் இடையிலான தொடர்பினை இரண்டு பிரதான கருத்துக்களின் அடிப்படையில் நோக்க முடியும்.

- **அரசியல் செய்தல்**
- **அரசியல் கற்றல்**

அரசியல் செய்தல் என்பதன் பொருள் யாதெனில் அரசாங்க அதிகாரத்தை பெற்றுக் கொள்ளல் அவ்வதிகாரத்தை நடைமுறைப்படுத்தல்,தேர்தலில் பங்கேற்றல்,அரசியற்கட்சிகளை அமைத்தல் ,அரசியற்கட்சிகளின் செயற்பாடுகளில் பங்கேற்றல்,போராட்டம் மற்றும் எதிர்ப்பு நடவடிக்கைகளில் செயற்படுதலாகும்

இவற்றில் ஈடுபடுவதற்கு பிரஜைகளுக்கும் அரசியல்வாதிகளுக்கும் அரசியல் தொடர்பான கல்விசார் அறிவோ சிறப்புத் தேர்ச்சியோ அவசியமில்லை அரசியல் என்ற சமூக செயற்பாட்டில் ஈடுபட ஆர்வமும் தியாகமும் தேவைப்படுகின்றன

அசியலைக் கற்றல் என்பதன் பொருள் யாதெனில் பிரயோக அரசியலில் காணப்படும் விடயங்களை கற்றலே அரசியல் கற்றலாகும் இது அரசியல் செய்வதிலும் பார்க்க வேறுபட்டதாகும் அரசியல் கற்கும் மாணவர்களை

அரசியல் வாதியாகவோ அரசியலில் பங்குபற்றும் பிரஜையாகவோ அடையாளப்படுத்த முடியாது எனவே கல்வித்துறையாக அரசியலை கற்றல் என்பது பிரயோக அரசியலில் இருந்து வேறுபடுகின்றது.

இதன்படி தேர்தல் செயற்பாடுகள்,அரசியல் மோதல்கள்,வாக்காளர்களின் நடத்தைகள்,அரசாங்கத்தின் பொதுக் கொள்கைகள், அரசியற்கட்சிகளின் அமைப்புக்கள்,மோதல் செயற்பாடுகள்,யுத்தம் மற்றும் சமாதானம் போன்ற விடயங்களை கற்றுக் கொள்ள முடியும்

எனவே இவ்விரு கருத்துக்களையும் வைத்துக் கொண்டு மேலும் சில அம்சங்களை முதன்மைப்படுத்துவதன் ஊடாக இவற்றிறகு் இடையிலான வேறுபாட்டினை தெளிவுபடுத்த முடியும்.

❖ கோட்பாட்டு மற்றும் நடைமுறைத் தளத்தின் அடிப்படையிலான வேறுபாடு

அதாவது பொதுவாக கோட்பாடு மற்றும் நடைமுறை என்னும் அம்சங்கள் அரசியல் மற்றும் அரசறிவியலில் செல்வாக்கு செலுத்துகின்றன. குறிப்பாக அரசியலினை எடுத்துக் கொண்டால் நடைமுறை ரீதியாகவும் பிரயோக ரீதியாகவும் இதன் செயற்பாடுகள் வெளிப்படுத்தப்படுகின்றன. எடுத்துக்காட்டாக தேர்தல் செயன்முறைகள் பாராளுமன்றச் செயற்பாடுகள் அரசியல் கட்சி நடவடிக்கைகள் போன்றன நடைமுறை வடிவமாகக் காணப்படுகின்றன. இவ்வாறான செயன்முறைகளே அரசியல் எனப்படுகின்றது.

மாறாக கோட்பாட்டுத் தளத்தின் அடிப்படையிலும் அரசறிவியல் என்பது அடையாளப்படுத்தப்படுகின்றது. அரசியலில் முதன்மை பெறுகின்ற அரசு, அரசாங்கம், அதிகாரம் போன்றவை சார்ந்த தகவல்களினை பெறக் கூடியதாக இது காணப்படுகின்றது. மேலும் **"தாராண்மை வாதம், சோசலிசம், பாசிசம், பெண்ணியம்...."** போன்ற கோட்பாடு வடிவிலான அறிவியலையும் அரசறிவியலானது வெளிப்படுத்தி நிற்கின்றது. இதன் மூலம் கோட்பாடு மற்றும் நடைமுறை அடிப்படையில் அரசறிவியலும் வேறுபடுகின்றது எனலாம்.

❖ அரசியல்வாதிக்கும் அரசறிவியலாளனுக்கும் இடையிலான வேறுபாடு

அரசியலின் செயன்முறை வடிவங்களை ஈடுபாட்டுடனும் தேர்ச்சி பெற்று மேற்கொள்வர்களை அரசியல்வாதிகள் என்போம். இவர்கள் தேர்தல், கட்சி, அதிகாரம், அரசாங்கம் என்னும் அடிப்படையில் தமது கடமைகளை முன்னெடுப்பார்கள் மேலும் அரசியல்வாதியாக தன்னை மாற்றிக் கொள்வதற்கு கல்வி என்பது அவசியமானது அல்ல. அரசறிவியலினை தெரிந்து கொள்ளாத ஒருவர் கூட அரசியல்வாதியாக காணப்படமுடியும். இவ் அரசியல் வாதிகளின் மூலமும் அவர்கள் சாருகின்ற அரசியல் கட்சிகள் மூலமும் அரச மற்றும் அரசாங்க செயற்பாடுகள் நடைமுறை வடிவத்தைப் பெறுகின்றன.

ஆனால் அரசறிவியலாளன் என்பவர்கள் கற்கை ரீதியாக அரசறிவியலினைப் பெற்று அதில் நிபுணத்துவம் மற்றும் புலமைத்துவம் மிக்கவர்களாக காணப்படுவதோடு அரசியல் எவ்வாறு இயங்க வேண்டும் என்பதற்குரிய ஏற்பாடுகளுக்கும் வடிவம் கொடுக்கின்றனர். இங்கு அரசறிவியலாளன் ஒருவன் அரசியல்வாதி ஆகலாம். ஆனால் அரசியல்வாதி என்பவன் அரசறிவியலாளனாக இருக்க வேண்டிய அவசியம் இல்லை எனலாம். எனவே இவர்களிற்கிடையிலான வேறுபாடு அரசியலினையும் அரசறிவியலினையும் வேறுபடுத்துகின்றது எனலாம்.

❖ அதிகாரமும் அதிகாரப் பிரயோகச் செயன்முறையும்.

இவ் அம்சத்தினூடாக அரசறிவியலினையும் அரசியலையும் வேறுபடுத்த முடியும். அதாவது அரசியலில் மையமான அரசு மற்றும் அரசாங்கத்தினது இயக்கத்திற்கு அடிப்படையாக அதிகாரம் என்பது காணப்படுகின்ற நிலையில் இவ் அதிகாரத்தினை கைப்பற்றுவதை நோக்காகக் கொண்டே அரசியல் வாதிகளும் அரசியல் கட்சிகளும் செயற்படுகின்றன. **"கான்ஸ் மொகன்தோ"** குறிப்பிடுகினற போது ''அனைத்து அரசியல் செயற்பாடுகளும் அதிகாரத்தினை மையப்படுத்தியது'' என்றார் இதன் மூலம் அதிகார நடைமுறை வடிவமே அரசியல் ஆகின்றது.

மாறாக மாக்கியவல்லியினால் **இளவரசன்** என்ற நூலின் மூலம் ஆரம்பிக்கப்பட்டு **பேட்டன்ரசல், ஜீன்போடின், ஜோன் ஒஸ்ரின்** போன்றவர்களினால் வளப்படுத்தப்பட்ட அதிகாரம் பற்றிய வரையறை, பிரயோக எல்லைகள், அதிகார வகைகள் போன்றவை பற்றி விளங்கிக் கொள்ளக்கூடியதாக உள்ளதோடு நடைமுறையில் பயன்படுத்தப்படுவதற்கும் அடித்தளம் இடுகின்றது. அதிகாரத்தை யார்,எப்போது,எவ்வாறு,எவ்வளவு பெறுகின்றனர் என்பதை கற்கும் நுட்பங்களை அரசறிவியலில் காணலாம எனவே அரசியலையும் அரசறிவியலையும் வேறுபடுத்தும் அம்சமாக இதனைக் குறிப்பிடமுடியும்.

❖ மோதல் செயன்முறையும் அதுசார் தீர்வு முயற்சிகளும்

இன்று உலகளாவவிய ரீதியில் முதன்மைப்படுத்தப்படுகின்ற எண்ணக்கருவாக மோதலும் அதன் தீர்வு முயற்சிகளும் காணப்படுகின்ற நிலையில் அவற்றினை அடிப்படையாகக் கொண்டு அரசியலையும் அரசறிவியலினையும் வேறுபடுத்தக்கூடியதாகவுள்ளது. குறிப்பாக அரசியல் வாதிகளும் அரசியல் கட்சிகளும் தேசிய ரீதியான, இன ரீதியான முரண்பாடுகளினை இனங்கண்டு அதனைத் தீர்ப்பதற்குரிய நடைமுறை முயற்சிகளை மேற்கொள்கின்றார்கள் எனலாம். அதே நேரம் மூன்றாம் உலக அரசுகள் போன்றவற்றில் மோதல்களை நிகழ்த்துபவர்களாகவும் தூண்டிவிடுபவர்களாகவும் அரசியல் வாதிகளே காணப்படுகின்றனர். இதன் மூலம் மோதலின் வடிவத்திற்கும் அது சார் தீர்வு நடவடிக்கைகளிற்கும் அரசியலே அடிப்படையாகவுள்ளது.

உதாரணம்

- **முதலாம் உலகப் போர் - 1914-1945**
- **இரண்டாம் உலகப் போர் - 1939-1945**
- **ஈரான் ஈராக் போர் - 1986-1987**
- **இந்திய பாகிஸ்தான் போர் - 1971**
- **இலங்கையின் உள்நாட்டுப் போர் - 1983-2009**

மாறாக அரசறிவியல் என்பது மோதல் என்றால் என்ன? எனவும் அவை எவ்வாறு தீர்வினை எட்ட முடியும் எனவும் கற்றை ரீதியாக விளங்குகின்றது எனலாம். எடுத்துக்காட்டாக

- **"ஹல்துங்"** என்வரின் மோதல் கோட்பாடு மற்றும் மோதல் முக்கோணி போன்றவை குறிப்பிடப்படுகின்றது.
- மத்தியஸ்தம்
- சமாதானம்
- ஒப்பீட்டு இழப்புக் கோட்பாடு

எனவே இவ் அம்சத்தின் மூலம் அரசியலினையும் அரசறிவியலினையும் வேறுபடுத்த முடியும் எனலாம்.

- **சர்வதேச அரசுகளும் சர்வதேச அரசியல் செயற்பாடுகளும்**

அரசியல் மற்றும் அரசறிவியலினை வேறுபடுத்துவதற்குரிய அம்சமாக சர்வதேச அரசுகள் மற்றும் சர்வதேச செயற்பாடுகள் அமைகின்ற. குறிப்பாக இன்று ஒவ்வொரு அரசுகளுக்கும் சர்வதேச அரசுகள் மற்றும் சர்வதேச ஒத்துழைப்புக்கள் அவசியமானதாகும். எனவே இதனை முன்னெடுத்துச் செல்லக்கூடிய அரசியல் செயற்பாடுகள் முதன்மைமிக்கவையாகும். இதிலே அரசியல் தலைவர்கள் மற்றும் அரசியல்வாதிகளது பங்களிப்பென்பதும் தவிர்க்க முடியாததாகும். இத்தகைய அரசியல் செயற்பாடுகள் சர்வதேச அரசியல் என அழைக்கப்படுகின்றது.

அதே நேரம் சர்வதேச ரீதியான அரசியலினை கற்கை வடிவம் சார்ந்து அரசறிவியலின் மூலம் அறிந்து கொள்ள முடியும். குறிப்பாக சர்வதேச அரசமுறைகள், அரசியல் யாப்புக் கட்டமைப்புக்கள், அரசியல் கலாசார மற்றும் அபிவிருத்திச் செயன் முறைகள், ஐக்கிய நாடுகள் சபை, சர்வதேச நெஞ்சிலுவைச் சங்கம், சர்வதேச மன்னிப்புச்சபை போன்ற சர்வதேச நிறுவனங்கள் பற்றிய விடயங்களினையும் அரசறிவியல் மூலம் அறிந்து கொள்ள முடியும்.

எனவே மேற்குறித்த காரணிகளை அடிப்படையாகக் கொண்டு அரசியலினையும் அரசறிவியலினையும் வேறுபடுத்திக் கொள்ள முடியும். ஆயினும் இவை இரண்டும் வேறு பட்டவையாகக் காணப்படுகின்ற அதே நேரம் ஒன்றில் ஒன்று தங்கியிருக்க வேண்டியநிலையில் காணப்படுகின்றது. அதாவது அரசறிவியல் போதிப்பின் மூலம் நடை முறை அரசியலினை சிறப்பாக மேற்கொள்ளக்கூடியதாக உள்ளதோடு நடைமுறை அரசியல் விடயங்கள் எதிர்கால அரசறிவியல் அம்சங்களாகவும் மாற்றமடையும் எனலாம்.

01. அரசியல் கற்கையும் அரசியல் பிரிவுகளும்

அரசியலை கற்கைக்கு உட்படுத்தல் என்பது அரசியல் தோற்றப்பாட்டின் பல்வேறுபக்கங்களை விளங்கிக் கொள்ளும் செயன்முறையாகும். கடந்த இரண்டாயிரம் ஆண்டுகள் பரவலினூடு பல்வேறு திசைகளில் அபிவிருததி அடைந்துள்ள மற்றும் தொடர்ந்தும் அபிவிருத்தியடைந்துக் கொண்டிருக்கும் அரசறிவியல் கல்வித்துறை மூலம் கற்கப்படுகின்ற அரசியலானது சமூக வாழ்தன்மையின் பல்வேறு பிரிவுகளில் காணப்படுகின்றது. அதாவது,

I. **அரசியல் நிறுவனங்கள்**

II. **அரசியல் பயன்பாடுகள்**

III. **அரசாட்சி**

IV. **அரசியல் நடத்தை**

V. **அரசியல் கருத்தியல்கள் என்பவே இவையாகும்.**

I. அரசியல் நிறுவனங்கள்

எந்தவொரு சமூகத்திலும் அரசியலானது நிறுவனமயமாக்கப்பட்டு காணப்படும். இவ்வாறு நிறுவனமயப்படுத்தப்பட்ட அரசியலில் பிரசித்திப்பெற்ற அம்சங்களாக அரசு, அரசாங்கம், பதவிமுறைகள், நீதிமன்றம், பாராளுமன்றம், அரசியல் கட்சிகள், அமைச்சரவை, உள்ளுராட்சி மன்றங்கள் போன்றனவே இவையாகும். இங்கு அரசியல் அதிகாரம் மற்றும் அரசியல் செயற்பாடுகளே நிறுவனமயப்படுத்தப்பட்டு இருக்கும். இவற்றை கற்கும்போது இவை அரசியல் விஞ்ஞான ஆய்வுக்கு உட்படுகின்றன. இவற்றின் நிறுவன கருப்பொருட்களாக அமைவது நிறுவனங்களின் ஆரம்பம், வளர்ச்சி, கட்டமைப்பு (அமைவுச் சேரக்ல்க), அதிகாரம், பொறுப்புக்கள் நிலைமாற்றம் மற்றும் வேறுபாடுகள மற்றும் அந்த நிறுவனங்களுக்கும் பிரசைகளுக்கும் இடையிலான தொடர்புகள் என்பனவாகும்.

❖ அரசு

ஒரு வரையறுக்கப்பட்ட நிலப்பரப்பிற்குள் ஒழுங்கமைக்கப்பட்ட மானிட சமூகத்தில் அவர்களின் தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டு அவர்களால் உருவாக்கப்பட்ட அரசாங்கத்தைக் கொண்டதும் இறைமையைக் கொண்ட துமான உயர்ந்த அமைப்பாகும்.

அரிஸ்டோட்டில் என்பவர் ''இயற்கையின் படைப்பே அரசு''என்றார் ''இது மக்களின் நலனுக்காகவே தோன்றி அதற்காக நீடிக்கின்றது'' எனவும் குறிப்பிட்டார்.

❖ அரசாங்கம்

அரசின் விருப்பங்களை வடிவமைத்தல்,வெளிப்படுத்தல் மற்றும் அமுல்படுத்தல் ஆகிய பணிகளை நிறைவேற்றும் நிறுவனமே அரசாங்கமாகும்.

அரசாங்கம் என்பது ஒரு அரசாங்கம் கொண்டிருக்க வேண்டிய அடிப்படைக் கூறுகளுள் ஒன்றாகும்.இது அரசின் அரசியல் களத்தினை வெளிப்படுத்துகிறது இவ்வரசாங்கம் இன்றி அரசு இருக்க முடியாது இன்னும் தெளிவாகக் கூறுவதாயின் அரசு எனும் கப்பலை செலுத்தும் மாலுமி அரசாங்கமாகும்.

பேராசிரியர் **அப்பாத்துரை** ''அரசின் விருப்பங்களை நிறைவேற்றும் ஒரு கருவியாக அரசாங்கம் விளங்குகிறது'' எனக்குறிப்பிட்டார்

சீ.எப். ஸ்ரோங் எனும் அரசியல் விஞ்ஞானி அரசாங்கத்தை ''சட்டத்தை இயற்றி அதனை அமுல்படுத்துவதற்குத் தேவையான அரசின் அதிகாரத்தைப் பெற்ற ஓர் அமைப்பு'' எனக்குறிப்பிட்டார்.

❖ பணிக்குழு

அரசாங்கத்தின் கொள்கைகள்,தீர்மானங்கள் என்பவற்றை மக்களிடம் கொண்டு செல்லும் கருவி பணியக ஆட்சி எனப்படும். இது பதவிவழிப்பொறிமுறையாகும் இதன் ஊடாகவே அரசின் கொள்கைகளும் தீர்மானங்களும் அமுலாக்கப்படுகின்றன.

❖ நீதிமன்றங்கள்

பொது மக்களுக்காக நீதியை நிலை நாட்டும் ஓர் நிறுவனமாகும் சட்டத்திற்கு விளக்கமளித்தல் வழக்குகளை விசாரணை செய்தல்,தீர்ப்பு வழங்குதல் பிரஜைகளின் உரிமைகளைப்

பாதுகாத்தல்,அரசியல் யாப்பினைப் பாதுகாத்தல் என்பன நீதிமன்றத்தின் பிரதான பணிகளாகும்

❖ பாராளுமன்றம்

பொதுவாக சட்டமன்றங்கள் பாராளுமன்றம் எனும் பெயரிலேயே அழைக்கப்படுகின்றது. சட்டங்களை உருவாக்குதல்,அரசியல் யாப்பினை உருவாக்குதல் மற்றும் திருத்துதல் வரவுசெலவுத் திட்டத்தை ஏற்றுக்கொள்ளல் மற்றும் நிராகரித்தல் போன்ற பணிகளை மேற்கொள்கின்ற நிறுவனமே பாராளுமன்றமாகும்.

இப்பாராளுமன்றம் ஓரங்கமன்றமாகவும் ஈரங்கமன்றமாகவும் காணப்படலாம் இலங்கை, மாலைதீவு, நேபாளம், பூட்டான்,நோர்வே போன்ற நாடுகளின் சட்டமன்றம் ஓரங்கசட்டமன்றமாகவும் அமெரிக்கா,கனடா,இங்கிலாந்து, இந்தியா போன்ற நாடுகளின் சட்டமன்றம் ஈரங்கசட்டமன்றமாகவும் உள்ளன.

❖ அமைச்சரவை அல்லது கபினட்

மந்திரிசபை அரசாங்கத்திலும் ஜனாதிபதித்துவ அரசாங்கத்திலும் இவ் அமைச்சரவை காணப்படுகின்றது ஆனால் மந்திரிசபை அரசாங்க முறையிலேதான் அமைச்சரவை முக்கியத்துவம் பெற்று விளங்குகின்றது. பிரதமர் தலைமையில் அல்லது ஜனாதிபதி தலைமையில் அமைச்சர்கள் சேர்ந்த நிறுவனமே அமைச்சரவையாகும்.

❖ **உள்ளூராட்சி மன்றம்**

மத்திய அரசின் அல்லது மாநில அரசுகளின் ஒரு பகுதியாகவுள்ளதும் அவற்றினால் வழங்கப்பட்ட வரையறுக்கப்பட்ட அதிகாரங்களையும் தொழிற்பாடுகளையும் கொணட் தும் உள்ளூர் மட்ட மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்டு அவர்களின் நலனுக்காக இயங்கும் ஓர் சுயாதீன அரசாங்க ஒழுங்கமைப்பே உள்ளூராட்சி மன்றமாகும்

II. அரசியல் நடைமுறைகள் (Political Practices)

நிறுவனமயப்படுத்தப்பட்டுள்ள (பாராளுமன்றம், கபினட்,நீதிமன்றங்கள்,பணிக்குழு) அரசியல் சமுகத்தின் அரசியல் நடைமுறைகளை மையமாகக்கொண்டு நிலைத்திருக்கும் நடைமுறைகள் அரசியல் நடைமுறைகள் எனலாம் உதாரணம் :-

❖ பாராளுமன்ற நிறுவனத்தின் இருப்புக்காக அதற்கென ஒழுங்கமைக்கப்பட்ட நடைமுறைகள் பல உள்ளன. ஜனநாயகம், தேர்தல் செயற்பாடுகள் சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல் பெரும்பான்மையோரின் விருப்பம் மற்றும் மக்கள் இறைமையை ஏற்றுக்கொள்ளல், சட்ட உருவாக்க செயன்முறையின்போது பாராளுமன்றத்தின் செயற்பாடுகளை தீர்மானிக்கும் சம்பிரதாயங்கள் மற்றும் சட்டத்திட்டங்கள் என்பன இந்த நடைமுறைகளாகும்.

❖ நீதிமன்றத்தின் இருப்புக்கு பின்வரும் நடைமுறைகள் காணப்படுகின்றன.

1. நீதி வழங்கள்
2. சட்டத்திற்கு விளக்கமளித்தல்
3. வழக்குகளை விசாரணை செய்தல்
4. பக்கச்சார்பின்றி தீர்ப்பு வழங்குதல்
5. சுதந்திரமாக தீர்ப்பு வழங்குதல்
6. மக்களின் உரிமைகளைப் பாதுகாத்தல்
7. ஜனநாயகத்தை மதித்தலும் போதித்தலும்

III. அரசாட்சி (Governance)

அரசாட்சி என்பது அரசறிவியல் ஆய்வுக்கு உட்படும் அரசியலில் காணப்படும் பிரதானமான பிரிவாகும். ஜனநாயக அரசியல் முறைமையினுள் பிரசைகள் அரசாங்கத்தை தெரிவு செய்து தாம் அங்கத்துவம் பெற்றுள்ள சமூகமாகிய அரசியல் சமூகத்தினை சரியாக வழிநடத்தி அதன்மூலம் சமூகத்தின் பொது எதிர்பார்ப்புகளுகு சேவை செய்து அரசியல் மற்றும் நிருவாக ரீதியாக சமூகததினை கட்டுப்படுத்துவதற்காகும். இந்த அரசாட்சி செயற்பாட்டில் உள்ளடக்கப்படும் பணிகள் சில உள்ளன.

1. சமூகத்தின் நல்வாழ்வுக்காக, முரண்பாடுகளை தீர்த்துக்கொள்வதற்கு, சட்டத்தையும் ஒழுங்கையும் பேணிக்கொள்வதற்கும், பொருளாதார அரசியல் செல்வழிகளை ஒழுங்குப்படுத்தவும் தேவையான சட்டங்களை உருவாக்குதல் (Law Making)
2. நாட்டின் பொருளாதார சமூக அபிவிருத்தி மற்றும் நிலைமாற்றத்தோடு நல்வாழ்வினை நோக்காகக் கொண்ட கொள்கைகளை உருவாக்குதல் (Policy Making) கொள்கை அமுலாக்கல் (Policy implementation)
3. அரசாங்க கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான அரச நிருவாக செயற்பாடுகள் ீரடிடஎ யுனஅளைவசயவழைெ)
4. பிரசைகளுக்கு அரச அரவணைப்பு மற்றும் பாதுகாப்பினை பெற்றுக்கொடுத்து சமூக ஒருமைப்பாட்டை உறுதிப்படுத்தும் சட்டம் மற்றும் ஒழுங்குகினை பேணிச் செல்லல் (Law and order)
5. சமூக குழுக்களுக்கிடையிலும், சமூகக் குழுக்களுக்கும் அரசுக்கும் இடையில ஏற்படும் முரண்பாடுகளை முகாமைசெய்தல் (Conflict Management)
6. நாடுகளுககிடையிலான தொடர்புகளை (Inter State Relations) முகாமை செய்தலும் பேணிச் செல்லலும்.

இவ்விடயங்கள் மக்களை தூண்டும் கருததியல்களாகும். அத்தோடு இவை அரசறிவியலில் ஆய்வாளர்களின் விசேட அவதானத்திற்கு உட்படுவனவுமாகும். இதற்கு இவை அரசியலின் பிரயோகக் கருவிகளாக உள்ளமையே முக்கியமான காரணமாகும்.

IV. அரசியல் நடத்தை (Political Behaviour)

அரசியல் பிராணி ஒருவரான மனிதன் தற்போது பிரசையாக கருதப்படுகின்றான். அதாவது அரசின் அங்கத்தினர் ஒருவர் எனும் வகையிலாகும். பிரசைகளுகு நவீன ஜனநாயக அரசாஙக் முறையினுள் நிறைவேற்றிக் கொள்ளக்கூடிய முக்கிய பணிகள் பல உள்ளன.

ஓர் அரசியல் சமுகத்தில் மனிதர்களின் விருப்பு வெறுப்புகளையும் செயற்பாடுகளையும் விபரிக்கும் எண்ணக்கருவே அரசியல் நடத்தையாகும்

பொருளாதாரம்,மக்களின் சமூகத்தரம்,இனம்,சாதி,கல்வி,விருப்பு போன்ற காரணிகள் அரசியல் நடத்தையில் செல்வாக்குச் செலுத்துகின்றன. இதில் முக்கிய பல பணிகள் உள்ளன.அவை

1. அரசியலில் ஈடுபடல்
2. தேர்தலில் வாக்கினை பயன்படுத்தல் அல்லது பயன்படுத்தாமை
3. தேர்தல் செயற்பாடுகளில் செயற்றிறனுடன் ஈடுபடல் அல்லது ஒதுங்கியிருதத்ல்
4. அரசியல் கட்சிகளின் உறுப்பினராக இருத்தல் அல்லது இல்லாதிருதத்ல்
5. நாளாந்த அரசியல் நிகழ்வுகள் குறிதது ஈடுபாடு காட்டுதல் அல்லது காட்டாமல் இருத்தல்

V. அரசியல் கருத்தியல்கள் (Political Ideologies)

சமூகத்தின் அரசியல் நிறுவனங்களின் நடைமுறைகள் மற்றும் பிரசைகளின் அரசியல் நடத்தைகள் அரசாட்சி செயற்பாடுகளை ஒழுங்கமைக்கும் பிரதான சாதனமாக அமைவது அரசியல் கருத்தியல்களாகும்.

பெரும்பாலும் அரசியற்கட்சிகள்,அமுக்கக்குழுக்கள்,அரசாங்கம்,சர்வாதிகாரஆட்சி,குடியாட்சி என்பன இக்கருத்தியலின் அடிப்படையிலேயே கட்டியெழுப்பப்பட்டுள்ளன.

தற்போதைய உலக அரசியலின் இருப்பு மற்றும் அரசியல் தோற்றப்பாடுகள் அரச கொள்கைகளை ஒழுங்கமைப்பது தொடர்பிலான பிரதான கருத்தியல்கள் சில உள்ளன. அவையாவன,

1. சமவுடைமைவாதம்
2. லிபரல்வாதம்
3. ஜனநாயக வாதம்
4. குடியரசுவாதம்
5. நலன்புரி வாதம்
6. தேசியவாதம்
7. பெண்ணியவாதம்
8. பயனுடைமைவாதம்
9. பாசிசவாதம்
10. அராஜகவாதம் என்பனவையே அவையாகும்.

அரசியல் கருததியல் என்பது அரசியலுக்கு அழுத்தம் கொடுப்பதோடு சமூகத்தின் அரசியல் செயற்பாடுகள் மற்றும் பெருமளவு மக்களின் அரசியல் தீர்மானங்கள், நடத்தைகளும் அறிவுஞானத்தை ஒழுங்கமைக்கும் கருத்துகக்ளின் தொகுதியாகும்.

சமூகத்தில் பல்வேறு அரசியல் கருத்தியல்கள் இருக்க முடியும். பெரும்பாலும் அரசியல் கடச் ிகளும் இந்த கருததியல்களின் அடிப்படையிலேயே கடடி யெழுப்பப்பட்டிருக்கும். அரசாங்கம் ஒன்று நடைமுறைப்படுத்தும் கொள்கைகளும் கருத்தியல்களுக்கு ஏற்பவே தோற்றம் பெற்றவைகளாக இருக்க முடியும். எனவே, அரசியல் கருத்தியல் என்பது அரசியல் தொடர்பாக கல்விசார் ஆய்வுக்கு உட்படுத்தப்படும் அரசியலின் முக்கியமானதொரு பிரிவாகும்.

எனவே அரசறிவியலின் பரந்தபட்ட வளர்ச்சியினை அடிப்படையாகக் கொண்டு அதன் கற்க்கைப்பரப்புகள் அடையாளப்படுத்தப்படுகின்ற அதே நேரம ் இப்பாடப்பரப்பானது கிளைப் பாடப்பரப்புகளைக் கொண்டுள்ளதோடு அரசுகளுக்கரசு அவற்றின் கொள்கைகளுக்கு ஏற்ப வேறுபட்டுக் கொள்ளும் அத்தோடு கால சூழ்நிலை மாற்றங்களுக்கு ஏற்ப புதிய கற்கைப் பரப்புகளும் எதிர்காலத்தில் உள்ளடக்கப்படலாம்.

01. அரசறிவியல் கற்கை நெறியையும் அதன் உபதுறைகளையும் தெளிவு படுத்துக

- அரசறிவியலுக்கான அறிமுகம் வரைவிலக்கணம்
- அரசியல் தத்துவம்
- அரசியல் கோட்பாடு
- அரசியல் நிறுவனங்கள்
- அரசியல் கருத்தியல்கள்

மேற்குறிப்பிடப்பட்ட விடயங்கள் விபரிக்கப்படல் வேண்டும

வினா 02 (பிரிவு வினாக்கள்)

02. அரசியல் விஞ்ஞானத்தை ஆராய்கின்ற பின்வரும் அணுகுமுறைகளுள் எவையேனும் இரண்டினை விபரிக்குக.

I. நடத்தைவாத அணுகுமுறை
II. பெண்ணியல்வாத அணுகுமுறை
III. ஒப்பீட்டு அணுகுமுறை
IV. தத்துவார்த அணுகுமுறை

அல்லது

02. கீழ்வரும் அரசியல் எண்ணக்கருக்களுள் எவையேனும் இரண்டினை ஆராய்க

I. அரசியற் கட்சிகளின் வகிபங்கு
II. அமுக்கக் குழுக்களின் வகிபங்கு
III. சிவில் சமூகத்தின் வகிபங்கு
IV. பொதுத்துறை நிருவாகத்தின் வகிபங்கு

வினா 03 (பிரிவு வினாக்கள்)

03. பின்வரும் அரசாங்க முறைகளில் எவையேனும் இரண்டு அரசாங்க முறைகளின் பண்புகளை விபரிக்குக.

I. ஒற்றையாட்சி அரசாங்கமுறை
II. சமஸ்டியாட்சி அரசாங்கமுறை
III. ஜனாதிபதித்துவ அரசாங்கமுறை
IV. பாராளுமன்ற அரசாங்கமுறை

அல்லது

03. பின்வரும் அரசியல் கருத்தியல்களில் எவையேனும் இரண்டிற்கு சிறுகுறிப்பு வரைக

I. மதசார்பின்மை வாதம்
II. சமூகஜனநாயக வாதம்
III. குடியரசு வாதம்
IV. பாசிச வாதம்

03. பாராளுமன்ற அரசாங்க முறை ஜனாதிபதி அரசாங்க முறை என்பவற்றுக்கிடையிலான வேறுபாடுகள்

பாராளுமன்ற அரசாங்க முறை	ஜனாதிபதி அரசாங்க முறை
1. சட்டத்துறை, நிர்வாகத்துறை என்பன இணை ந்து காணப்படும்.	சட்டத்துறை, நிர்வாகத்துறை என்பன தனித்தனியாக காணப்படும்
2. உண்மை நிர்வாகம், பெயரளவு நிர்வாகம் என இருவகை நிர்வாகம் காணப்படும்	உண்மை நிர்வாகம், பெயரளவு நிர்வாகம் என்பன ஒரே நபரிடம் குவிந்திருக்கும்.

3. கட்சி அரசாங்க முறை நடைமுறையில் இருக்கும்	கட்சிஅரசாங்க முறை நடைமுறையில் இருக்காது.
4. நிர்வாகத்துறை மீதான பாராளுமன்றத்தின் கட்டுப்பாடு அதிகமாக இருக்கும்.	நிர்வாகத்துறை மீது பாராளுமன்றத்தின் கட்டுப் பாடு குறைவாக இருக்கும்.
5. அமைச்சரவை கூட்டுப் பொறுப்பு அவசியம்	அமைச்சரவை கூடுப் பொறுப்பு அவசியமில்லை.
6. அரசியலில் ஒத்த தன்மை இருக்கும்	அரசியலில் வேறு வேறு தன்மைவர வாய்ப்புக்கள் உண்டு.
7. எதிர்க்கட்சி முறை நடைமுறையில் இருக்கும்	எதிர்க்கட்சி முறை அவசியமில்லை.
8. கூட்டு மனிதர்களின் ஆட்சி நடைபெறும்.	தனிமனித ஆட்சிமுறை நடைமுறையில் இருக்கும்
9. வலுவேறாக்கக் கோட்பாடு சட்டத்துறை, நிர்வாகத்துறைகளுக்கிடையே பின்பற்றப்படுவதில்லை.	வலுவேறாக்கக் கோட்பாடு சட்டத்துறை மற்றும் நிர்வாகத்துறைகளுக்கிடையே பின்பற்றப்படும்.
10. நிர்வாகத்துறை சட்டத்துறையில் தங்கியிருப் பதால் வினைத்திறன்மிக்க ஆட்சி நடத்தல் கடினம்	நிர்வாகத்துறை சட்டத்துறையில் தங்கியிராதால் வினைத்திறன் மிக்க ஆட்சி இலகுவானது.
11. விரைவில் முடிவெடுத்தல் கடினம்	விரைவாக முடிவெடுத்தல் இலகுவானது.
12. சட்டத்துறை நிர்வாகப் பணியையும் மேற்கொள்ள இருப்பதால் நிர்வாகத்துறையில் கூடிய கவனம் செலுத்துவது கடினம்	நிர்வாகத்துறைக்குச் சட்டத்துறை பணிகளை மேற்கொள்ள வேண்டிய நிலை நிர்வாகத் துறையில் இல்லாததால், கூடிய கவனம் செலுத்தல் இலகு.
13. கட்சி அரசியலில் நின்று செயற்பட வேண்டியிருப்பதால் திறமையான அமைச்சர் களைச் சேர்த்தல் கடினம்.	கட்சி அரசியலில் நின்று செயற்பட வேண்டிய தேவை இல்லாததால் திறமையுடையவர்களை அமைச்சர்களாக்கும் வாய்ப்புண்டு
14. அமைச்சரவைச் சர்வாதிகாரம் காணப்படும்	தனிநபர் சர்வாதிகாரம் காணப்படும்
15. ஜனநாயகத் தன்மை அதிகமாக இருக்கும்.	ஜனநாயகத் தன்மை குறைவாக இருக்கும்.
16. நிர்வாகத்துறைத் தலைவர் தமக்குத் தேவையா சட்டங்களை நேரடியாகப் பாராளுமன்றத்தில் கொண்டுவர முடியும்	நிர்வாகத்துறைத் தலைவர் தமக்குத் தேவையான சட்டங்களை நேரடியாக பாராளுமன்றத்திற்குக் கொண்டுவர முடியாது.
17. நிர்வாகத்துறை பலவீனமாக இருந்தால் பதவிநீக்க முடியும்	நிர்வாகத்துறை பலவீனமானால் பதவி நீக்க முடியும்.

ஒற்றையாட்சி அரசாங்கம்	சமஷ்டியாட்சி அரசாங்கம்
• ஒன்றாக இணைந்த நிறுவனங்களைக் கொண்ட ஓர் அரசாங்கம் மட்டும் நிலவுதல். • அரசியல் வேறுபடுத்தல் என்பது அரசாங்கத்தில் இருந்து பிரிக்கமுடியாத ஒரு பகுதியாக இருத்தல். • மத்திய அரசாங்கம் என்பது அரசியல் வேறுபாடுகளில் நிர்மாணியாக இருத்தலும் பிரதேச அரசுகள் அதன் கீழ்ப்பட்ட அலகுகளாக இருத்தலும் • பிரதேச அல்லது மாகாண அலகுகள் மீது தான் விரும்புகின்றவாறு கட்டளைகளைப் பிறப்பிக்கக் கூடியதாக இருப்பதோடு அவற்றின் அதிகாரங்களை கூட்டவும் குறைக்கவும் அவற்றைக் கலைக்கவும் புதிய அலகுகளைத் தாபிக்கவும் மத்திய அரசாங்கத்திற்கு அதிகாரம் உண்டு. • மத்தியிலுள்ள நிறைவேற்றுத்துறை, சட்டத்துறை, நீதித்துறை அதிகாரங்கள் தனி முதன்மையானவையாக இருத்தல். • அரசாங்கமானது அதிகளவு மத்திய பயப்பட்டிருப்பதோடு சகல தீர்மானங்களும் மத்தியினாலேயே மேற்கொள்ளப்படும். • ஐக்கியத்தை பாதுகாக்க முடிதல். • பொதுவாக சிறிய அரசுகளுக்கு அதிகம் பொருந்தும். • சமஷ்டி முறையோடு ஒப்பிடும் போது அரசாங்கத்தின் செலவுகள் கீழ் மட்டத்தில் இருக்கும். • மத்திய அரசாங்கத்தின் உயர் தன்மையினால் பிரதேச அலகுகளோடு ஏற்படும் மோதல்கள் குறைவாக இருக்கும். • அரசாங்கப் பொறிமுறை எளிமையாகவும் நெகிழ்ச்சியானதாகவும் இருக்கும். • உறுதித்தன்மை, தேசிய ஒற்றுமை என்பவற்றை பேணுவதற்குப் பொருந்தமானதாகும். • மத்தியின் பணிகள் அதிகளவு காணப்படுவதனால் சில பிரதேச அலகுகள் கவனத்தில் எடுக்கப்படாமலிருப்பதற்கான வாய்ப்பு உண்டு • பிரதேச அமைப்புக்கள் அதைரியப்படுத்தப்படுவதுடன் பிரதேச மக்களின் நலன்களும் எதிர்பார்க்கைகளும்	• இரு வகையான அரசாங்கங்கள் நிலவுவதோடு அதிகாரங்கள் மத்திக்கும் மாநிலங்களுக்கும் இடையில் பிரிக்கப்பட்டிருத்தல். • முாநில அரசுகள் தமக்குரிய கடமைகளை பூரண அதிகாரத்துடன் அனுபவிக்கின்றன. • மத்திய அரசாங்கத்தினதும் மாகாண அரசாங்கங்களினதும் இயல்பும் இருப்பும் அரசியல் யாப்பின் மூலம் தீர்மானிக்கப்படுகின்றன. • மத்திய அரசாங்கமானது மாகாண அரசாங்கங்களுடன் யாப்பின் ஏற்பாடுகளுக்கு அமைவாகவே பரிமாற்றங்களை மேற்கொள்ள வேண்டும். • சகல அதிகாரங்களும் மத்திய அரசுக்கும் உரித்தாகாததோடு சகல மாநில அரசாங்கங்களினதும் சட்டத்துறை, நிறைவேற்றுத்துறை, நீதித்துறை ஆகிய நிறுவனங்களும் காணப்படும். • யாப்பு புறவமைப்பினுள் பன்முகப்படுத்தப்பட்டுள்ள அதிகாரங்களைச் சுதந்திரமான முறையில் மாநிலங்களால் அனுபவிக்க முடியும். • வேறுபாடுகளுக்கும் ஐக்கியத்திற்கு மிடையிலான தொடர்பு வெளிப்படும். • ஓப்பீட்டு ரீதியாக பாரிய சனத்தொகையும் நிலப்பரப்பையும் கொண்ட நாடுக்களுக்கு அதிகம் பொருந்தும். • இருமட்ட அரசாங்கங்கள் நிலவுவதால் அரசாங்கத்தின் செலவுகள் உயர் மட்டத்தில் காணப்படும். • மத்திய அரசாங்கத்திற்கும் மாகாண அரசாங்கங்களுக்கும் இடையிலும் மாகாண அரசாங்கங்களுக்கும் மத்தியிலும் ஏற்படும் மோதல்களைத் தீர்ப்பதில் உயர் நீதிமன்றம் பணியாற்றும். • அரசாங்கத்தின் பொறிமுறையானது சிக்கலானதாகவும் நெகிழ்ச்சியற்றுதாகவும் இருக்கும். • உறுதிப்பாட்டையும் தேசிய சகவாழ்வையும் எளிதாக அடைய முடியும். • பன்முகப்படுத்தலின் மூலம் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படுவதனால் மத்திய

கீழ்ப்படுத்தப்படுவதற்கான வாய்ப்பு காணப்படும் • சர்வ அதிகாரத்துவ ஆட்சி தோற்றுவதற்கான வாய்ப்பு உயர்மட்டத்தில் காணப்படும்.	அரசாங்கத்தின் வகிபங்கு ஒப்பீட்டு ரீதியாக வரையறுக்கப்பட்டிருக்கும். • பிரதேச ஆரம்பிப்புக்கள் ஊக்குவிக்கப்படும். • மத்திய அரசாங்கமும் மாநில அரசாங்கங்களும் யாப்பின் மூலக்கொள்கையின் மூலம் கட்டிவைக்கப்பட்டிருப்பதனால் சர்வ அதிகாரத்துவம் விருத்தி அடைவதற்கான வாய்ப்பு குறைவாகக் காணப்படும்.

சமஷ்டியாட்சி நாடுகள்	மாநிலங்கள்	சமஷ்டி நாடுகள்	இணைந்த மாநிலங்கள்
ஆர்ஜென்டினா	23	மெக்சிக்கோ	31
அவுஸ்திரேலியா	06	நைஜீரியா	36
ஆஸ்திரியா	09	பாகிஸ்தான்	04
பிரேசில்	26	சுவிர்சர்லாந்து	26
ஜேர்மன்	16	வெனிசூலா	23
மலேசியா	13	தென்ஆபிரிக்கா	09

ஒற்றையாட்சி நாடுகள்	சட்டத்துறை	சபைகளின் எண்ணிக்கை	சபைகள்
இலங்கை	பாராளுமன்றம்	ஒன்று	பாராளுமன்றம் மட்டும்
பிரித்தானியா	பாராளுமன்றம்	இரண்டு	பொது மக்கள் சபை
			பிரபுக்கள் சபை
பிரான்ஸ்	பாராளுமன்றம்	இரண்டு	தேசிய பேரவை
			செனட் சபை
யப்பான்	டயட்	இரண்டு	பிரதிநிதிகள் சபை
			ஆலோசனை சபை
இத்தாலி	பாராளுமன்றம்	இரண்டு	பிரதிநிதிகள் சபை
			செனட் சபை

சமஸ்டியும் கூட்டு சமஸ்டியும்

சமஷ்டி	கூட்டு சமஷ்டி
• சமஷ்டியில் இறைமையுடைய புதிய அரசு தோற்றம் பெறுகின்றது. • சமஷ்டி யாப்பினை அடிப்படையாக கொண்டதாகும். • சமஷ்டியின் ஒவ்வொரு பிரஜையும் • சமஷ்டியிலிருந்து விலகுவது சட்ட ரீதியற்றதாகும். • சமஷ்டி தனியான சமஷ்டி சட்டங்களைக் கொண்டுள்ளது.	• கூட்டுமுறை சமஷ்டியில் இறைமை பெற்ற புதிய அரசு தோற்றம் பெறுவதில்லை. • கூட்டு முறை சமஷ்டி உடன்படிக்கையினை அடிப்படையாகக் கொண்டதாகும். • கூட்டுமுறைச்சமஷ்டியில் எந்தவொரு பிரசையும் நேசக்குழுவின் அங்கத்தவர் அல்ல. • கூட்டுமுறைச் சமஷ்டியிலிருந்து விலகுவது சட்ட ரீதியானதாகும்.

• சமஷ்டி உறுதியானதொரு அரசாங்க முறை • சமஷ்டியின் நோக்கம் விரிவானது.	• கூட்டுமுறைச் சமஷ்டி பலவீனமான அரசாங்க முறை • ஆனால் கூட்டுமுறைச் சமஷ்டியின் நோக்கம் வரையறுக்கப்பட்டது.

அரசியல் கருத்தியல்கள்

அரசியல் கருத்தியல் பற்றிய அறிமுகம்

அரசியல் பாடப்பரப்பில் ஆராயப்படுகின்ற பல்வேறு எண்ணக்கருக்களுள் முதன்மை வாய்ந்ததாக கருத்தியல்கள் காணப்படுகின்றன. நவீன அரசியல் விஞ்ஞானத்தின் கட்டமைப்புக்களான அரசியல் மெய்யியல், அரசியல் சிந்தனை, அரசியல் கோட்பாடு போலவே அரசியல் கருத்தியல் முக்கிய இடம் பெறுகின்ற போதிலும் அவற்றிலிருந்து வேறபட்டதாக ஆராயப்படுகின்றது. மனதில் தோன்றுகின்ற எல்லா விதமான எண்ணங்களுள் தெரிவு செய்யப்பட்ட சில எண்ணங்கள் கருத்தாக வெளியிடப்பட்டு சமூகத்திற்கு பொதுவான கருத்தாக காணப்படுகின்ற போது அது பற்றிய கருத்துக்களை பல அறிஞர்கள் முன்வைப்பார்களாயின் அது கருத்தியல் என அழைக்கப்படுகின்றது. கருத்தியல் எனும் பதத்தினை 1796ல் **டிரேசி (Tracy)** என்பவரே முதன் முதலில் பயன்படுத்தியவராவார். **The Elements of Ideology** எனும் **Volume** யினூடாக கருத்தியல் பற்றிய கருத்துக்களை முன்வைத்தார்.

ஆரசியல் கருத்தியல் பற்றிய ஆய்வினை மேற்கொண்ட **Andrew Hewood** தனது **An Introduction to Political Ideology** எனும் நூலில் அரசியல் கருத்தியல் என்பது அரசியல் நம்பிக்கை, ஆளும் வர்க்கத்தின் சிந்தனைகளை மையப்படுத்தியது என குறிப்பிடுகின்றார். பொதுவாக அரசியல் கருத்தியல் என்பது மக்கள் அரசியல் ரீதியாக எவ்வாறு வாழ வேண்டும் என்பது தொடர்பான கருத்துக்களின் தொகுதியும், அந்தக் கருத்துக்களை நிறைவு செய்வதற்கான செயற்பாட்டு திட்டமாகும். அரசியல் கருத்துக்களின் விஞ்ஞானம் அரசியல் கருத்தியலாக நோக்கப்படுகின்றது.

01. சமூக ஜனநாயக வாதம்

சமூக ஜனநாயக வாதம் 19ம் நூற்றாண்டின் இறுதி அரைப் பகுதியில் ஆரம்பமாகி தற்காலத்தில் மிகவும் பிரபல்யம் வாய்ந்த ஒரு அரசியல் கருத்தியலாகும். இவ் அரசியல் கருத்தில் தோற்றம் பெற அடிப்படையாக அமைந்து 1860களில் ஜேர்மனியில் தொழிலாளர் இயக்கத்தை அடிப்படையாகக் கொண்டு தோற்றம் பெற்ற ஜேர்மனிய சமூக ஜனநாயக கட்சியாகும். இக்கருத்தியலின் முன்னோடி ஜேர்மன் சமூக ஜனநாயக கட்சியின் தலைவர் எட்வர்ட் பேன்ஸ்டைன் ஆவார் 20ம் நூற்றாண்டின் ஆரம்ப தசாப்தங்களில் ஐரோப்பிய நாடுகளில் தொழிலாளர் வகுப்பினரை அடிப்படையாகக் கொண்டு ஒழுங்கமைந்த தொழிற்சங்கங்களின் ஊடாக சமூக ஜனநாயக தோற்றம் பெற்றது. சமூக ஜனநாயக இயக்கங்களில் புதிய மறுமலர்ச்சியை 2ம் உலக மகா யுத்தத்தின் பின்னர் ஜேர்மன் மற்றும் ஸ்கென்டினோவிய நாடுகளில் காணக்கிடைத்தது.

பொதுவாக சமூக ஜனநாயக வாதம் என்பது தாராண்மை வாதம், மாக்ஷிய வாதம் ஆகிய கருத்தியல்களை முழுமையாக ஏற்றுக்கொள்ளாது அக் கருத்தியல்களில் இக் கருத்தியலை முதலாளித்துவம், மாக்ஷிஸத்தினதும் கலப்பொன்றாகும் என அழைக்கப்படுகின்றது.

இக்கருத்தியலின் முன்னோடியான எட்வர்ட் பேன்ஸ்டைன் ஆரம்பத்தில் மாக்ஷிஸவாதியாக காணப்பட்ட போதிலும் தொழிலாளர்களின் கட்டாய புரட்சியை ஏற்றுக்கொள்ளவில்லை. மாறாக தொழிலாளர்களின் நலன்களை சமவுடமை வாதத்தின் மூலம் அடைந்து கொள்ள வேண்டுமாயின் அரசின் நலன்புரி சேவை அவசியம் என வாதிட்டார். இப்பின்னணியை அடிப்படையாக வைத்தே சமூக ஜனநாயக வாத கருத்திலை முன்னவைத்தார்.

1850ம் ஆண்டு ஜேர்மனியில் இவர் பிறந்தார். இவர் ஜேர்மனிய ஜனநாயக் கட்சியின் தலைவராகச் செயற்பட்ட அதேவேளை தனது கருத்துக்களின் மூலம் கார்ள் மாக்ஸுடன் மோதினார். இவர் கார்ள் மாக்ஸ் குறிப்பிட்ட சில கருத்துக்கள் பிழையானவை எனக் கூறி அவற்றை திருத்தி அமைக்க முயன்றார். சமூக ஜனநாயக மயமாக்கத்தினை ஏற்படுத்த முயல வேண்டும் எனக் கூறினார். பூட்டாளி வர்க்க சர்வாதிகாரம் பற்றிய கருத்தையும் நிராகரிக்கின்றார். இவர் தொழிலாளர்களுக்கு ஒரு நாடு இல்லை என்ற கார்ள் மாக்ஸின் கருத்தினை நிராகரித்தார் 1932ம் ஆண்டு இறந்தார்.

சமூக ஜனநாயக வாதத்திற்கு எடுத்துக் காட்டான நாடுகள் இலங்கை, இந்தியா, பங்களாதேசம், தன்சானியா, கானா போன்ற நாடுகளை குறிப்பிடலாம்.

அரசியல் கருத்தியல் என்ற வகையில் சமூக ஜனநாயகத்தின் அடிப்படை அம்சங்களாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

01. முதலாளித்துவ பொருளாதார முறைமையினால் உருவாக்கப்பட்ட வறுமை, அநீதிகளுக்கு முதலாளித்துவ முறையில் தீர்வு இன்மையால் அதனை நிராகரித்தல்.

02. முதலாளித்துவத்திற்கு மாற்றீடாக உருவாக்கப்பட்ட சமவுடமை வாதம் முதலாளித்துவ முறையில் காணப்பட்ட பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கியிருப்பினும் புரட்சியின் மூலம் அதனை உருவாக்குதல் நடைமுறைக்கு அப்பாற்பட்டது.

03. முதலாளித்துவத்தை சமவுடமை வாத அடிப்படைகளுக்கு ஏற்ப மறுசீரமைப்பு செய்யும் போது கொள்கை ரீதியான மாற்றங்களின் அடிப்படையில் சமூக ஜனநாயக வாதம் முன்வைக்கும் சிந்தனைகள் பின்வருமாறு

- **பொருளாதார துறையின் அரச தலையீடு:**

  சந்தைப் பொருளாதார நடவடிக்கைகளில் அரச தலையிடக் கூடாது எனும் தாராண்மைவாத முதலாளித்துவ அடிப்படையில் வேறுபடுகின்றது. பொருளாதார போக்கினை நிருவகித்தல் மற்றும் வழி நடாத்தக்கூடியதாக அரச தலையீடு அவசியம் என குறிப்பிடப்படுகின்றது. இதனால் தனியார் துறையின் செல்வாக்கு நீக்கப்பட்டு வறுமை, சமூக அநீதி என்பவற்றுக்கு தீர்வு காணக் கூடியதாக உள்ளது.

- **கலப்புப் பொருளாதாரம்:**

  பொருளாதார செயற்பாடுகளில் முதலாளித்துவ மற்றும் சமவுடமைவாத பொருளாதார அடிப்படைப் பண்புகள், கொள்கைகள் இரண்டையும் ஒன்றிணைத்தே கொண்டு செல்லப்படும் பொருளாதார முறையாகும். பொருளாதார முறையில் சுதந்திரமாக தனியார் துறையினர் ஈடுபடும் அதேவேளை பொருட்களின் விலை நிர்ணயத்தை அரசின் மத்திய திட்டமிடல் குழு மேற்கொள்கைக் கூடியதாக இருக்கும். சீனாவின் துரித பொருளாதார வளர்ச்சிக்கு கலப்பு பொருளாதாரம் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

- **சமூக நலன்புரி, காப்புறுதி பணிகளில் அரசு ஈடுபடல்:**

  முதலாளித்துவ தாராண்மை வாத பொருளாதார முறைமையில் தனியார் துறையினர் இலாப நோக்கின் அடிப்படையில் செயற்படுவதனால் அங்கு சமூக நலன்புரிச் சேவைகள் இடம் பெறுவதில்லை. அதனை சமூக ஜனநாயக வாதம் முழுமையாக நிராகரிப்பதோடு சுதந்திர சந்தையானது அசமநிலை ஏற்படுத்துவதால் அதற்கான தீர்வாக பொருளாதார மற்றும் சமூகத்துறைகளில் அரசினர் நேரடித் தலையீட்டுடன் சமூக நலன்புரி சேவைகளை முன்மொழிந்தது.

- **செல்வம் மற்றும் வருமானங்களை சமூகத்திற்கு மீள பகிர்ந்தளித்தல்**

  முதலாளித்துவ முறைமையில் வருமானம் மற்றும் செல்வங்கள் அனைத்தும் ஒரு பிரிவினராகிய தனியார் துறையிடம் மாத்திரம் குவிவதை அவதானிக்கலாம். இதனால் சமூகத்தில் வருமான சமமின்மை, ஏற்றத்தாழ்வு ஆகிய பாரிய சமூகப் பிரச்சினைகளை தோற்றவித்தது. இதற்கு மாற்றமாக சமூக ஜனநாயக வாதம் செல்வந்தர்களாகிய தனியார் துறையிடம் காணப்படும் வருமானம் ஏனையவர்களுக்கு பகிர்ந்தளிக்கும் வகையில் வருமான வரிகளை அறவிட்டு அதனை சமூக நலன்புரி செயற்பாடுகளுக்கு செலவளித்தல்.

- **கூட்டு பேரம் பேசுதல்:**

  சமூக ஜனநாயக இயக்கம் பிரதானமாக தொழிலாளர் வகுப்பினரின் நலநன அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட கருத்தியலாகும். எனவே, தொழிலாளர்களின் சம்பளம், மற்றும் வாழ்க்கைத் தரத்தை பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டு அரசாங்க பிரதிநிதிகளுடன் விலை நிர்ணயம், சம்பளம் தொடர்பில் கூட்டு ஒப்பந்தங்களை ஏற்படுத்திக் கொள்ளுவது பிரதான பண்பாகும்.
  இதைத்தவிர சொத்துரிமை, அரசுக்கும் தனியார்களுக்கும் இருத்தல், மக்களின் அடிப்படை உரிமை மட்டுப்படுத்தப்பட்டிருத்தல், மக்களுக்கும் பிரதிநிதிகளுக்கும் இடையில் நெருக்கமான தொடர்பு காணப்படல், தனியார் துறை கவனம் செலுத்தாத அல்லது குறைவாக கவனம் செலுத்தும் துறைகளில் அரசு கவனம் செலுத்தல்.

(உ – ம்) **இலங்கையில்:**

புகையிரத சேவை, துறைமுக கப்பல் சேவை, பொதுப் பாதுகாப்பு

இந்தியாவில்:

புகையிரத சேவை, கப்பல் சேவை, துறைமுக சேவை, புகையிரத சேவை என்பன அடங்கும்.

தன்சானியாவில்:

புகையிரத சேவை, கல்விச் சேவை என்பவனவாகும்.

சமூக ஜனநாயக வாதம் தற்போது தோல்வியடைந்து வருவதற்கான காரணங்கள்

1. 1990களில் சோவியத் யூனியனின் சோஷலிச் முறைமையில் ஏற்பட்ட விழ்ச்சி.
2. ஊலக மயமாக்கத்தின் தோற்றம்.

3. நலன்புரி அரசின் பொருளாதார முகாமைத்துவத்தில் அரசிற்கு ஏற்பட்ட தோல்வி.
4. நலன்புரி அரசு என்ற கொள்கையில் உற்பத்தி, பங்கீடு, சமூக நலன் செயற்பாடுகளில் அரசு ஈடுபாடு காட்டியமை.
5. அரசு பொருளாதார முதலீட்டாளராகவும், சமூக சேவையாளராகவும் செயற்பட்டது. இதற்காக திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், அதிகார சபைகள் போனறவற்றை உருவாக்கிச் செயற்படுத்த வேண்டியிருந்தமை.
6. நிறுவனங்களின் உழைப்பு, மோசடி, வீண் விரயம், செயற்றிறனின்மை போன்ற குறைபாடுகள் ஏற்பட்டமை.
7. நலன்புரி அரச உள்நாடுகளில் பற்றாக்குறையான வரவு செலவுத் திட்ட ஏற்பாட்டால் பணவீக்கம் அதிகரிக்கப்பட்டமை. மக்கள் மீது அதிகரித்த வரிச் சுமைகள் விதிக்கப்பட்டமை, அரசியல் நெருக்கடி ஏற்பட்டமை போன்ற செயற்பாடுகள் ஏற்பட்டது.

02. மதச் சார்பின்மை வாதம் (Secularism)

அரசியல் கருத்தியல்களில் காலத்தால் பிந்திய மற்றும் சமகால அரசியலில் பேசுபொருளாக காணப்படுவது மதச் சார்பின்மை வாதமாகும். மதச் சார்பின்மை வாதம் என்பது அரசியல் சமயம் தொடர்புபடமல் வேறுபடுத்துவதை குறிப்பிடுகின்றது. அதாவது, அரச நிறுவனங்களில் சமயத்தின் அமுத்தம் மற்றும் சமய செயற்பாடுகளில் அரச நிறுவனங்களின் அமுத்தம் ஏற்படாமல் இரண்டும் ஒன்றுக்கொன்று வேறுபட்ட மற்றும் சுயாதீனமான இரண்டு துறைகளாக கருதப்படுதல் வேண்டும் என்பதே இக் கருத்தியலாகும்.

சமயம் அரசியலுக்குப் பிரவேசித்தல், அரசியல் நடத்தைகளுக்காக சமயத்தை ஊடகமாக பயன்படுத்துவதால் பல்லின, மத , மொழி, கலாசாரங்களை பின்பற்றி மக்கள் வாழுகின்ற ஒரு நாட்டில் சமய மோதல்கள் இடம்பெறுவதைக் காணலாம் எனவே அச் சமய மோதல்கள் இடம் பெறமால் தடுப்பதை நோக்கமாகக் கொண்டு உருவாக்கப்பட்டதே மதச் சார்பின்மை வாதமாகும். மதச் சார்பின்மை எனும் பதம் ஆங்கிலத்தில் Secularism என அழைக்கப்படும். இப்பதம் இலத்தின் மொழிச் சொல்லான Seculum எனும் சொல்லிலிருந்தே தோற்றம் பெற்றதாகும். இதனை முதன் முதலில் பயன்படுத்தியவர் **ஜோர்ஜ் ஜாகப் ஹொலிடெக்** ஆவார்.

மதச் சார்பின்மை வாதம் 18 – 19ம் நூற்றாண்டுகளில் தோற்றம் பெற்ற கருத்தியலாகும். இக் காலகட்டத்தில் ஐரோப்பாவில் வாழ்ந்த ஐரோப்பிய அரசியல் ஞானிகளின் சிந்தனையின் ஒரு பகுதியே இக்கருத்தியலாகும். பழைமை தாராண்மை வாதம், சமவுடைமை வாத சிந்தனையுடன் தொடர்புடையதாகும். மத்திய காலத்தின் இறுதி காலத்தில் பிரதான அங்கமாக அரச மற்றும் திருச்சபைகளுக்கிடையில் காணப்பட்ட தொடர்புக்கு எதிராக வளர்ச்சிடைந்த கருத்தியலாகும். அதாவது, அரசானது தெய்வீக உரிமைக் கோட்பாட்டின் செல்வாக்குக்கு உட்பட்டு சமயத்தின் பெயரால் ஆட்சி இடம் பெற்றமை. போப்பாண்டவரும் திருச்சயையும் அரசின் முக்கிய தீர்மானங்களை மேற்கொள்பவர்களாக காணப்பட்டமை. மக்களை மூட நம்பிக்கையின் பிரகாரம் கட்டியெழுப்பியமை ஆகிய காரணிகளுக்கு எதிராக தோற்றம் பெற்றமை மதச் சார்பின்மை வாதமாகும்.

மதச் சார்பின்மை வாதம் தோற்றம் பெறுவதற்கான மற்றுமொரு காரணி ஐரோப்பிய மறுமலர்ச்சி ஆகும். இதன் மூலம் மக்களை பகுத்தறிவு ரீதியாக சிந்திக்க தூண்டியமையால் மக்கள் மூடநம்பிக்கையிலிருந்து விடுபடக் கூடியவர்களாக மாறியதுடன் சமயத்தின் செல்வாக்கை பலமாக எதிர்க்க ஆரம்பித்தனர்.

மறுமலர்ச்சிக் காலத்தில் தோற்றம் பெற்ற மதச்சார்பின்மை வாதம் பழைமை தாராண்மை வாதம் மற்றும் சமவுடைமை வாத சிந்தனையின் வெளிப்பாடாகும். அதாவது, தாராண்மை வாதம் சார்பின்மை வாதத்தில் தனியார் சுதந்திரம், சிந்தனை மாற்றம் மனச்சாட்சியை பின்பற்றும் சுதந்திரம் ஆகிய மூல தத்துவங்களை குறிப்பதுடன் சமவுடைமை வாதம் சமூக அழுத்தத்தின் நிறுவனமாக சமய ஆதிக்கத்துக்கு எதிராக புரட்சி செய்வதை குறிப்பிடுகின்றது.

8. தாராண்மை வாத மதச் சார்பின்மையின் அடிப்படைகள்.

01. அரசு மற்றும் திருச்சபை ஆகியவற்றை நிறுவன ரீதியாக வேறுபடுத்தல்.

02. அரசு சமயத்துடன் தொடர்புபடக்கூடாது அத்துடன் சமய கற்கைக்கும் பிரசாரத்துக்கும் அரசு தொடர்புபடக்கூடாது.

03அரசு எந்தவொரு சமயத்திற்கும் பக்க சார்பாக இருக்கக் கூடாது. சுமயம் மனிதர்களின் தனிப்பட்ட விடயமாக இருப்பதோடு அதனை அரசியலுக்கு கொண்டு வருதல் கூடாது.

04. சமயத்துக்கும் பிரஜைகளின் அடிப்படை உரிமைகளில் ஒன்று என்பதோடு சமயத்தின் பெயரால் எந்தவொரு பிரசைக்கும் பாகுபாடு காட்டக்கூடாது.

சமவுடைமை வாத மதச் சார்பின்மையின் அடிப்படைகள்

01. சமவுடைமை வாத அரசு முழுமையாக சமயத்திலிருந்து வேறுபடுத்தப்படல் வேண்டும். அரசின் அனுமதியுடனேயே மதம் செயற்படுதல் வேண்டும்.

02. சமவுடைமை வாத முறைமையினுள் சமயம் சார், அரசியல் சார் நிறுவனங்களுக்கு இருப்பு கிடையாது.

03. அரசின் தீவிர மேற்பார்வையின் கீழ் சமவுடைமைவாத அரசில் சமய நிறுவனங்கள் செயற்பட முடியும்.

04. சமய அடையாளத்துடன் அரசியல் மற்றும் சிவில் சமூக இயக்கங்களை நிறுவ முடியாது.

மதச் சார்பின்மை வாத அனுகூலங்கள்

1. அரச நிறுவனங்களில் சமய ரீதியான பாகுபாடு காணப்படாமை.
2. மதச் சுதந்திரம் காணப்படுதல்.
3. பொதுச் சேவைகளை நுகர்வதில் பாகுபாடு காணப்படாமை.
4. அரசியல், கல்வி, சட்டம் மற்றும் ஒழுங்கில் பாரபட்சம் காணப்படாமை.
5. சமய வழிபாடுகளில் ஈடுபட பூரண சுதந்திரம் காணப்படாமை.
6. மக்கள் மத்தியில் தேசப்பற்று உணர்வை விருத்தி செய்தல்.
7. பல்லின மக்களையும் சமமாக மதித்தல்.
8. இன, மத வன்முறை ஏற்படுவதை தடுத்தல்.

03. பாசிச வாதம்

பாசிச வாத அரசியல் கருத்தியல் 20ம் நூற்றாண்டின் முதல் அரைப் பகுதியில் தோற்றம் பெற்றதாகும். பாசிச வாதம் அடிப்படையில் ஒரு கருத்தியலாக ஏற்றுக்கொள்ளப்படாத போதிலும் நடைமுறை ரீதியான அரசியல் நடத்தைகளை கொண்டிருந்ததனால் அரசியல் கருத்தியலாக ஆராயப்படுகின்றது. இது 1ம் மற்றும் 2ம் உலக மகா யுத்தங்களுக்கு இடைப்பட்ட காலத்தில் ஓர் தத்துவமாகவும், அரசியல் இயக்கமாகவும் ஐரோப்பாவில் தோற்றம் பெற்றது. பாசிசம் என்ற சொல் பாஸஸ் எனும் இலத்தீன் மொழிச் சொல்லிலிருந்து தோற்றம் பெற்றதாகும். பாசிசவாதமானது இத்தாலி நாட்டின் பெனிட்டோ முசோலினி தலைமைத்துவத்தில் தோற்றம் பெற்ற சர்வாதிகார இயக்கத்தை குறிப்பிட பயன்படுத்தப்பட்டதாகும்.

பின்னணி **பெனிற்றோ முசோலினி (1833 – 1945)**

ஐரோப்பிய நாடுகளில் காணப்பட்ட அரசியல், சமூக மற்றும் பொருளாதார நெருக்கடிகளால் ஏற்பட்ட இடைவெளி ஒரு புதிய கருத்தியலுக்கான அவசியத்தை உணர்த்தியது. இப் பின்னணியில் இத்தாலி, ஜேர்மினியில் பாசிச வாதமானது முதலாளித்துவ, தாராண்மை ஜனநாயக, சமவுடமை வாத மற்றும் கொமியுனிச வாதங்களுக்கு எதிராக தோற்றம் பெற்றதாகும். மேலும் முதலாம் உலக மகா யுத்தத்தின் தோல்வியை அடிப்படையாகக் கொண்டு இத்தாலி, ஜேர்மனியில் தோற்றம் பெற்ற பாரிய அரசியல் நெருக்கடி 1920களில் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சி, சமூக வீழ்ச்சி என்பன பாசிச வாதம், நாசிச வாதம் ஆகிய கருத்தியல்கள் தோற்றம் பெறுவதற்கான பின்னணியாக அமைந்துள்ளன.

1833ல் பிறந்த பெனிட்டோ முசோலினி தனது ஆரம்பக்கல்வியை முடித்து விட்டு 19ம் வயதில் மேல் படிப்புக்காக சுவிட்ஸர்லாந்து சென்றார். அங்கு பல பத்திரிகைகளில் சமதர்மக் கருத்துக்களைக் கொண்டு கட்டுரைகள் எழுதினார். பின்னர் லாசேனில் நல்ல சிந்தனையாளர் மார்க்ஸ் சோபன் ஹோர். நீட்சே, கிராபட்சின், லாசேல் ஆகிய அரசியல் தத்துவஞானிகளின் தத்துவங்களைப் படித்தார். ஆரசாட்சி, பாதிரியர்கள், வங்கியாளர்கள் ஆகியோரைக் கண்டித்து கட்டுரை எழுதினார்.

1914ல் மீண்டும் இத்தாலி வந்போது பல போராட்டங்களில் ஈடுபட்டார். இல்பேப்பலோடி அத்தாலி (ill Popolodeitatalia) என்ற பத்திரிகையின் ஆசிரியர் ஆனார். முதல் உலகப் போரில் ஒரு படை வீரராகச் சேர்ந்து பணியாற்றினார். அதன் பின் அவர் பாசிசக் கோட்பாடுகளைப் பின்பற்ற ஆரம்பித்தார்.

இத்தாலிய மொழியில் பாசியோ (Fasio) எள்றால் குழுவைச் (Group) குறிக்கும் . 1919 அக்டோபர் மாதம் முசோலினி மிலானில் முதல் பாசிசக் குழுவை அமைத்தார். இந்த அமைப்பு முதலில் நகரங்களில் பரவி பின் கிராமங்களில் ஊடுருவியது. இந்த பாசிச அமைப்பில் இளைஞர்கள் அதிகமாகச் சேர்ந்தனர். பாசிச இயக்க உறுப்பினர்கள் கருஞ்சட்டை அணிந்தனர். 1919ல் முதல் பாசிச மாநாடு நடைபெற்றது. முசோலினியின் பாசிசக் கட்சி 1922ல் ஆட்சியைக் கைப்பற்றியது. பின்னர் முசோலினி சர்வாதிகாரி ஆனான் ஆவர் 1936 இல் பாசிச கோட்பாடுகளை வெளியிட்டார். 1945ம் ஆண்டு இறந்தார்.

பாசிசத்தின் கருத்துக்கள்

பாசிசத்தின் அடிப்படைக் கொள்கை அரசு தான் எல்லை, அரசுக்காக தான் தனிமனிதன் காணப்படுகின்றான் என்பதாகும். அதாவது, அது எவராலும் எதிர்க்கப்படமுடியாதது. ஒவ்வொன்றும் அரசுக்காகவே, அரசுக்கு எதிராக கிளர்ச்சி செய்ய முடியாது, மனித வாழ்க்கையின் எல்லா அம்சங்களையும் ஒழுங்கு செய்யவும் கட்டுப்படுத்தவும் வலிமை பெற்றது அரசு எனக் குறிப்பிடுகின்றது. மேலும் பொருளாதார விடயங்களை தீர்மானித்தல் மற்றும் கட்டுப்பாடுகளை விதிக்கும் அதிகாரம் அரசிடமே உள்ளது. அரசின் அடிப்படை வன்முறை, மக்களாட்சி ஓர் மூடத்தன்மையான, ஊழல் நிறைந்த, நடைமுறைக்கு ஒத்துவராத ஆட்சி முறை பாராளுமன்றங்கள் வெறும் பேச்சுவார்த்தை கூடங்கள் என பாசிசம் குறிப்பிடுகின்றது.

பாசிசத்தின் பண்புகள்

01. அரசியல் அணைத்தாண்மை வாதம் (Totalrianism):

சர்வாதிகார ஆட்சி முறை ஒன்றை கட்யெழுப்புவதே பாசிசவாதத்தின் பிரதான பண்பாக காணப்படுகின்றது. அதனை கட்டியெழுப்ப அனைத்தாண்மை வாதம் எனும் எண்ணக்கருவை அடையாளப்படுத்தியது. அனைத்தாண்மை என்பது அரசு அடிப்படையிலேயே சர்வாதிகாரமானதும் சர்வாதிகார ஆட்சி கட்டமைப்பின் மூலம் முழு சமூகம், அரசியல் முறைமையை தனது முழுமையன கட்டுப்பாட்டிற்கும், ஆதிக்கத்திற்கும் உட்படுத்திக் கொள்வதாகும்.

02. அரசுக்கு அடிபணிதல் (Cult of the State):

அரசின் அதிகாரத்தை முழு சமூகம், பிரஜைகள் எதுவித நிபந்தனைகள் மற்றும் கேள்விகளின்றி ஏற்றுக்கொள்வதாகும், அதன் அதிகாரத்துக்கு தனது சுய விருப்பின்படி அடிபணிவதாகும். அரசானது முழு இனம், சமூகத்தினது உயர்வு, கௌரவம் மற்றும் விதி ஆகியவற்றின் வெளிப்பாடு ஆகும். அரசுக்காகவே மக்களே அன்றி மக்களுக்காக அரசு அல்ல என்பது இதன் விளக்கமாகும்.

03. தனியார் சுதந்திரம் இல்லை

தாராண்மை வாதம் தனிநபர் சுதந்திரத்திற்கு முன்னுரிமை கொடுக்கின்றது. ஆனால் பாசிச வாதம் தனிநபர் சுதந்திரத்தை முற்றாக மறுப்பதாகும். பாசிச வாதத்தில் தனியார் சுதந்திரம் என்பது அரசு, இனம், தலைவனுக்கு நிபந்தனையின்றி காட்டும் அடிபணிவை பொறுத்தே தீர்மானிக்கப்படுகின்றது.

04. தீவிர வர்க்க/இன வாதம்:

ஜேர்மனிய நாசிச வாதத்தின் மூலம் வளர்க்கப்பட்ட இப் பண்பின் மூலம் ஜேர்மன் இனம் உலகில் உயர்நத இனம் என வெளிப்படுத்தப்படுவதாகும். ஜேர்மன் இனம் ஆசிய இனம் என்பதால் இலட்சக்கணக்கான யூதர்கள் கொல்லப்பட்டமையை குறிப்பிடலாம்.

05. தீவிர இராணுவ வாதம்:

ஜேர்மனியரே உலகின் உயர்ந்த இனம் என்பதால் முழு உலகமும் தங்களது ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவர 2ம் உலக மகா யுத்தத்தை ஆரம்பிப்பதற்கு ஜேர்மனியர்கள் முற்பட்டமை.

இவை தவிர பாசிச வாதத்தின் பணபுகளாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

06. வன்முறையும் தீவிரவாதத் தன்மையும்.

07. உலக சமாதானத்தை நிராகரித்தல்.

08. சர்வதேச சட்டம், சர்வதேச அமைப்புக்களை நிராகரித்தல்.

09. தனிக் கட்சி முறையின் கீழ் சர்வாதிகார ஆட்சி இடம்பெறல்.

10. பாராளுமன்ற ஜனநாயகத்தை எதிர்த்தல்.

பாசிசத்தின் நிறைகள்

1. சட்டம், ஒழுங்கு நிலைநாட்டப்பட்டமை.
2. பொருளாதார முன்னேற்றம் ஏற்பட்டமை.
3. இராணுவம் வலிமை பெற்றமை.
4. உலக நாடுகளின் கவனத்தை ஈர்த்தமை.
5. புதியதொரு அரசியல் கருத்தியலை அறிமுகம் செய்தமை.

6. முதலாம் உலக மகா யுத்தத்தின் பின்னர் இத்தாலியும் ஜேர்மனியும் வலிமையான நாடுகளாக மாறியமை.

7. தேசிய வாதம் வளர்வதற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தமை.

8. மக்கள் அனைவரையும் நாட்டுப் பற்றாளர்களாக்க முடிந்தமை.

9. ஒழுக்க ரீதியிலான கட்டுப்பாடு கொண்டு வர முடிந்தமை.

பாசிசத்தின் குறைகள்

01. பாசிசம் முற்போக்கு சிந்தனைக்கு எதிரானது. (மக்களாட்சி, சோசலிசம், லிபரல் வாதம்)

02. தனிமனித சுதந்திரத்தை தடை செய்தமை.

03. 2ம் உலகப் போர் உருவாக காரணியாக அமைந்தமை.

04. ஊடக சுதந்திரம் மறுக்கப்பட்டமை.

05. இனப் படுகொலைகள் இடம் பெற்றமை.

06. பாசிசம் மனிதாபிமானத்திற்கு அப்பாற்பட்ட எச்செயலையும் தனது நலனுக்காக மேற்கொள்வதற்குத் தூண்டுகின்றது.

07. தேசிய வாதத்தினை நாடுகளை ஆக்கிரமிக்கும் நோக்கங்களுக்காக பயன்படுத்தல்.

08. அமைதி சமாதானம் என்பன மனித வாழ்வில் புறக்கணிக்கப்படுதல்.

09. பாசிசம் மூடப்பட்ட பொருளாதாரத்தையே ஆதரிக்கின்றது. தற்போது இந்தப் பொருளாதாரம் பெரும்பான்மையான நாடுகளில் காணப்படுவதில்லை.

10. இடியமின் (உகண்டா), கேணல் கடாபி (லிபியா), ரொபர்ட் முகாபே (சிம்பாப்வே) போன்றவர்கள் பாசிச சிந்தனையை எடுத்து ஆட்சியமைத்ததினால் அழிவுக்கு உள்ளாகின.

11. தற்போது நவீன பாசிச வாத சிந்தனை பிரான்ஸ், ஜேர்மன், ரஷ்யா, பெல்ஜியம் போன்ற நாடுகளில் ஊடுருவி வருவதை காணக் கூடியதாக உள்ளது.

பகுதி B

04ம் வினா (20 புள்ளிக்குரியது)

04. குடியேற்ற ஆட்சியின் கீழ் இலங்கையில் ஏற்றட்ட அரசியல்,சமூக,பொருளாதார மாற்றங்களைப் பகுப்பாய்வு செய்க

அல்லது

04. 1833 கோல்புறுக் கமரன் அரசியல் திட்ட சிபார்சுகளைக் குறிப்பிட்டு அவற்றை விளக்குக

அல்லது

04. காலனித்துவ அரசாங்க முறைமையின் இயல்புகள்

04. குடியேற்ற நாட்டாட்சிக் காலத்திக் இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார, சமூக, அரசியல் விளைவுகள்

பொருளாதார விளைவுகள்

1. **நாட்டில் நிலவிய மானிய முறை பொருளாதாரம் இல்லாதொழிக்கப்பட்டமை.**
   இதன் விளைவாக நிலத்தோடு கட்டுண்டிருந்த உழைப்பு சுயாதீனமாக்கப்பட்டது. அதனோடு இணைந்த சாதி முறையும் பலவீனமடைந்தது. ஊழியமானது. சுதந்திரமாக அடையத் தொடங்கியது. சுதந்திரமான ஊழியச் சந்தை உருவாகியது. மானிய முறையிலிருந்து முதலாளித்துவத்திற்கு மாறுவதற்கான அடித்தளம் இடப்பட்டது.

2. **கட்டாய இராஜகாரிய முறை இல்லாதொழிக்கப்பட்டமை:**
   இதன் விளைவாக திறந்த சந்தை முறையையும், நிலச் சந்தையையும் சுதந்திரமான ஊழியச் சந்தையையும் உருவாக்குவதற்கு காரணமாக இருந்தமை.

3. **வர்த்தக ஏகபோக உரிமையினை நீக்கப்பட்டமை:**
   இதன் விளைவாக வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இலங்கை வந்து சுதந்திரமான முறையில் முதலீடு செய்வதற்கான கதவு திறந்து விடப்பட்டது. அத்தோடு தனியார் துறையினரும் வளர்ச்சியடைந்தனர். மேலும் ஏலம், கறுவா மற்றும் உப்பு வர்த்தகத்தில் அரசன் ஏகபோக உரிமை நீக்கப்பட்டது. இதன் மூலம் சுதந்திரமான வர்த்தக போட்டி உருவானது.

4. **தனியார் துறையினரின் முதலீடுகள் ஊக்குவிக்கப்பட்டமை:**

5. **அரச காணி விற்பனைக் கொள்கையை செயற்படுத்தியமை:**
   இதன் மூலம் உள்நாட்டினரும் வெளிநாட்டினரும் தமக்குத் தேவையான நிலத்தை விலை கொடுத்து வாங்க முடிந்தது.

6. **தரிசு நிலச் சட்டம் கொண்டு வரப்பட்டமை:**

பெருந்தோட்டப் பயிர்ச்செய்கைக்குத் தேவையான நிலத்தைத் தடையின்றிப் பெற்றுக் கொள்வதற்காக ஸ்ரூவார்ட் மக்கள்ஸி ஆளுநரால் 1840ல் தரிசு நிலச் சட்டம் கொண்டுவரப்பட்டது. இந்த சட்டத்தால் மக்கள் காணிகளையும் மந்தை மேய்க்கும் நிலத்தையும் இழந்தனர்.

7. **அரசின் நேர்வரி முறைகளை மாற்றியமைத்தமை:**

- **மீன்வரி :** மீனாக வரியைப் பெறாது மீன்பிடிப் படகுகளுக்கு அனுமதிப்பத்திரம் வழங்குவது மூலம் அறவிடல்.
- **காணிவரி :** காணியில் விளைந்த பயிர்களின் ஒரு பகுதியை வரியாகப் பெறுவதற்குப் பதிலாக பணமாக அறவிடல்.

8. சேமிப்பு வங்கியினை ஆரம்பித்தமை:

பெருந்தோட்டத் துறையில் முதலீடு செய்யும் முயற்சியாளர்கள் கடனைப் பெற்றுக் கொள்வதற்கு அமைக்கப்பட்டது.

9. அரசின் புதிய வரிக் கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டமை:

1. ஆளுநர் ரொறிங்டனால் 1848ஆம் ஆண்டில் விதிக்கப்பட்ட புதிய வரிகள் போராட்டத்திற்கு உடனடிக் காரணமாய் அமைந்தது.
2. கோப்பி விலை வீழ்ச்சியால் ஏற்பட்ட வருமானக் குறைவை ஈடுசெய்ய புதிய வரிச்சீர்திருத்தங்களை ஆளுநர் மேற்கொண்டர்.
3. முத்திரை வரி, வண்டிவரி, படகுவரி, கடைவரி, துப்பாக்கி வரி, நாய்வரி, ஆள்வரி எனப் பல வரிகள் விதிக்கப்பட்டன.

4. இவற்றுள் துப்பாக்கி, நாய், ஆள் வரிகளுக்கு கடும் எதிர்ப்பு உருவாகியது,
    - பயிர்ச் செய்கையை மிருகங்களிடமிருந்து பாதுகாக்கத் துப்பாக்கி அவசியமாகவருந்தது.
    - கிராமங்களில் ஒவ்வொரு வீட்டிலும் நாய் வளர்க்கப்பட்டது.
    - வயது வந்த ஆண்கள் அனைவரும் வருடத்தில் 6 நாட்கள் பாதைகள் வெட்டும் பணியில் ஈடுபட வேண்டும் அல்லாவிடின் 3 சிலிவ் வரியாகச் செலுத்த வேண்டி இருந்தது.இவை மிகவும் பொருத்தபாடற்ற வரியாக இருந்தது.

10. தரிசு நிலச் சட்டம், முடிக்குரிய காணிக் கட்டளைச் சட்டங்களின் மூலம் முதலில் கோப்பிப் பயிர்ச்செய்கைக்கும் இரண்டாவதாக தேயிலை, இறப்பர், தெங்கு போன்ற பயிர்ச்செய்கைக்குமான ஒரு நிலச் சந்தை அரசின் தலையீட்டோடு உருவாக்கப்பட்டதுடன் பயிர்ச்செய்கையில் கைத்தொழில் நுட்பங்களும் பயன்படுத்தப்பட்டது.

11. குடியேற்றவாத அரசு நுகர்வு, பொறிமுறையாக்கம், கீழ் கட்டமைப்புக்களை விருத்தி செய்தல் என்பவற்றின் மூலமும் பெருந்தோட்ட பயிர்ச் செய்கையை ஊக்குவித்தனர் என்னும் உள்நாட்டவர்கள் தொடர்நதும் தமக்குப் பழக்கப்பட்ட மரபுசார் விவசாயத்திலேயே ஈடுபட்டனர்.

12. நாட்டில் சுய தேவைப் பூர்த்திப் பொருளாதாரம், சந்தை முறைப் பொருளாதாரம் என்ற இரட்டை பொருளாதாரம் உருவாகியமை.

13. இலங்கை பொருட்கள் உற்பத்தியாளர் என்ற வகையில் உலக முதலாளித்துவப் பொருளாதார முறைமையுடன் இணைந்தமை.

14. அரசு பெருந்தோட்டப் பயிர்ச்செய்கைக்குத் தேவையான கீழ் கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்தமை.

(உ –ம்) : பெருந்தெருக்கள், புகையிரதப் பாதை, பூங்காக்கள், வைத்தியசாலைகள்

15. பாரிய விவசாய வர்த்தக பொருளாதாரத்தைக் கொண்ட ஒரு சந்தை உருவாகியமை.

16. இலங்கையர்களும் முதலாளித்துவ பொருளாதார முறையுடன் தொடர்புபட்ட கரைநாட்டுச் சிங்களவர்கள், மது மற்றும் கள் இறக்குதல், சிறுகடை வர்த்தக சேவை போன்ற புதிய பொருளாதார வாய்ப்புக்களைப் பயன்படுத்தி குறிப்பிடத் தக்களவு முதலை சேமித்துக் கொண்டனர்.

17. உள்ளூர் நெல், விவசாய செய்முறை வீழ்ச்சி கண்டமை.

18. உள்ளூர் கைத்தொழில்கள் வீழ்ச்சி கண்டமை.

19. பெருந்தோட்டத்துறையோடு இணைந்த துறைகளான வங்கித்துறை, போக்குவரத்துத்துறை போன்றவற்றில் முதலீடுகள் அதிகரிக்கவும் அத்துறை வளர்ச்சியடையவும் வழிவகுத்தது.

சமூக, கலாச்சார விளைவுகள்

- இராஜகாரிய முறையின் ஒழிப்பு, சுதந்திரமான ஊழியச் சந்தையை உருவாக்கியமை, குழுவாதத்துக்குப் பதிலாக தனிமனித வாதத்தை அடிப்படையாகக் கொண்ட சட்ட முறைத்தொடர்புகள் உருவாகியமை. ஆங்கிலக் கல்வி போன்ற சமூக, கலாசார மாற்றங்களுக்குக் காலாய் அமைந்தன.

1. **ஒரு பதிய சமூக வர்க்கம் தோன்றியமை:**
    - கோல்புறூக் - கமரன் குழு சிபார்சு செய்த முதலாளித்துவ பொருளாதாரக் கொள்கைகளின் விளைவாக இலங்கையில் ஒரு தேசிய முதலாளித்துவ வர்க்கம் தோற்றம் பெற்றது.
    - ஆங்கிலக் கல்வியும் சிலில் சேவையும் இதனை மேலும் பலப்படுத்தின.
2. **கூலி பெறும் ஊழியச் சமூகம் தோற்றம் பெற்றமை:**
    - இராஜகாரிய முறையின் ஒழிப்பு, பணப் புழக்கம், பொருளாதார முறையின் அறிமுகம், சுதந்திரமான ஊழியச் சந்தையின் அறிமுகம், நிலத்தோடு கட்டுண்டிருந்த ஊழியமுறை

இல்லாதொழிக்கப்பட்டமை. கூலி முறையின் அறிமுகம் போன்ற காரணங்களால் முதலாளித்துவ முறையின் பிறிதொரு அங்கமான கூலி பெறும் ஒரு தொழிலாளர் வர்க்கம் தோற்றம் பெற்றது.

3. **மானிய முறைச் சமூகம் நவீன முதலாளித்துவச் சமூகமாக மாறியமை:**
   - ஆங்கிலக் கல்வியின் அறிமுகத்தோடு இணைந்த ஏனைய சமூக, கலாசார சீர்திருத்தங்களின் விளைவாக நீண்டகாலமாக நிலை பெற்றிருந்த மானிய பண்புகள் படிப்படியாக மறைவுற்று நவீன சமூக முறை பரிணாமித்தது. இதன் விளைவாக இலங்கையில் ஒரு நவீன சிவில் சமூகம் தோன்றியது.
4. **மேலைத்தேய சமய, கலாசார நடைமுறைகளும் பழக்க வழக்கங்களும் பரவலடைந்தமை:**
   - ஆங்கில மொழி மூலமான மேலைத்தேயக் கல்வி, அரச அனுசரணை பெற்ற பாடசாலைகளில் வெளிநாட்டவர்களால் மேற்கொள்ளப்பட்டது. அப்பாடசாலைகள் மூலம் மேலைத்தேய கலாசாரம் பரவியது.
   - உயர் கல்விக்காக வெளிநாடு சென்று வந்தவர்களாலும் மேலைத்தேய கலாசாரத்தின் சில அம்சங்கள் இலங்கையில் பரவின.
   - பெருந்தோட்டத்துறை வளர்ச்சி காரணமாக அதிகளவில் ஐரோப்பியர் இலங்கை வருகை தந்தனர். அவர்களின் விடுமுறை கால விடுதிகள், இரவு களியாட்ட விடுதிகள் காரணமாகவும் மேலைத்தேய கலாசாரம் பரவியது.

* **இலங்கையின் கலாச்சாரத்துடன் கலந்து கொண்ட மேலைத்தேய கலாசார அம்சங்கள்**

- மேலைத்தேய ஆடையணிகள்
- பழக்க வழக்கங்கள்
- வாழ்த்து வணக்கம் தெரிவிக்கும் முறைகள்.
- கட்டட கலையம்சங்கள்
- உணவுபான வகைகள்

5. **மதுபானக் கடைகள் மலைநாட்டில் திறக்கப்பட்டமை:**
   - பெருந்தோட்டச் செய்கைகளுக்காக வெளிநாட்டவர் வரவு அதிகரித்தமை, மதுபானக் கடைகள் திறக்கப்பட்டமை இவற்றால் தமது கலாசாரம் சீர் குலைவதைக் கண்டி மக்கள் விரும்பவில்லை.
6. **ஒரு மூலமுன்மாதிரி சிவில் சமூகம் (Prototype Civil Society) உருவாகியமை.**
   - மேற்கத்திய கல்வி போன்ற சீர்திருத்தங்களுக்கு உட்படாத தேசிய கல்வி முறைக்குட்பட்ட ஒரு சமூகப் பிரிவினர் உருவாகியதோடு அவர்கள் மரபுசார் பண்புகளையும் நம்பிக்கைகளையும் கொண்ட ஒரு முன்மாதிரிச் சமூகத்தை ஒழுங்கமைத்துக் கொண்டனர். அதன் விளைவாகப் பிரதேச வாதம், இனம், சமயம் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்ட சமூக சமய இயக்கங்கள் தோற்றம் பெற்றன.

     (உ – ம்) : **இலங்கையர் சங்கம் - 1865**

     சமய மறுமலர்ச்சி இயக்கம்

     மது ஒழிப்பு இயக்கம்

     தாழ்நாட்டு உற்பத்தியாளர் சங்கம்

     இலங்கை தேசிய சங்கம்

     யாழ்ப்பாணச் சங்கம்

     சிலாபச் சங்கம்

     இளம் இலங்கையர் சங்கம்

     இலங்கை சீர்திருத்தம் சங்கம்

இலங்கை தேசிய காங்கிறஸ்

7. இலங்கை சமூகத்தோடு ஒரு புதிய இனச் சமூகம் இணைந்தமை:

- பெருந்தோட்ட பயிர்ச் செய்கை, வர்த்தகப் பொருளாதாரம் போன்றவற்றுக்குத் தேவையான ஊழியம் ஊள்நாட்டிலிருந்து போதியளவு கிடைக்கப் பெறாமையால் பிரித்தானியர் தென்னிந்தியாவிலிருந்து தமிழ் ஊழியர்களை இறக்குமதி செய்தனர். அவர்கள் இலங்கைச் சமூகத்தோடு ஒருங்கமையாத ஒரு பகுதியினராக இருந்தமையால் காலப்போக்கில் அது இலங்கையின் தேசிய ஒருமைப்பாட்டு பிரச்சினையை மேலும் தீவிரமாக்கியது.

8. சாதி முறை தளர்வுற்றமை:

- பெருந்தோட்டப் பயிர்ச் செய்கை மற்றும் முதலாளித்துவ வர்த்தகம் போன்ற வற்றோடு இணைந்த சேவைகளில் ஈடுபட்டனர். மரபுசார் சிங்களச் சமூக பிரபுத்துவ வகுப்பைச் சாராத அடுத்தடுத்தக் கட்ட சாதியினரே ஈடுபட்டனர். இவர்கள் பிற்பட்ட காலத்தில் செல்வத்தைச் சேகரித்துக் கொண்டு பொருளாதார ரீதியாகப் பலம் பெற்றனர். இப்பலத்தின் காரணமாக சாதி முறையிலமைந்த சமூக முறையில் அசைவுகள் ஏற்பட்டு யாப்பின் கீழ் சாதி முறை தளர்வுக்குட்படலாயிற்று.
- 1931 டொனமூர் யாப்பின்கீழ் அறிமுகம் செய்யப்பட்ட சர்வஜன வாக்குரிமை, பிரதேசவாரிப் பிரதிநிதித்துவம் போன்ற சீர்திருத்தங்களின் காரணமாக சாதாரண மக்களும் அரசியலில் ஈடுபடும் வாய்ப்பினை பெற்றதனால் சாதிமுறை மேலும் தளர்வடைந்தது.

9. தேசிய ரீதியிலான அறிவும் ஆற்றலும் மழுங்கடிக்கப்பட்டமை.

10. கிராமத்தை அடித்தளமாகக் கொண்ட சமூகத் தொடர்புகள் வீழ்ச்சி கண்டமை.

11. கிறிஸ்தவ மிஷனரி இயக்கங்கள் செயற்பட்டமை.

12. ஒரு ஜனநாயக சமூகம் உருவாகிமை:

- கோல்புரூக் சீர்திருத்தங்களின் மூலம் சமூகப் பிரிவினர்களின் அசைவுகள் ஏற்பட்டு சமத்துவவாத சமூக விழுமியங்கள் முதன்மை படுத்திய ஜனநாயக சமூகம் ஒன்று உருவாக்குவதற்குத் தேவையான பின்னணி உருவாகியமை.
- 1931 டொனமூர் சீர்திருத்தங்களான சர்வஜன வாக்குரிமை., பிரதேசவாரிப் பிரதிநிதித்துவ ஜனநாயக ஆட்சி என்பவற்றால் இது மேலும் துரிதமடைந்தது.

அரசியல் விளைவுகள்

1. கோல்புரூக் - சுமரன் சீர்திருத்தங்களின் மூலம் இலங்கையில் நிலவிய இரட்டை பரிபாலன முறை ஒழிக்கப்பட்டு, முழு நாட்டையும் ஒரு நீதி முறைக்கும். நிர்வாக முறைக்கும் உட்படுத்தி நாட்டின் நிர்வாக விவாகரங்கள் ஒரு முகப்படுத்தப்பட்டன.
2. குடியேற்றவாதச் சீர்த்திருத்தங்களின் மூலம் நாடு அரசியல் யாப்புறு ஆட்சி முறைக்குட்படுத்தப்பட்டதுடன் தேசாதிபதியின் தன்னிச்சையான ஆட்சியதிகாரங்கள் கட்டுப்படுத்தப்பட்டன.
3. கோல்புரூக் சீர்திருத்தங்கள் தனிமனித அபிலாசைகளை நிறைவேற்றிக் கொள்ளக் கூடிய ஒரு கட்டமைப்பினை நிர்மாணிக்கத் தேவையான சட்ட மற்றும் அரசியல் தளத்தை இட்டு வைத்தது. அதன் மூலம் தேசாதபதி பிரித்தானிய முடிவுக்கு பொறுப்புக் கூற வேண்டும் என்ற சித்தாந்தத்தை முன்வைப்பதற்கு முயற்சி எடுக்கப்பட்டது.
4. தேசாதிபதி தமது தற்துணிவின்படி கொண்டு நடத்திய ஆட்சி முறைக்குப் பதிலாக நிறைவேற்றுச் சபையின் அங்கீகாரத்துடன் வரவு – செலவுத் திட்டத்தைத் தயாரிக்க வேண்டும் என்ற நிபந்தனையின் மூலம் பொறுப்பாட்சிக்குட்படுத்து வதற்காக மேற்கொண்ட முயற்சியின் காரணமாக எதிர்காலத்தில் அரசியல் நிறைவேற்றுப்பகுதி உருவாகுவதற்குத் தேவையான வித்திடப்பட்டது.
5. தேசாதிபதிக்கிருந்த சட்டவாக்க அதிகாரத்தை கட்டுப்படுத்தி சட்ட நிரூபண சபையைத் தாபித்ததன் மூலம் எதிர்கால பாராளுமன்ற அரசாங்கத்துக்குத் தேவையான அடித்தளம் இடப்பட்டது. இந்த அடித்தளமே பிற்கால அரசியல் யாப்புச் சீர்திருத்தங்களுக்கு வழிவகுத்தது.
6. சட்ட நிரூபண சபை தாபிக்கப்பட்டதன் மூலம் இலங்கைக்கு முதன்முறையாகப் பிரதிநிதித்துவம் பற்றிய சித்தாந்தம் அறிமுகம் செய்யப்பட்டது.

7. சட்டவாக்கம் செய்வதற்கு சட்ட நிரூபண சபை தாபிக்கப்பட்டதுடன் தேசாதிபதி அதன் செயற்பாடுகளில் தொடர்புபடுத்தப்படவில்லை. இதன் மூலம் பொறுப்பாட்சி முறை உருவாக்கும் என எதிர்பார்க்கப்பட்டது.
8. கோல்புரூக் - கமரன் சீர்திருத்ததின் பிறிதொரு அம்சம் நீதி முறைச் சீர்திருத்தமும் நிர்வாகம் ஒரு முகப்படுத்தப்பட்டமையுமாகும். முழு நாடும் ஒரு குற்றவியல் சட்டத்திற்குட்பட்டதுடன் பிரதேச சட்டமாக இருந்த கண்டியச் சட்டம் சிவில் விவகாரங்கள் தொடர்பான தனியார் சட்டமாக மாற்றப்பட்டது.
9. 16 நிர்வாக அலகுகளாக இருந்த இலங்கை 5 ஆகக் குறைக்கப்பட்டு கச்சேரி நிர்வாக முறை அறிமுகம் செய்யப்பட்டது. இதன் மூலம் இலங்கை ஒற்றை நிர்வாகக் கட்டமைப்புக்குட்பட்டு 5 மாகாணத்திற்கும் அரச அதிபர்கள் நியமிக்கப்பட்டமை.
10. யாப்புத் திட்டத்திற்குட்பட்ட ஆட்சி முறையின் மூலம் பிரதிநிதித்துவ ஜனநாயகம் முன்னணிக்கு வந்தமை
11. கிராம சபைகள் செயலற்றுப் போனமை.
    - கிராம சபைகள் செயலிழத்தமையால் குளங்கள், அணைக்கட்டுகள், கால்வாய்கள் அமைப்பதுடன் பராமரிப்பதும் தடைப்பட்டன.
    - கட்டாய அரசசேவை ஒழிக்கப்பட்டதால் கிராம சபைகளுக்கு ஒழைப்பைப் பெற்றக் கொள்வது கடினமாயிற்று.
    - கிராம சபைகளின் நீதித்துறை அதிகாரம் ஒழிக்கப்பட்டமையாலும் சிறிய பிரச்சினைகளைத் தீர்ப்பதில் விவசாயிகள் பாதிப்புற்றனர்.
12. புதிய நீதிமன்ற முறை தோற்றுவிக்கப்பட்டமை.

    1. கமரனின் நீதிமன்ற சீர்திருத்தத்திற்கு அமைய கிராமிய மக்கள் சிறு பிரச்சினைகளைத் தீர்க்க நீதிமன்றங்களை நாடவேண்டி இருந்தது.
    2. புதிய நீதிமன்றங்களில் பயன்படுத்தப்பட்ட ஆங்கில மொழி அறிவோ கிராமிய மக்களிடம் காணப்படவில்லை.
    3. வழக்கறிஞர்களுக்கான கொடுப்பனவுகள், முத்திரைக் கட்டணங்கள் பணம் செலவிட வேண்டிருந்தது.
    4. சிறிய வழக்குகளுக்காக விவசாயிகள் தமது நேரத்தையும் பணத்தையும் செலவிட நேர்ந்தது. இதனால் சேனைச் செய்கை, விவசாய நடவடிக்கைகள் பாதிப்புற்றது.
13. அரசுக்கும் பொது மக்களுக்கும் இடையிலான தொடர்பு விலகிச் சென்றமை.

    - கோல்புறூக் சிபாரிசுகளுக்கு அமைய,
        1. சிவில் சேவையாளர்கள் எண்ணிக்கை குறைந்தமை.
        2. அவர்களுக்குப் பெருந்தோட்டச் செய்கையில் ஈடுபட அனுமதி அளிக்கப்பட்டமை, நிருவாக சேவை செயலற்றுப் போகக் காரணங்களாக அமைந்தன.
        3. நிருவாக உத்தியோகத்தர்களின் நிருவாகப் பிரதேசம் பரந்துபட்டமையால் எல்லைப்புற விவசாயிகள் நலன்கள் கவனிக்கப்படவில்லை.
        4. பொது மக்களின் பிரச்சினைகள் அரசாங்கத்திற்கு முறையாக அறிக்கைப்படுத்தப்படவில்லை. இதனால் அரசுக்கும் மக்களுக்குமிடையிலான தொடர்புகள் தடைப்பட்டன.
        5. ஐந்து மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டமையால் கண்டியின் எல்லைப்புற விவசாயிகள் நலன்கள் கவனிக்கப்படவில்லை.
14. உள்ளூராட்சி மன்றங்கள் உருவாக்கப்பட்டு மறுசீரமைக்கப்பட்டமை.

(உ – ம்) : 1865ம் ஆண்டு கொழும்பு மாநகர சபையும்.

1866ம் ஆண்டில் கண்டி, காலி மாநகர சபைகளும் உருவாக்கப்பட்டன.

(உ –ம்) : 1871ம் ஆண்டு கிராம சபை முறை மறுசீரமைக்கப்பட்டது.

15. ஜனநாயக ஆட்சி முறைக்கு இலங்கை மக்கள் படிப்படியாக பழக்கப்பட்டமை.

16. சிவில் சேவை மாற்றியமைக்கப்பட்டமை.

17. சகல பொலிஸ் செயற்பாடுகளும் நீதித்துறையின் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டமை.

18. மாவட்ட நீதிமன்றங்களை தாபித்து கீழ்மட்ட நீதிமன்றங்களுக்கு மேலால் செயற்படக்கூடிய நீதித்துறை முறையினை உருவாக்கியமை.

19. ஆங்கிலக் கல்வி ஊக்குவிக்கப்பட்டு இலங்கையரை நிர்வாகத்திற்குள் இணைத்தமை.

20. பிரித்தானிய சிவில் நிர்வாக சேவை முறை அறிமுகப்படுத்தப்பட்டமை.

05ம் வினா (20 புள்ளிக்குரியது)

05. 1931 டொனமூர் அரசியல் திட்டத்தில் அறிமுகம் செய்யப்பட்ட சர்வஜனவாக்குரிமை இலங்கையின் அரசியல்,சமூக,பொருளாதார நிலைகளில் ஏற்படுத்திய தாக்கங்களை பரிசீலணை செய்க

அல்லது

05. 1931 டொனமூர் அரசியல் திட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட நிருவாகக்குழு ஆட்சிமுறையின் செயற்பாட்டினை விமர்சன ரீதியாக பரிசீலணை செய்க

அல்லது

05. 1931 டொனமூர் அரசியல் திட்டத்தின் அரசியல்,சமூக,பொருளாதார விளைவுகளை பகுப்பாய்வு செய்க

05. 1931 டொனமூர் அரசியல் திட்டத்தின் அரசியல்,சமூக,பொருளாதார விளைவுகளை பகுப்பாய்வு செய்க

1. பொறுப்புக் கூறும் அரசாங்கத்திற்குக் பழக்கப்படுதல்:-

அரசியல் அதிகாரத்தைப் பிரயோகிப்பவர்கள் சர்வஜன வாக்குரிமையின் மூலம் மக்களுக்குப் பொறுப்புக் கூறுவதில் பழக்கப்பட்டனர். தாம் மக்களுக்கு வழங்கும் வாக்குறுதிகளை பொறுப்புடன் நிறைவேற்றாது விட்டால் மக்கள் ஆதரவு தமக்கு கிட்ட மாட்டாது என அரசியல் வாதிகள் விளங்கிக் கொண்டமையால் மக்களுக்குப் பொறுப்புக் கூறுவதற்குத் தலைப்பட்டனர்.

2. பிரதிநிதித்துவ ஜனநாயத்திற்கு மக்கள் பழக்கப்படுதல்:-

தேர்தல் செயன்முறையின் மூலம் தமது ஆட்சியாளர்களைத் தெரிவு செய்வதற்கும் நீக்குவதற்கும் மக்கள் பழக்கப்படுவதில் சர்வசன வாக்குரிமை பாதிப்புச் செலுத்தியது.

3. சமூக மாற்றம் துரிதம் அடைதல்:-

இதன் பொருள் அமுக்கத்திற்கும் உட்பட்ட சனக்குழுவினர் சர்வஜன வாக்குரிமையின் மூலம் பெற்றுக் கொண்ட சக்தியினால் தலைதூக்க ஆரம்பித்தனர். குறிப்பாக நாட்டில் பலமாக நிலவிய சாதி முறை உடைவுக்கு உட்படுவதில் சர்வஜன வாக்குரிமை அதிகம் பாதிப்புச் செலுத்தியது.

4. சமூகப் பொதுநலன் வேகமாக விருத்தி பெற்றமை:-

சர்வஜன வாக்குரிமையின் விளைவாக அரசியல் வாதிகளின் இருப்பு பொது மக்களில் தங்கியிருக்கும் ஒன்றாக மாறியமையால் மக்கள் ஆதரவை அதிகமாகப் பெற்றுக் கொள்வதற்கு அரசியல் வாதிகள் ஒருவருக்கொருவர் போட்டி போட்டுக் கொண்டு பொதுநலச் செயற்பாடுகளை மேற்கொள்ள ஆரம்பித்தமையை டொனமூர் முறையின் கீழ் காணலாம். இலவசக் கல்வியின் ஆரம்பம், பாடசாலை மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கல், சுகாதார சேவைகளும் சமூக சுகாதார சேவைகளும் பரவலடைதல், உட்கட்டமைப்பு விருத்தியடைதல், தொழிலாளர் நலச்

சட்டங்கள் பிறப்பிக்கப்படல், விவசாயக் குடியேற்றத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டமை போன்ற பொதுநலச் சேவைகள் பல சர்வசன வாக்குரிமை காரணமாக ஆரம்பமாகியது.

5. மக்களின் அரசியல் பங்கேற்பு படிப்படியாக விருத்தியடைந்தமை:-

சர்வஜன வாக்குரிமையின் விளைவாக படிப்படியாக இலங்கை மக்களின் அரசியல் பங்குபற்றுதல் அதிகரித்தது. வரையறுக்கப்பட்ட வாக்குரிமை வழங்கப்பட்டிருந்த போது மொத்த சனத் தொகையில் 4% மானோர் மட்டுமே அவ்வுரிமையை அனுபவித்தனர். புதிய மாற்றத்தின் விளைவாக 21 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் அவ்வுரிமையினை பெற்றுக்கொண்டு அரசியலில் பங்குபற்றலாயினர். இவ்வகையில் 1931ம் ஆண்டு 57.96% வீதமானோரும் 1936யில் 54.69% வீதமானவர்களும் தேர்தலில் வாக்களித்தனர். இதேபோல 1982ம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் 81.06% வீதமானவர்களும் 1988ம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் 55.32% வீதமானவர்களும் 1994ம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் 70.52% வீதமானவர்களும் 1999ம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் 73.31% வீதமானவர்களும் 2010ம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் 74.5% வீதமானவர்களும் வாக்களித்துள்ளார்.

6. அரசியல் கட்சிகளின் தோற்றத்துக்கான தளம் இடப்பட்டமை:-

டொனமூர் அரசாங்க முறையின் செயற்பாட்டிற்கு அரசியல் கட்சி தேவைப்படவில்லை. மேலும் டொனமூர் அரசாங்க முறை அரசியல் கட்சிகள் தோன்றுவதை அதைரியப்படுத்தியது. ஆனால் சர்வஜன வாக்குரிமையின் விளைவாக வாக்காளர்களை ஒழுங்குபடுத்துவதற்கு அரசியல் கட்சிகள் ஆரம்பிக்கப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இவ்வகையில் டொனமூர் யாப்புக்கு முன்னர் தோன்றிய கட்சிகளை குறிப்பிடுவோமாகவிருந்தால்.

1. லங்கா சமசமாஜக் கட்சி (LSSP) – 1935
2. இலங்கை கம்யூனிசக் கட்சி (CP) – 1943
3. பொல்சோவிக் லெனிசியக் கட்சி (BLP) – 1945
4. இலங்கை இந்திய காங்கிரஸ் (CIC) – 1939
5. அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் (ACTC) – 1944
6. ஐக்கிய தேசியக் கட்சி (UNP) – 1946

1948ம் ஆண்டு இலங்கை சுதந்திரமடைந்ததன் பின்னர் இன்னும் பல கட்சிகள் தோன்றலாயிற்று.

1. ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி (SLFP) – 1951
2. ஜனதா விமுக்தி பெரமுன (JVP) – 1964
3. இலங்கை தமிழரசுக் கட்சி
4. இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் (CWC)

7. சர்வஜன வாக்குரிமையால் ஏற்பட்ட பிறிதொரு விளைவு தேர்தல் ஊழல் குறைந்து செல்வதற்கான வாய்ப்பு ஏற்பட்டமை. வரையறுக்கப்பட்ட வாக்குரிமை இடம் பெற்ற காலத்தில் மக்கள் தமது வாக்குரிமையை துஷ்பிரயோகம் செய்யும் நிலை காணப்பட்டது. மக்களிடம் அரசியல் அறிவு காணப்படாமையால் தமது வாக்குகளை பணத்திற்கும் மதுபானத்திற்கும் விற்கும் நிலை காணப்பட்டது. அவ்வாறான ஊழல்களைத் தடுக்கும் நோக்கிலும் சர்வஜன வாக்குரிமை புகுத்தப்பட்டது. இதன் மூலம் ஊழல்கள் ஓரளவு குறைந்தன. முன்பு வாக்களரின் எண்ணிக்கை குறைவாக இருந்தமையால் பணத்தை வீசி வாக்காளரின் வாக்குகளைப் பெறமுடிந்தது. ஆனால் பெரும்பாலானவர்கள் வாக்குரிமையைப் பெற்றமையினால் பணத்தின் மூலம் விலைக்கு வாங்க முடியாமல் போனது. இந்த ஊழல்கள் டொனமூர் காலத்தில் படிப்படியாக குறைந்து சென்றது.

8. டொனமூர் யாப்பின் கீழ் பொறுப்புக்களை நடைமுறைப்படுத்துவதற்கு அமைச்சரவை தாபிக்கப்பட்டது. அதன் மூலம் தேசாதிபதி பிற்பட்ட காலத்தில் நாம நிறைவேற்றாளராக மாறினார். அமைச்சரவையானது உத்தியோகபூர்வமாகவும் தனிப்பட்ட முறையிலும் தமது கருத்துக்களை தெரிவிக்க முடியும்

- அமைச்சரவை ஆரம்ப காலத்தில் இரு குழுக்காளகச் செயற்பட்டது. அதன் உறுப்பினர்களுள் ஒரு பகுதியினரான 3 அரசக் காரியதரிசிகளுக்கு அதிக அதிகாரங்கள் வழங்கப்பட்டன. சுதேச அமைச்சர்களுக்கு வழங்கப்பட்டிருந்த அதிகாரங்களைக் கூட அவர்களால் கட்டுப்படுத்த முடியாது.
- ஆரம்ப காலத்தில் அமைச்சரவை கூட்டுப் பொறுப்புடன் செயற்படாவிட்டாலும் டொனமூர் பிற்கூட்டில் ஒரு குழுவாக செயற்பட்டது.

9. நிறைவேற்றுக் குழு முறையின் மூலம் சிறுபான்மையினரும் ஆட்சிக் செயற்பாடுகளில் பங்கேற்பதற்கான வாய்ப்பினை பெற்றனர். மறுபுறம் தனியார் உறுப்பினர்களும் இவ்வாய்ப்பினைப் பெற்றுக் கொண்டனர். பொதுவாகச்

சகல உறுப்பினர்களும் சட்டவாக்கச் செயற்பாடுகளிலும் நிறைவேற்றுச் செயற்பாடுகளிலும் பங்கேற்பதில் பயிற்சியையும் அனுபவத்தையும் பெற்றுக்கொண்டனர்.

10. டொனமூர் அரசாங்கம் செயற்பட்ட காலத்தில் ஏற்பட்ட ஜனநாயக அரசியல் மாற்றத்தின் பிறிதொரு முக்கிய அம்சம் சிவில் சமூகத்தின் செயற்பாடு பரவலடைந்தமையாகும். இடதுசாரி இயக்கம், தேசிய இயக்கம், தொழிற்சங்க இயக்கம், சமய அமைப்புக்கள், பெண்கள் இயக்கங்கள் போன்றவை இக்காலத்தில் பரவலடைந்தமையால் சமூகப் பரிவர்த்தனைகள் ஏற்பட்டன.

11. அரசியல் பங்குபற்றுதல் அதிகரிப்பதன் மூலம் இலங்கை மக்களின் அரசியல் அறிவும் வளர்ச்சியடையலாயிற்று. வரையறுக்கப்பட்ட வாக்குரிமை வழங்கப்பட்டிருந்த காலத்தில் எந்த நோக்கத்திற்காக தமது வாக்கினை பிரயோகிக்கின்றோம் என்பதை அறியாதிருந்த பொதுமக்கள் சர்வஜன வாக்குரிமையின் மூலம் தமது அரசியல் உரிமையினை எவ்வாறு தாக்கரமான முறையில் பயன்படுத்தலாம் என்பதை உணர்ந்து கொண்டனர். இதன் மூலம் இலங்கை மக்கள் தமது அரசியல் தேவைகளையும் ஏனைய தேவைகளையும் இனம் கண்டு கொண்டு அதற்கேற்ப தமது வாக்குரிமையினைப் பயன்படுத்த முற்பட்டனர். இவ்வாறு கூறுவதன் மூலம் சர்வஜன வாக்குரிமை வழங்கப்பட்ட உடனேயே இலங்கை மக்கள் அரசியல் அறிவினைப் பெற்றுக்கொண்டனர் என்று பொருள்பட மாட்டாது. அது படிப்படியாக காலப்போக்கிலேயே பெறப்பட்டது.

12. சர்வஜன வாக்குரிமை வழங்கப்பட்டதனால் மக்கள் தமது மனக் குறைகளை நிறைவேற்றிக் கொள்ளும் வாய்ப்பினை பெற்றுக் கொண்டனர். சர்வஜன வாக்குரிமையின் மூலம் வாக்காளர்களின் தொகை அதிகரித்தமையால் தேர்தல் வெற்றிக்கு மக்கள் ஆதரவு தேவைப்பட்டது. அதனால் ஒவ்வொரு அபேட்சகரும் மக்கள் ஆதரவைப் பெற்றுக் கொள்வதற்கு அவர்களின் தேவைகளை நிறைவேற்றித் தருவதாக வாக்குறுதியளித்தனர். அடுத்த தேர்தலில் தாம் மீண்டும் வெற்றிபெற வேண்டும் என்ற நோக்கில் மக்களுக்கு சேவையாற்ற முற்பட்டனர்.

13. சுதேச அரசியல் வாதிகளின் நிறைவேற்று அதிகாரத்தை 7/10 நிறைவேற்று அதிகாரம் வழங்கப்பட்டதுடன் அதன் மூலம் அரசியல் வாதிகள் தமது நிறைவேற்று அதிகாரங்களை நடைமுறைப்படுத்துவதற்கான வாய்ப்பினைப் பெற்றுக் கொண்டனர். இதன் மூலம் எதிர்காலத்தில் பொறுப்பரசாங்கத்தைக் கொண்டு நடாத்துவதற்கான பயிற்சி இலங்கையின் தலைவர்களுக்கு கிடைக்கப் பெற்றது.

14. ஒரு பொதுத் தேசியத்துவம் விருத்தியடைவதற்கான தளம் இடப்பட்டமை:-

இலங்கையில் ஒரு பொதுத் தேசியத்துவம் வளர்ச்சியுறாமையின் மீது இருந்த பாரிய தடை என்ற வகையில் டொனமூர் ஆணைக்குழுவின் 1833த்தில் கோல்புறூக் - கமரன் சீர்திருத்ததின் மூலம் அறிமுகம் செய்யப்பட்ட இனவாரிப் பிரதிநிதித்துவ முறையாகும் எனக் கண்டனர். இனவாரிப் பிரதிநிதித்துவமானது. தேசிய ஒற்றுமையையும் தேசிய ஐக்கியத்தையும் அழிக்கும் ஒரு புற்றுநோய் என டொனமூர் ஆணைக்குழுவினர் கருதினர். இதன் அடிப்படையிலேயே டொனமூர் ஆணைக்குழு இனவாரிப் பிரநிதித்துவத்தை இல்லாதொழிக்க வேண்டும் என்ற யோசனையை முன்வைத்தது. இவ்வொழிப்பின் மூலம் தேசிய ஒருமைப்பாட்டை கட்டியெழுப்ப முடியும் என ஆணைக்குழு கருதியது. ஆனால் இந் நோக்கம் அவ்வாறு நிறைவேறவில்லை என்று விமர்சகர்கள் கூறுகின்றனர்.

15. சுதந்திர இயக்கத்தை பலமான முறையில் முன்னெடுத்து செல்வதற்கான உறுதுணை ஏற்பட்டமை:-

டொனமூர் யோசனையின் கீழ் தாபிக்கப்பட்ட அரசாங்க சபையானது ஒரு புறம் இந் நாட்டின் அரசியல்வாதிகளுக்கு அரசியலிலும் நிர்வாகத்திலும் பயிற்சியளிப்பதற்கும் மறுபுறம் தமது கருத்துக்களையும் விமர்சனங்களையும் எதிர்ப்புக்களையும் முன்வைப்பதற்குமான ஒரு மேடையாக பயன்படுத்தப்பட்டது.

(உ – ம்) : இலங்கையின் தலைவர்கள் எழுப்பிய குரலை, தட்டிக்கழித்துவிட்டு குடியேற்ற நாட்டாட்சியாளர்களினால் செயற்பட முடியாது போய்விட்டது.

16. எதிர்கால தலைவர்களை பயிற்றுவிப்பதற்கான தளம் உருவாகியமை:

டொனமூர் சீர்திருத்தங்களின் கீழ் அறிமுகம் செய்யப்பட்ட சர்வஜன வாக்குரிமை, நிறைவேற்றுக்குழு முறை, அமைச்சரவை என்பன உள்வாரியாக இந்நாட்டின் தலைவர்களை நிறைவேற்று விடயங்களிலும் அரச கொள்கைகள்

உருவாக்கம் மற்றும் நடைமுறைப் படுத்தலிலும் பயிற்சியினை வழங்குவதுடன் மறுபுறம் வெளிவாரியாக அரசியல் போராட்டத்தில் ஈடுபடும் வித்தினை பற்றிய பயிற்சியையும் வழங்கின். சுதந்திரத்திற்கு பிற்பட்ட காலத்தில் இலங்கையின் அரசியல் அதிகாரத்தை பிரயோகித்தவர்களை பார்க்கும் போது இதனை நன்கு விளங்கிக் கொள்ள முடிந்தது. பிரயோகித்தவர்களை பார்க்கும் போது இதனை நன்கு விளங்கிக் கொள்ள முடிந்தது.

(உ – ம்): **D.S சேனநாயக்கா (இலங்கையின் முதலாவது பிரதமர்)**

S.W.R.D. பண்டாரநாயக்கா (இலங்கையின் நான்காவது பிரதமர்)

J.R ஜெவர்த்தன (இலங்கையின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட முதலாவது ஜனாதிபதி)

ஜோன் கொத்தலாவெல (இலங்கையின் மூன்றாவது பிரதமர்)

A.E குணசிங்க (தொழிற்சங்கத் தலைவர்)

S.J.V. செல்வநாயகம், D.B. ஜெயதிலக

மோசமான விளைவுகள்

1. நிறைவேற்றுக் குழுக்களுக்கிடையில் மோதல்கள் இடம்பெற்றமை.
2. அமைச்சரவையில் கூட்டுப்பொறுப்பு நிலவாமை.
3. அமைச்சரவையை இயக்குவதற்கு ஒரு தலைவர் காணப்படாமை.
4. தனியார் உறுப்பினர்களின் நிலை பாதகமான வகையில் வளர்ச்சியுற்றமை.
5. இலங்கைத் தலைவர்களுக்கும் 3 அரச அதிகாரிகளுக்கும் இடையில் மோதல்கள் இடம்பெற்றமை.
6. மக்களுக்கு பொறுப்புக்கூற தேவையில்லாதவர்களுக்கு அதிகளவு அதிகாரம் வழங்கப்பட்டமை.
7. 3 காரியதரிசிகளிடம் பொறுப்புடைய துறைகள் வழங்கப்பட்டமை மக்களாட்சி கோட்பாட்டுக்கு தடையாக காணப்பட்டமை.

05. 1931 டொனமூர் அரசியல் திட்டத்தில் அறிமுகம் செய்யப்பட்ட சர்வஜனவாக்குரிமை இலங்கையின் அரசியல்,சமூக,பொருளாதார நிலைகளில் ஏற்படுத்திய தாக்கங்களை பரிசீலனை செய்க

சர்வஜன வாக்குரிமையால் ஏற்பட்ட அரசியல் விளைவுகள்.

1. அரசியற் கட்சிகள் தோற்றம் பெற்று வளர்ச்சியடைந்தமை.
2. சாதாரண மக்களின் அரசியல் அறிவு வளர்ச்சியடைந்தமை.
3. பிரதிநிதித்துவ ஜனநாயத்திற்கு மக்கள் பழக்கப்பட்டமை.
4. பிரநிதித்துவ ஜனநாயத்திற்கு மக்கள் பழக்கப்பட்டமை.
5. பொறுப்புக்கூறும் அரசாங்கத்திற்கு பழக்கப்பட்டமை.
6. தேர்தல் தொகுதிகள் விரிவடைந்தமை.
7. படிப்படியாக இலங்கை மக்களின் அரசியல் பங்குபற்றுதல் அதிகரித்தது.
8. தேர்தல் ஊழல்கள் குறைந்து செல்வதற்கான வாய்ப்பு ஏற்பட்டது.
9. இலங்கை வாழ் மக்கள் தமது அரசியல் உரிமைகளைப் பெற்றுக் கொண்டமை
10. மக்களின் மணக்குறைகளைத் தீர்த்துக் கொள்ளக்கூடிய வாய்பபு ஏற்பட்டமை.
11. காலத்திற்கு காலம் அரசியல் அமைப்புத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டமை.

சர்வஜன வாக்குரிமையால் ஏற்பட்ட பொருளாதார விளைவுகள்.

1. நாட்டின் கிராமப் பிரதேசங்களில் அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டமை.
2. ஒவ்வொரு பிரதேச மட்டங்களிலும் தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டமை.
3. வறுமை ஒழிப்புத் திட்டங்கள் பரவலாக மேற்கொள்ளப்பட்டமை.
4. உட்கட்டமைப்பு விருத்தியடைந்தமை.

5. விவசாய குடியேற்ற திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டமை.
6. தொழிலாளர் நலச் சட்டங்கள் பிறப்பிக்கப்பட்டமை.

சர்வஜன வாக்குரிமையால் ஏற்பட்ட சமூக விளைவுகள்.

1. இலவசக் கல்வி அறிமுகப்படுத்தப்பட்டது.
2. பாடசாலை மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கப்பட்டமை.
3. சுகாதார சேவைகளும் சமூகப சுகாதார சேவைகளும் பரவலடைதல்.
4. தாய்மொழி போதனா மொழியாக்கப்பட்டமை.
5. இலவச மருத்துவம் வழங்கப்பட்டது.
6. தாய் சேய் நலன் பேணப்பட்டது.
7. விவசாய மானியம் வழங்கப்பட்டமை.
8. நாடளாவிய ரீதியில் பல்கலைக்கழகங்கள் அமைக்கப்பட்டமை.
9. சமூகத்திற்கு மத்தியில் இருந்த சாதி வேற்றுமை குறைக்கப்பட்டமை.
10. தொழில் சங்கங்களை தொழிலாளர்கள் அமைத்துக் கொள்வதற்கும் சட்ட ரீதியான உரிமை வழங்கப்பட்டமை.

06ம் வினா (பிரவு வினாக்கள்)

06. 1947 – 1972 அரசியல் திட்டத்தின் கீழ் உள்ள பின்வரும் சிபார்சுகளை ஒப்பீட்டு ரீதியில் வேறுபடுத்துக

I. **சட்டத்துறையின் அமைவு சேர்கையும் அதிகாரமும்**
II. **நாம நிருவாகத்தின் அதிகாரங்கள்**
III. **நீதித்துறையின் நீதிப்புனராய்வு அதிகாரம்**
IV. **சிறுபாண்மை மக்களுக்குரித்தான காப்பீட்டு அம்சங்கள்**

06. 1947-1972 நாம நிருவாகத்தின் அதிகாரங்கள் (மகாதேசாதிபதி-ஜனாதிபதி)

மகா தேசாதிபதி இலங்கைப் பிரதமரின் சிபார்சின் பேரில் பிரித்தானிய மன்னரால் அல்லது மகாராணியாரால் நியமிக்கப்பட்டார் அவரின் பதவிக்காலம் யாப்பில் குறிப்பிடப்பாடாவிட்டாலும் சம்பிரதாய ரீதியாக 5 வருடங்களுக்கு ஒரு முறை அப்பதவி புதுப்பிக்கப்பட்டது. பதவிக்காலம் முடிவுற்ற ஒரு மகா தேசாதிபதி மீண்டும் நியமிக்கப்படக் கூடியவராக இருந்தார்.

மகாதேசாதிபதி இலங்கைப் பிரதமரின் சிபார்சின்பேரில் எச்சந்தர்ப்பத்திலும் பதவி நீக்கம் செய்யப்படக் கூடியவராக இருந்தார்.

சோல்பரி யாப்பின் படி மகா தேசாதிபதியின் அதிகாரங்களும் பணிகளும் பெரும்பாலும் பிரித்தானிய மகாராணியாரின் அதிகாரங்களையும் பணிகளையும் ஒத்தவையாக காணப்பட்டன. அதே போன்று அவரது நிலையும் பிரித்தானிய மகாராணியாரின் நிலையே ஒத்ததாக இருந்தது.

யாப்பின் படி மகா தேசாதிபதி வகித்த நிலை பிரித்தானிய சம்பிரதாயத்திற்கு இசைவானதாகும். அதாவது அரசின் தலைவர் நிறைவேற்றுத் துறையின் தலைவர் மற்றும் ஆயுதம் தாங்கிய படைகளின் தளபதி என்ற வகையிலாகும். முகா தேசாதிபதியின் அதிகாரங்களும் பணிகளும் யாப்பில் விளக்கமாக குறிப்பிடப்படாவிட்டாலும் பிரித்தானிய சம்பிரதாயங்களை அடிப்படையாகக் கொண்டு மகா தேசாதிபதிக்கு வழங்கப்பட்டிருந்தது. அவை பின்வருமாறு.

- பாராளுமன்றைக் கூட்டுதல், தவனைகளை நிறுத்தம் செய்தல், கலைத்தல், பாராளுமன்ற தவணை ஆரம்பமாகும் போது சிம்மாசனப் பிரசங்கத்தை நிகழ்த்துதல், சடங்கு முறையான இருக்கைகளின் போது பாராளுமன்றின் கூட்டங்களுக்கு தலைமை தாங்குதல், பாராளுமன்றினர் நிறைவேற்றப்படும். சட்டங்களுக்கு அங்கீகாரம் வழங்குல்.

- பாராளுமன்றின் மக்கள் பிரதிநிதிகள் சபைக்கு 06 உறுப்பினர்களை சிறுபான்மையினருக்காக நியமித்தல். உயர் சேவைகளைப் புரிந்த ஆட்களுள் 15 பேரை செனட் சபைக்கு நியமித்தல்.
- பிரதமரை நியமித்தல், அமைச்சர்களை நியமித்தல், பிரதியமைச்சர்களை நியமித்தல், அமைச்சரவைச் செயலாளரை நியமித்தல், அமைச்சர்களையும் பிரதி அமைச்சர்களையும் பதவி நீக்கம் செய்தல்
- போரையும் சமாதானத்தையும் பிரகடனம் செய்தல்.
- முப்படைகளின் தளபதிகளையும் பொலிஸ்மா அதிபரையும்ெ அரசாங்கத்தின் உயர் அதிகாரிகளையும் நியமித்தல்.
- வெளிநாட்டுத் தூதுவர்களையும் பொலிஸ்மா அதிபரையும் அரசாங்கத்தின் உயர் அதிகாரிகளையும் நியமித்தல்.
- பிரதம நீதியரசரையும் ஏனைய உயர் நீதிமன்ற நீதியரசர்களையும் நியமித்தல்.
- குற்றவாளிகளுக்கு மன்னிப்பளித்தலும், தண்டனைகளை குறைத்தலும்.
- அரசின் இலச்சினையை காப்பில் வைத்திருத்தல்.

இவ்வாறு மகா தேசாதிபதி தமக்கு வழங்கப்பட்டிருந்த அதிகாரங்களையும் பணிகளையும் பிரித்தானிய மரபின் படி இலங்கைப் பிரதமரின் ஆலோசனையின் பேரில் நிறைவேற்றினார். இதன்படி மகா தேசாதிபதியின் அதிகாரங்களும் பணிகளும் நாம நிர்வாக அதிகாரங்களாகவே இருந்தன. முகா தேசாதிபதிக்கு எதிராக வழக்கு தொடர முடியாது. பதவிக்காலம் முடிவுறுவதற்கு முன்னர் அவரை பிரதமரால் பதவியிலிருந்து நீக்க முடிந்தது.

1972 ஆம் ஆண்டு முதலாம் குடியரசு யாப்பின் கீழும் கபினட் அரசாங்கம் தாபிக்கப்பட்டமையினால் ஜனாதிபதி என்ற நாம நிர்வாகப் பதவி அறிமுகம் செய்யப்பட்டது. இலங்கையில் வாக்குரிமைப் பெற்ற எந்தவொரு பிரஜையையும் ஜனாதிபதிப் பதவிக்கு நியமிப்பதற்கு பிரதமர் அதிகாரம் பெற்றிருந்தார். அவரது பதவிக்காலம் 4 வருடங்களாகும். அவர் தேசிய அரசுப் பேரவையில் அவருக்கு எதிராக சமர்பிக்கப்படும் ஒரு நம்பக்கையில்லாப் பிரேரரணை 2/3 பெரும்பான்மையினாலும் பிரதமரினால் கொண்டுவரப்படும் ஒரு தீரமானம் பெரும்பான்மை வாக்குகளாலும் நிறைவேற்றப்படுவதன் மூலம் பதவி நீக்கம் செய்யப்பட்டார். அரசியல் யாப்பின் படி ஜனாதிபதி அரசின் தலைவரும் நிறைவேற்றுத் துறையின் தலைவரும் ஆயுதப் படைகளின் தளபதியும் ஆவார் என்று ஜனாதிபதியின் நிலை குறிப்பிடப்பட்டிருந்தது. ஜனாதிபதிக்கு யாப்பு ரீதியாக வழங்கப்பட்ட அதிகாரங்களும் பணிகளும் பின்வருமாறு,

- போரையும் சமாதானத்தையும் பிரகடனம் செய்தல்.
- தேசிய அரசுப் பேரவையினைக் கூட்டுதல், தவணைகளை முடிவுறுத்துதல், கலைத்தல்.
- பிரதமரையும் அமைச்சரவையின் ஏணைய அமைச்சர்களையும் பிரதி அமைச்சர்களையும் நியமித்தல். இங்கு பொதுத்தேர்தல் ஒன்றின் பின்னர் பிரதமரை நியமிக்கும் போது சோல்பரி யாப்பு ஏற்பாட்டினைப் போலன்றி சுயமாக தீர்மானிக்க முடியும். அதன்படி தேசிய அரசுப் பேரவையில் பெரும்பான்மையினரின் நம்பிக்கையை பெற்றவர் என்று தான் கருதும் ஒருவரை நியமிப்பதற்கு தற்துணிவு அதிகாரம் பெற்றிருந்தார்.
- மேன்முறையீட்டு நீதிமன்றினதும் உயர் நீதிமன்றினதும் நீதியரசர்களை நியமித்தலும் ஏனைய உயர் அரசாங்க அதிகாரிகளையும் ஆணையாளர்களையும் நியமித்தல்.
- தூதுவர்களையும் உயர் ஸ்தானிகர்களையும் பூரண அதிகாரம் பெற்ற அரச தூதுவர்களையும் நியமித்தல், அதிகாரங்களை வழங்குதல், வரவேற்றல்.
- தேசிய அரசுப் பேரவையின் ஆரம்ப இருக்கைக்கும் சடங்கு முறையான இருக்கைகளுக்கும் தலைமை தாங்குதல்.
- அரச இலட்சினையை காப்பில் வைத்திருத்தல்.
- குற்றவாளிகளுக்கு மன்னிப்பு வழங்குதலும், தண்டனைகளை குறைத்தலும்.

யாப்பின் மூலம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டிருந்த அதிகாரங்களையும் பணிகளையும் நிறைவேற்றுவதற்கு பிரதமரின் ஆலோசனை அவசியமாக இருந்தது. இதன்படி ஜனாதிபதிக்கு உரிய அதிகாரங்கள் பெயரளவு ரீதியானவையாகும். ஜனாதிபதிக்கு எதிராக வழக்கு தொடர முடியாது.

முடிவுரை

சோல்புரி மற்றும் 1972 அரசாங்க முறைகளில் இருந்த நாம நிர்வாகிகளின் நிலை, அதிகாரங்கள் மற்றும் பணிகள் என்பவற்றின் அடிப்படையில் ஒத்தவையாகும். எனினும் சோல்பரி மகாதேசாதிபதி ஒரு தேசிய தலைவராக அன்றி பிறிதொரு அரசின் தலைவரின் பிரதிநிதியாகவே இருந்தார். ஆனால் 1972 அரசாங்க முறையில் ஜனாதிபதி இந்நாட்டின் தேசிய தலைவராக இருந்தமை ஒரு தெளிவான அரசியல் மாற்றத்தினை வெளிப்படுத்தியது.

06. சோல்பரி யாப்பின் கீழும் 1972 யாப்பின் கீழும் இருந்த சட்டத்துறைகளின் சட்டவாக்க அதிகாரம். (பாராளுமன்றம் - தேசிய அரசுப்பேரவை)

நோக்கம்

1947 சோல்பரி யாப்பின் கீழ் தாபிக்கப்பட்ட சட்டத்துறையான பாராளுமன்றத்தினதும் 1972 ஆம் ஆண்டு 1ம் குடியரசு யாப்பின் கீழ் தாபிக்கப்பட்ட தேசிய அரசுப் பேரவையினதும் சட்டவாக்கம் தொடர்பான அதிகாரம் பற்றி ஒப்பிட்டு ரீதியாக விளக்கி சட்டவாக்கம் தொடர்பான பூரண அதிகாரம் இவற்றுள் எச்சட்டத்துறைக்கு இருந்தது என்பது பற்றி இறுதி முடிவுக்கு வருவதற்கு பரீட்சார்த்திகளுக்குள்ள அறிவைச் சோதிப்பதே இப்பகுதியின் நோக்கமாகும்.

அறிமுகம்

ஒரு ஜனநாயக அரசாங்க முறைமையில் சட்டவாக்க அதிகாரமானது சட்டத் துறைக்கே உரியதாகும். அதன்படி 1947 சோல்பரி யாப்பின் கீழ் தாபிக்கப்பட்ட பாராளுமன்றமும் 1972 யாப்பின் கீழ் தாபிக்கப்பட்ட சட்டத்துறையான தேசிய அரசு பேரவையும் சட்டவாக்க அதிகாரத்தையும் யாப்பின் மூலம் பெற்றிருந்தன. ஆனால் இது தொடர்பாக தென்பட்ட விசேட பண்பு என்னவெனில் இரு நிறுவனங்களும் பெற்றிருந்த அதிகாரங்கள் தொடர்பாக பாரிய மாற்றங்கள் காணப்பட்டவையாகும். அதன்படி சோல்பரி யாப்பின் கீழ் இருந்த பாராளுமன்றம் சட்டவாக்கத்தில் வரையறுக்கப்பட்ட அதிகாரத்தையே பெற்றிருந்தது. எனினும் இதனைவிட வேறுபட்ட வகையில் 1972 யாப்பின் கீழ் தேசிய அரசு பேரவைக்கு சட்டவாக்கம் செய்வதில் பூரண அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது.

உள்ளடக்கம்

சோல்பரி யாப்பின் 29 (01) ஆம் உறுப்புரையின் படி இந்த அரச கட்டளையின் ஏற்பாடுகளின் கீழ் இலங்கையின் அமைதி, ஒழுங்கு மற்றும் நல்லாட்சி பற்றி சட்டவாக்கம் செய்வதற்கு பாராளுமன்றத்திற்கு அதிகாரம் உண்டு. இதன் படி அரசியல் யாப்பின் மூலம் சட்டவாக்கம் செய்யும் அதிகாரம் பாராளுமன்றத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. எனினும் அவ்வதிகாரத்தை கட்டுப்படுத்தக் கூடிய ஏற்பாடுகளும் யாப்பில் புகுத்தப்பட்டிருந்தது அவை பின்வருமாறு.

- யாப்பின் 29 (02) உறுப்புரையின் படி அவ்வாறான ஒரு சட்டம்

அ. ஏதேனும் ஒரு சமயத்தை பின்பற்றுவதனை தடை செய்யவோ, வரையறை செய்யவோ முடியாது.

ஆ. ஏதேனும் ஒரு சமயத்தையோ இனத்தையோ சேர்ந்த ஆட்களை வேறு இனத்தை அல்லது சமயத்தை சேர்ந்த ஆட்களினால் கீழ்ப்படுத்தக்கூடியவாறு தடைகளையோ வரையறைகளையோ விதித்தலாகாது.

இ. ஏதேனும் இனத்தையோ சமயத்தையோ சேர்ந்த ஆட்களுக்கு வேறு இனத்தை அல்லது சமயத்தவர்களுக்கு வழங்கப்பட்டிராத எவ்வித சலுகைகளையும் வழங்கக்கூடாது.

ஈ. ஏதேனும் ஒரு சமயத் தாபனத்தின் யாப்பினை அத் தாபத்தின் ஆளுநர் சபையின் விருப்பம் இன்றி மாற்றக்கூடாது. எனினும் ஒரு சமயத் தாபனம் சட்ட ரீதியானதாக ஆக்கப்பட்டுள்ள போது அதன் ஆளுநர் சபையின் வேண்டுகோளின் பேரில் அன்றி அவ்வாறான மாற்றங்களை செய்ய முடியாது.

29 (02) உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை மீறும் வகையில் ஆக்கப்படும் சகல சட்டங்களும் செல்லுபடியற்றவையாகும்.

- அரசியல் யாப்பின் 39 ஆம் உறுப்புரையின் படி பாராளுமன்றின் சட்டவாக்க அதிகாரம் குறிப்பிடப்பட்டிருந்தது. அது பின்வருமாறு,

அ. இந்த அரச கட்டளையின் 2 ஆவது துனை அட்டவனையில் கூறப்பட்டுள்ள இலங்கை அரசாங்கத்தின் ஏதேனும் ஒரு சொத்து பற்றிய ஏற்பாடுகளுள் எதுவாயினும் சொத்தின் உரிமையாளருக்கு ஓரம் காட்டப்படுகின்றது என்றோ

ஆ. அவ்வாறான ஏதேனும் ஒரு சொத்து பற்றிய ஆரம்ப ஒப்பந்தத்தின் நிபந்தனைகள் மீறப்படுகின்றன எனறோ ஐக்கிய ராச்சியத்தின் மன்னருக்கு தென்படுமாயின் அவ்வாறான எந்தவொரு சட்டத்தையும் ஓர் அரச செயலாளரின் மூலம் நிராகரிப்பதற்கு மன்னரால் முடியும்.

- அரசியல் யாப்பு உயர் நீதிமன்றுக்கு நீதிப் புனராய்வு அதிகாரத்தை வழங்காவிட்டாலும் 1962 ஆம் ஆண்டு பிரித்தானிய கோமறைக் கழகம் வழங்கிய தீர்ப்பின் படி உயர் நீதிமன்றம் பெற்றுக்கொண்ட நீதிப்புனராய்வினைப் பயன்படுத்தி அரசியல் யாப்புக்கு இசைவற்ற எந்தவொரு சட்ட மசோதாவையும் சட்டத்தையும் செல்லுபடியற்றதாக்குவதற்கு உயர் நீதிமன்றுக்கு அதிகாரம் இருந்தது.

மேற்குறிப்பிட்ட ஏற்பாடுகளின் படி சோல்பரி யாப்பின் கீழ் பாராளுமன்றின் சட்டவாக்க அதிகாரம் கட்டுப்படுத்தப்பட்டிருந்தமையால் அப்பாராளுமன்றம் இறைமை பொருந்தியதாக இருக்கவில்லை.

1972 ஆம் ஆண்டு யாப்பு தேசிய அரசு பேரவைக்கு சட்டவாக்க அதிகாரத்தை ஒப்படைத்திருந்தது. அந்த யாப்பு குடியரசின் இறைமையை மக்களுக்கு உரித்தானதாக ஆக்கியிருந்தது (உறுப்புரை 03) மக்களின் இறைமையை நடைமுறைப்படுத்தும் அதிகாரம் தேசிய அரசுப் பேரவைக்கு வழங்கப்பட்டிருந்தது.

யாப்பின் உறுப்புரையினால் 5 தேசிய அரசுப் பேரவையை உயர் தன்மை பொருந்தியதாக ஆக்கியிருந்தது. அதன்படி தேசிய அரசுப் பேரவை இலங்கைக் குடியரசின் உயர் நிறுவனமாக தாபிக்கப்பட்டது. மக்களின் சட்டவாக்க அதிகாரத்தை நடைமுறைப்படுத்துவதும் நாட்டின் பாதுகாப்பு உள்ளிட்ட நிறைவேற்று அதிகாரத்தை ஜனாதிபதி மற்றும் அமைச்சரவையின் ஊடாக நடைமுறைப்படுத்துவதும் சட்டத்தின் மூலம் அரசுப் பேரவையினால் நடைமுறைப்படுத்தக் கூடிய தனது அதிகாரங்கள் மற்றம் சலுகைகள் தொடர்பாக அன்றி மக்களின் நீதி அதிகாரத்தை சட்டத்தினால் தாபிக்கப்பட்ட நீதிமன்றுகள் மற்றும் ஏனைய நீதி நிறுவனங்களின் ஊடாக தேசிய அரசுப் பேரவையே பிரயோகிக்கும்.

இவ்வாறு மக்களின் சட்டவாக்க அதிகாரத்தைப் பெற்ற தேசிய அரசுப் பேரவைக்கு குறிப்பாக நீதியதிகாரம் உரித்தாகியமையால் நீதித்துறை தேசிய அரசு பேரவைக்கு கீழ்ப்பட்டது. எனவே தேசிய அரசுப் பேரவையின் சட்டவாக்க அதிகாரத்தை வரையறுக்கக் கூடிய எவ் அதிகாரத்தையும் நீதித்துறை தரவில்லை. அதாவது நீதி புனராய்வு அதிகாரம் நீதித் துறைக்கு வழங்கப்படவில்லை. இதன் காரணமாக தேசிய அரசுப் பேரவையின் ஒரு சட்ட மசோதா அல்லது ஒரு சட்டம் அரசியல் யாப்புக்கு இசைவற்றதாயினும் அதனை செல்லுபடியற்றதாக்கும். அதிகாரம் நீதித்துறைக்கு இருக்கவில்லை. அதன் மூலம் அரசியல் யாப்பினை மீறி சட்டவாக்கம் செய்வதற்கு தேசிய அரசுப் பேரவைக்கு இருந்த தன்னிச்சையான அதிகாரத்தை வழிப்படுத்துவதற்கு அரசியல் யாப்பு நீதிமன்றம் என்ற ஒரு நிறுவனத்தை 1972ஆம் ஆண்டு யாப்பு தாபித்திருந்தது.

அரசியல் யாப்பு நீதிமன்றின் பணி யாதெனில் தேசிய அரசுப் பேரவையின் சட்ட மசோதாக்களின் யாப்புறுதன்மையினை பரிசோதித்து தீர்ப்புக் கூறுவதாகும். அங்கு ஏதேனும் ஒரு சட்ட மசோதா அரசியல் யாப்புக்கு இசைவற்றது. என அரசியல் யாப்பு நீதிமன்றம் தீர்மானித்தால் அது தொடர்பாக பின்வரும் மூன்று முடிவுகளை தேசிய அரசுப் பேரவைக்கு தெரிவிக்க முடியும். அவையாவன ஏதேனும் ஒரு சட்ட மசோதா யாப்பிற்கு முரணற்றது என்றோ யாப்பிற்கு முரணானது என்றோ அல்லது யாப்புக்கு முரணானதா இல்லையா எனத் தனக்கு சந்தேகம் நிலவுகின்றது என்றோ முடிவு கூறலாம். இவற்றுள் இறுதியாகக் குறிப்பிட்டப்பட்ட இரண்டு முடிவுகளையும் தெரிவித்தால் அச்சட்ட மூலம் தேசிய அரசுப் பேரவையில் 2/3 பெரும்பான்மையினால் நிறைவேற்றப்பட வேண்டும். எனினும் அரசியல் யாப்பு நீதிமன்றத்தின் முடிவானது நீதிப் புனராய்வு முடிவினைப் போன்று பலமானதன்று எனவே அரசியல் யாப்புக்கு முரணான ஒரு சட்ட மசோதாவைக் கூட தேசிய அரசுப் பேரவையினால் நிறைவேற்ற முடிந்தது. இவ்வாறு 1972 யாப்பின் மூலம் தேசிய அரசுப் பேரவையின் சட்டவாக்க யாப்பின் அதிகாரம் பரந்த முறையில் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

முடிவுரை

சோல்பரி அரசாங்க முறையில் சட்டத்துறையான பாராளுமன்றத்தின் சட்டவாக்க அதிகாரம் மிகத் தெளிவான முறையில் வரையறுக்கப்பட்டிருந்தது. அதனால் சோல்பரிப் பாராளுமன்றம் உயர் தன்மை பொருந்திய நிறுவனமாக இருக்கவில்லை. ஆனால் 1972 அரசியல் முறைமையின் சட்டத்துறையானது தேசிய அரசு பேரவையின் சட்டவாக்க அதிகாரத்தினை எவ்வகையிலும் கட்டுப்படுத்தப்படவில்லை. அதனால் தேசிய அரசு பேரவை உயர்த்தன்மை பொருந்திய நிறுவனமாக விளங்கியது.

07ம் வினா (20 புள்ளிக்குரிய வினா)

07. இலங்கையின் அரசியல் யாப்பில் மேற்கொள்ளப்பட்ட 17ம்,18ம்,19ம் திருத்தச்சட்டங்களை தெளிவு படுத்துக

அல்லது

07. 19வது அரசியல் திருத்தச்சட்டத்தின் கீழ் ஜனாதிபதியின் அதிகாரங்களும், அவ்வதிகாரத்திற்கு உரித்தான தடைகளும்

அல்லது

07. தற்போதைய அரசியல் யாப்பில் நடைமுறையில் உள்ள விகிதாசார தேர்தல் முறையின் சாதகங்களையும்,பாதகங்களையும் பகுப்பாய்வு செய்க

08ம் வினா (20 புள்ளிக்குரிய வினா)

08. அமெரிக்க அல்லது இந்திய சமஸ்டி பண்புகளை ஆராய்க

அல்லது

08. மோதல் என்றால் என்ன என்பதனை வரைவிலக்கணப்படுத்தி அதனைத் தீர்கும் வழிமுறைகளை தெளிவு படுத்துக

அல்லது

08. ஜனநாயக அரசாங்கமுறையின் சிறப்புப் பண்புகளைக் குறிப்பிட்டு அவற்றினை விளக்குக

08. மோதல் என்றால் என்ன என்பதனை வரைவிலக்கணப்படுத்தி அதனைத் தீர்கும் வழிமுறைகளை தெளிவு படுத்துக

மோதல் பற்றிய அறிமுகம்

சமகாலத்தில் முரண்பாடு மற்றும் முரண்பாடு தீர்த்தல் எனும் கற்கை பல்வேறுபட்ட பல்துறைசார் கற்கை நெறியாக மாறியுள்ளது. அரசறிவியல், சட்டம், சமூகவியல், மெய்யியல், முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் சர்வதேச உறவுகள் ஆகிய துறைகளில் முக்கிய ஆய்வு விடயமாக முரண்பாடு மற்றும் முரணப் ாடு தீர்த்தல் காணப்படுகின்றது. முரண்பாடானது அரசறிவியல் பாடப்பரப்பில் 1980 களின் இறுதிப்பகுதியில் முக்கியத்துவப்படுத்தப்பட்டு கற்கப்பட ஆரம்பிக்கப்பட்ட போதிலும் மனித வாழ்வில் தவிர்க்க முடியாத பிரித்துப்பார்க்க முடியாத ஓர் அம்சமாக காணப்படுகின்றது.

முரண்பாடு எனும் எண்ணக்கரு தொடர்பாக ஒரு துல்லியமான வரைவிலக்கணத்தை முன்வைக்க முடியாதுள்ளது. முரண்பாடடி ன் வரைவிலக்கணம் தொடர்பாக ஒரு உடன்பட்ட கருத்தோ, ஒருமைப்பாடோ, ஆய்வாளர்களிடம் காணப்படவில்லை. எனினும் முரண்பாடு என்பது மறுத்தல் அல்லது சச்சரவு, சண்டை, வன்முறை, பிரச்சினை, பிணக்கு என்பவற்றுக்குப் பதிலாக பயன்படுத்தப்படுவதைக் காணலாம்.

மோதல் என்பது ஆங்கிலத்தில் Conflict என அழைக்கப்படுகின்றது. இப்பதமானது Confligere எனும் இலத்தீன் மொழிச் சொல்லிலிருந்து தோற்றம் பெற்றதாகும். இதன் பொருள் ஒருமித்து தாக்குதல், ஒன்றாக போராடுதல் என்பதாகும். எளிய மொழி நடையில் முரண்பாடு என்பது குறைந்தது இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட நபர்களுக்கிடையோ அல்லது சமூகங்களுக்கிடையோ அல்லது நாடுகளுக்கிடையோ உடன்பாடு காணப்படாமை என வரைவிலக்கணப்படுத்தலாம்.

கோட்பாட்டு ரீதியாக ஒரு எண்ணக்கருவை விளங்குவதாயின் அது தொடர்பான அறிஞர்களின் கருத்துக்களையும் வரைவிலக்கணங்களையும் நோக்க வேண்டும். முரண்பாடு தொடர்பாக கருத்துக்களை முன்வைத்த அறிஞர்களும் அவர்களின் வரைவிலக்கணங்களும் பின்வருமாறு காணப்படுகின்றன.

- பேராசிரியர் கிறிஸ்தோபர் மிச்செல் **"**சர்வதேச முரண்பாடுகளின் கட்டமைப்பு (The Structure of International Conflict)- 1981**"** என்ற கட்டுரையில் முரண்பாடு என்பது எதிர்வாதம், போட்டி , பிரச்சினை, பிணக்கு, என்பவற்றிலிருந்து வேறுபட்டது என குறிப்பிடுகின்றார். இவரது கருத்தின்படி முரண்பாடு என்பது ''ஒத்துவராத இலக்குகளைக் கொண்டிருக்கின்ற அல்லது கொணடி ருப்பதாக நினைக்கின்ற இரண்டு அல்லது பல தரப்பினர்களுக்கிடையே காணப்படுகின்ற உறவே'' எனக் குறிப்பிடுகின்றார்.
- முரண்பாடு மற்றும் முரண்பாடு தீர்த்தல் கற்கை துறையில் அனுபவம் வாய்ந்த **ஜொஹான் கல்தூன்** முரண்பாடு என்பது ''பொருத்தமில்லாத எதிர்பார்க்கைகள் எதிர்மறையான மனப்பாங்குகள், அவநம்பிக்கையான நடத்தையிலிருந்து ஆரம்பமாகின்றது.
- குயின்ஸி றைட் எனும் அறிஞர் முரண்பாடு என்பது ''ஒன்றுக்கொன்று எதிராக வழிநடாத்தப்படுகின்ற சமூகத்தவர்களின் எதிர்ப்புத்தன்மையாகும்'' என குறிப்பிடுகின்றார்.

- உப்சலா பல்கலைக்கழகத்தின் பேராசிரியரான பீட்டர் வொலன்ஸ்டீன் "இரு தரப்பினர் அல்லது இரு பிரிவினரின் ஒரே தன்மையில் பற்றாக்குறையாக உள்ள வளத்தை கைப்பற்ற முயற்சிப்பதால் ஏற்படும் நிலையே முரண்பாடு" எனக் குறிப்பிடுகின்றார்.

முரண்பாட்டுத் தீர்வு செயன்முறை

முரண்பாடு என்பது சமூக மாற்றத்தின் உள்ளார்ந்த தவிர்க்க முடியாத ஓர் விடயமாகும். இது மரபு ரீதியான கட்டுப்பாடு விதிகளைக் கடந்த சமூக மாற்றங்களால் உருவாக்கப்பட்டு, புதிய நிலைகளாக அல்லது வடிவங்களாக உருவெடுக்கும் பல்வேறு நலன்களை அடிப்படையாகக் கொண்டதாகும். முரண்பாடு சமூகத்திற்கு நன்மை பயக்கக்கூடியதாக இருப்பினும் அழிவினை ஏற்படுத்தக்கூடிய முரண்பாடுகளால் பாதகமான விளைவுகள் தோன்றச் செய்கின்றன. இப்பின்னணியில் முரண்பாடுகளை முடிவுக்கு கொண்டு வருவதற்கு பல கோட்பாட்டு ரீதியான வழிமுறைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இதனை முரண்பாடடு த் தீர்வு செயன்முறை என அழைக்கப்படும். முரண்பாட்டு தீர்வு செயன்முறை பொதுவாக நீண்டதொரு செயன்முறையாகும். அதாவது, தனிப்பட்ட ரீதியிலும் சமூக, அரசியல் முரண்பாடுகளிலும் அவதானிக்கத்தக்க விடயம் யாதெனில் முரண்பாட்டை முழுமையாக தீர்த்துக் கொள்ளல் கடினமாயினும், முரண்பாடடி் னை சாதகமான முறையில் அணுகும் பல வழிமுறைகள் காணப்படுகின்றன.

01. முன்கூட்டிய முன் எச்சரிக்கை செய்தல்
02. முரண்பாடு தவிர்த்தல்
03. முரண்பாடு முகாமைத்துவம்
04. முரண்பாடு நிலைமாற்றம்
05. முரண்பாடடு க்குப் பின்னரான சமாதானத்தைக் கட்டியெழுப்புதல்
06. முரண்பாடுத் தீர்வு

முன்கூட்டிய முன் எச்சரிக்கை செய்தல்

முரண்பாடு தீர்வு செயன்முறையில் 1980, 1990களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் முன்வைக்கப்பட்ட முரண்பாடல் டக் கையாளுகின்ற வழிமுறையாக முன்கூட்டிய எச்சரிக்கை காணப்படுகின்றது. அதாவது, சமூகத்தில் ஏற்பட வாய்ப்புள்ள முரண்பாடுகள் தொடர்பாக முன்னரே இனங்கண்டு அவை ஏற்படுவதை தடுப்பதற்கான நடவடிக்கை எடுத்தலாகும். அவ்வாறு செய்யும் போது முரண்பாடு ஏற்படக் கூடிய இடம், சமூக குழுக்கள் போன்றவற்றை இனங்கண்டு அதன் மூலம் முரண்பாடுகளுக்கு காரணமாய் அமையக்கூடிய காரணிகள் மீது கவனம் செலுத்தி தீர்ப்பதற்கான யோசனைகளை முன்வைக்க முடியும்.

கெனத் போல்டிங் என்பவரால் முன்மொழியப்பட்ட "சமூகத் தரவுமையம்" என்பது இந்நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக உருவாக்கப் ட்ட நிறுவனமாகும். இந் நிறுவனத்தின் செயற்பாடுகள் முரண்பாடடி் ன் குறிப்பிட்ட பிரதேசங்களைக் கண்காணித்தல், அம் முரண்பாட்டை ஆரம்பத்திலேயே தடுத்து விடுவதற்கான வழிகளை தேடுதலாகும். முரண்பாட்டுத் தீர்வு செயன்முறையில் முன்கூட்டிய எச்சரிக்கைக்கு உதாரணமாக பொருளாதார தடையைக் குறிப்பிடலாம். ஒரு நாடு ஏனைய இரு நாட்டுடன் அல்லது உள்ளக இனத்துக்கு எதிரான ஆயுத ரீதியில் முரண்பாடு ஈடுபட முயற்சிகளை மேற்கொள்ளும் சந்தர்ப்பத்தில் முன்னெச்சரிக்கையாக அந்நாட்டுடன் உறவுகளை பேணாமல் விடுவதன் மூலம் முரண்பாட்டினை தடுப்பதற்கான ஓர் உத்தியாகும்.

முரண்பாட்டினை தவிர்த்தல்

முரண்பாடு தீர்வு கற்கையினுள் 1950களின் பின்னர் செல்வாக்குப் பெற்றது முரண்பாடு தவிர்த்தலாகும். முரண்பாடு தவிர்த்தலானது பல்வேறு நாடுகளில் தோன்றிய அழிவு ரீதியான முரண்பாடுகள் காரணமாக முரண்பாடுகளை தடுப்பதற்காக உருவாக்கப்பட்ட செயன்முறையாகும். மேலும் ஆயுத ரீதியான அழிவு ஏற்படாமல் அதனைத் தடுப்பதற்காக உருவாக்கப்பட்டதாகும். முரண்பாடு தவிர்த்தல் என்பது மோதலை முடிவுக்குக் கொண்டுவந்து அதனை ஒரு சமாதான நிலைக்கு கொண்டு செல்ல மேற்கொள்ளப்படும் உபாயங்கள் பிரதான பங்கு வகிக்கின்றது. அதாவது, ஒரு மோதல் பரவி, அது ஒரு பாரிய விளைவை ஏற்படுத்துவதிலிருந்து தடுத்து முரண்பாடு தரப்புக்களை அதன் ஆரமப் நிலைக்கு கொண்டு செல்லுவதாகும். முரண்பாடு தவிர்ப்பின் பிரதான அம்சம் முரண்பாட்டின் உடனடிக்காரணிகளை பரவ விடாது தடுத்தலாகும்.

முரண்பாடு தவிர்த்தல் செயன்முறை இரண்டு வழிமுறைகளில் இடம் பெறுகின்றன

1. முரண்பாடல் ட சுமாராக அல்லது இலேசாக தடுத்தல்
2. முரண்பாடல் ட ஆழமாக தடுத்தல்

முரண்பாட்டை சுமாராக தவிர்த்தல்

இது முரண்பாடொன்று வன்முறையாக மாறுவதை தடுப்பதற்கான நடவடிக்கை எடுத்தலை குறிப்பிடுகின்றது. அதாவது, வன்முறையுடன் கூடிய ஒரு முரண்பாடு ஆயுத முரணப் ாடாக பரிமாணம் பெறுவதை தடுப்பதை இலக்காகக் கொண்டதாகும். முரணப்பாடு தோற்றம் பெற்றமைக்கான அடிப்படைக் காரணிகளை கவனியாது, குறித்த முரண்பாடு ஆயுத முரண்பாடாக மாறுவதை தடுப்பதை நோக்கமாகக் கொண்டதாகும். இராஜதந்திர தலையீடுகள் மாநாடுகள், முரண்பாடு தீர்வு செயன்முறைகள், மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம், சமாதான பேச்சுவார்த்தை என்பன முரண்பாட்டை சுமாராக தவிர்த்தல் முறைக்கு எடுத்துக் காட்டாகும்.

முரண்பாட்டை ஆழமாக தவிர்த்தல்.

முரண்பாடடு க்கு அடிப்படையாக அமைந்த அடிப்படைக் காரணிகளை கண்டறிந்து. அவற்றுக்கு தீர்வுகளைப் பெற்றுக் கொடுத்து முரண்பாடு ஏற்படக்கூடிய வாய்ப்புக்களை தவிர்ப்பதாகும். இது முரண்பாடு தோற்றம் பெற்றமைக்கான மூல காரணத்தை இனங்கண்டு அதனை தவிர்த்தல் முறையாகும். இவ் தவிர்த்தல் முறை முரண்பாடடு த் தரப்பினரிடையே மீண்டுமொரு முரண்பாடு ஏற்படாத வண்ணம் நீடித்த சமாதானம், பாதுகாப்பு என்பன உருவாகும் வகையில் முரண்பாட்டை தவிர்க்கும் முறையாகும். பொருளாதார, அரசியல் சீரமைப்புக்கள், அபிவிருத்தி வழிமுறைகள், நலன்புரி கொள்கைகள், ஜனநாயகம், மக்களாட்சி, ஊடக சுதந்திரம், சட்டம் மற்றும் நிருவாக சீர்திருத்தம் என்பவற்றினை உருவாக்குவதனூடாக முரண்பாடன் ட தவிர்த்தலாகும்.

முரண்பாடு முகாமைத்துவம்

முரண்பாடன் ட கையாளுவதற்கான உத்திகளில் ஒன்றாக 1980களில் பின்னர் அறிமுகம் செய்யப்பட்ட ஓர் செயன்முறை முரண்பாடு முகாமைத்துவமாகும். முரண்பாடு முகாமைத்துவம் என்பது கட்டுப்படுத்த முடியாத மோதல்களின் நீண்டகாலம் முகாமையை குறிப்பிடுகின்றது. அதாவது, மோதல் முகாமைத்துவம் பிரச்சினைக்கான தீர்வினை முன்னவக்காது மோதல் மேலும் பரவாது மோதல் தரப்பினரிடையே மோதலை ஓர் கட்டுப்பாட்டிற்குள் கொணடு வருவதைக் குறிப்பிடுவதாகும்.

மோதல் முகாமைத்துவம் பற்றிய டொனால்ட் பிளக் எனும் அறிஞர் ‘‘மோதலில் தொடர்புடைய இரு குழுக்களுக்கிடையே மேலும் மோதல் அதிகரிக்காது அல்லது பரவ விடாது ஒரு குறித்த நிலையில் முகாமை செய்வதைக் குறிப்பிடுகின்றார். அதாவது, சமாதான உடன்படிக்கை, யுத்த நிறுத்த ஒப்பந்தம் என்பவற்றினால் மோதலை உடனடியாக முடிவுக்கு கொண்டு வராது முகாமை செய்வதை குறிப்பிடுகின்றது. மோதல் முகாமைத்துவம் செயன்முறை பிரதானமாக இன மோதலை தீர்க்கும் முயற்சியில் ஏறப் டும் சிக்கலை கருத்திற் கொண்டு இவ்வெண்ணக்கரு பயன்படுத்தப்படுகின்றது.

மோதல் முகாமைத்துவம் பற்றி ஸாடம் ன் எனும் அறிஞர் ‘‘மோதல் தீர்வு மோதலின் காரணிகளை நீக்குகின்றது. ஆனால் மோதல் முகாமைத்துவம் மோதல் மற்றும் நெருக்கடிக்கும் காரணமான அம்சங்களைக் குறைத்தல் அல்லது கடடு ப்படுத்தல் என்பவற்றின் மூலம் தீர்வினை காண்பதாகும் என குறிப்பிட்டுள்ளார்.

மோதல் முகாமைத்துவம் எனும் எண்ணக்கரு இரு வேறுபட்ட நிலைகளிலிருந்து ஆராயப்படுகின்றது. முதலாவது மோதலை முழுமையாக தீர்ப்பது கடினமான, நீண்டகாலம் எடுக்கக்கூடியதாக உள்ள போது மோதலினை வன்முறை மற்றும் அழிவுத் தன்மையான விளைவுகளைக் கடடு ப்பத்தி, அது மேலும் பரவுவதை கட்டுப்படுத்துவதாகும். இது மோதலுக்கான பிரதான காரணிகளுக்கு தீர்வுகளை தேடுவதில்லை மாறாக மோதலை ஒரு வகையில் கட்டுப்படுத்தலைக் குறிப்பிடுகின்றது.

இரண்டாவதாக மோதலை சாதகமற்ற விளைவுகளைப் பெற்றுக் கொடுக்கும் ஒன்றாக கருதாது, சமூகத்தில் ஒன்றுக்கொன்று மாறுபட்ட மனோநிலை மற்றும் நோக்கங்களுக்கிடையிலான மோதல் எனலாம். இது மேதாலை ஓர் ஆரோக்கியமான, சாதகமான ஓர் நிலையில் கொண்டு செல்கின்றது. அதாவது, மோதல் முகாமைத்துவமானது வேறுபாடுகளையும் பிரிவினைகளையும் ஆக்கபூர்வமானதாகக் கையாளும் ஒன்றாகக் கருதுகின்றது. இதனை நடைமுறைப்படுத்த மேதால்களை ஜனநாயகம், சமாதானம், கலந்துரையாடல் என்பவற்றின் மூலம் இடம்பெற முயற்சி செய்கின்றது.

முரண்பாடு முகாமைத்துவத்தின் முக்கியத்துவம்

1. முரண்பாடடு த் தன்மையை அளவிடுதல்
2. முரண்பாடடு த் தரப்பினரை சமப்படுத்தல்
3. முரண்பாடடு த் தரப்பினரை தனிமைப்படுத்தல்
4. மாநாடு, கலந்துரையாடல்கள் நடாத்தி கட்டுப்படுத்துதல் 5. அழிவினையும், பாதிப்புக்களையும் குறைத்தல்.

முரண்பாட்டு நிலைமற்றம்

முரண்பாடுகளை கையாளுவதில் மற்றுமொரு அணுகுமுறை முரண்பாட்டு நிலை மாற்றம் ஆகும். இதனை மோதல் உருமாற்றம் எனவும் அழைக்கப்படும். மோதல் தீர்வு அணுகுமுறைக்கு பதிலாக தோற்றம் பெற்ற அணுகுமுறையாகும். மோதல் நிலைமாற்றம் என்பது மோதலின் தன்மையில் மாற்றத்தை ஏற்படுத்துவதாகும். அதாவது, மோதல் தரப்பினர், பிரச்சினைகள், எதிர்பார்ப்புக்கள், மோதலை ஏற்படுத்தும் அடிப்படைக் காரணிகளை மாற்றியமைப்பதனால் மோதலின் அனைதது விதமான போக்கு நிலைமாறுவதை நோக்கமாகக் கொண்ட அணுகுமுறையாகும். மோதல் நிலை மாற்றம் நேரடியாக மோதலை முடிவுக்கு கொண்டுவர முடியாத ஒன்றாக காணப்படினும் மோதலை வேறொரு திசைக்கு அல்லது பரினாமத்திற்கு கொண்டு செல்லக்கூடியதாகும்.

மோதல் நிலைமாற்றம் ஒட்டுமொத்த மோதல் சூழல் காரணிகளை மாற்றியமைத்தல், மோதல் தரபப் ினரின் தொடர்புகளை மாற்றியமைத்தல், மோதலுடன் தொடர்புடைய தரப்பினரின் மனப்பாங்குகள், நடத்தைகள், எண்ணங்கள் என்பவற்றில் மாற்றத்தை ஏற்படுத்துவதாகும்.

மோதல் நிலைமாற்றம் ஏற்படுத்துவது பற்றி பல அறிஞர்கள் பல்வேறுபட்ட வித்தியாசமான அணுகுமுறைகளை குறிப்பிட்டுள்ளார். அந்த அடிப்படையில் மோதல் நிலைமாற்றம் பற்றிய ஜோன் போல் லெட்ராச் எனும் அறிஞர் முக்கியமானவராவார். இவரது கருத்தின்படி மோதல் நிலைமாற்றம் பின்வரும் 4 பரிமாணங்களில் ஏற்படுதல் வேண்டுமென குறிப்பிடுகின்றார்.

தனியாள பரிமாணம்

இது தனிநபரில் மோதல் பற்றி ஏற்படுகின்ற மாற்றத்தைக் குறிப்பிடுவதாகும். மனநிலை மாற்றம், ஆன்மீக உணர்வு, மோதல் பற்றிய அறிவு என்பவற்றின் விளைவாக தனிநபரிடம் ஏற்படுகின்ற நிலைமாற்றம், மோதல் மனிதனின் உணர்வுகள், கௌரவம், கருத்துக்கள், சிந்தனைகள், நடத்தைகள் என்பவற்றில் மாற்றத்தை ஏற்படுத்துவதை குறிப்பிடுவதாகும். தனியார் நிலைமாற்றம் சமூக மோதலில் பாரிய அழிவுகளை தடுத்து, ஆரோக்கியமான அபிவிருத்தியை கொண்டு வருவதில் செல்வாக்குச் செலுத்தக் கூடிய ஒன்றாகும். உறவுப் பரிமாணம்

இது உறவு நிலைகளில் மாற்றத்தை ஏற்படுத்துவதைக் குறிப்பிடுகின்றது. மோதலில் அதிகளவு தாக்கத்தை செலுத்தக்கூடியது உறவு முறைகள் ஆகும், எனவே, மோசமான தொழிற்பாட்டைக் கொண்ட தொடர்பாடலைக் குறைத்து, புரிந்துணர்வு ஏற்படக்கூடிய தொடர்பாடலின் மூலம் மோதல் நிலைமாற்றத்தைக் குறிப்பிடுகின்றது. உறவு முறையில் காணப்படும் மனவெழுச்சி, ஒருவரில் ஒருவர் தங்கியிருத்தல் என்பவற்றுடன் தொடர்புடைய பீதி, அச்சம், எதிர்பார்ப்புக்களை வெளிக் கொணர்ந்து அவைகளை நீங்குவதைக் குறிப்பிடுகின்றது.

கட்டமைப்பு பரிமாணம்

வன்முறைக்கு வித்திடுகின்ற மூல காரணிகள், சமூக நிலைமைகள் மற்றும் ஏனைய அழிவை ஏற்படுத்தும் மோதல் காரணிகளை இனங்கண்டு அவைபற்றி கையாளும் வழிமுறையாகும். கடட் மைப்பு பரிமாணம் பிரதானமாக சமூக ரீதியில் கவபனம் செலுத்துகின்றது. மோதல்கள் மேலும் அதிகரிப்பதற்கு சமூக அநீதிகளே காரணமாக இருப்பதால் அதனை நீக்கி சமூக நீதியை கட்டியெழுப்புவதன் மூலம் மோதல் நிலைமாற்றத்தை ஏற்படுத்துவதைக் குறிப்பிடுகின்றது.

கலாசார பரிமாணம்

இது சமூகமொன்றின் கலாசார விழுமியங்கள், பாரம்பரிய அடையாளங்கள் என்பவற்றில் மாற்றம் பெறுவதை குறிப்பிடுகின்றது. அதாவது ஒரு சமூகக் குழுவின் கலாசார விழுமியங்கள் எவ்வாறு மோதலை நிலைமாற்றுகின்றது என குறிப்பிடுவதாகும். மோதலினால் ஏற்பட்ட ஒரு குழுவின் கலாசார மாற்றங்களையும் சாதக நிலைக்கு வித்திடுவதாகும்.

மோதல் நிலைமாற்றம் மோதலுக்கு உதவியாக தீர்வை முன்வைக்காது மோதலின் தன்மையை பல்வேறு வழிமுறைகளினூடாக அதன் நோக்கம், திசை என்பவற்றை மாற்றுவதாகும். அதாவது, மோதல் தொடர்வதற்கான சமூகக் காரணிகளை அடையாளம் கண்டு, மோதலுக்கான முடிவை காண்பதாகும்.

முரண்பாட்டுக்குப் பின்னரான சமாதானத்தைக் கட்டியெழுப்புதல்

மனித வரலாறு நெடுகிலும் மோதல், வன்முறை என்பவற்றினாலேயே வழி நடாத்தப்பட்டு வந்துள்ளன. மோதல், வன்முறை பாரிய அழிவுகளை ஏற்படுத்தியமையால் மோதல் தீர்வு செயன்முறையில் அண்மைக்காலமாக இணைத்துக் கொள்ளப்பட்டது. முரண்பாட்டுக்குப் பின்னரான சமாதானத்தைக் கடடி யெழுப்புதலாகும். ஒரு பிரதேசத்தின் அபிவிருத்தி, சமாதானத்தைக் கடடி யெழுப்புதல் என்பன மோதலுக்குப் பின்னரே அதிகமாக இடம் பெறுவதைக் காணலாம்.

மோதலுக்குப் பின்னரான சமாதானத்தைன் கடடி யெழுப்புதலில் முதன்மையானதாக ஆயுதங்களையும், போராளிகளின் விடுதலை, போராளிகளை சமூகத்துடன் இணைத்தல், பாதிக்கப்பட்ட மக்களுக்கான உட்கட்டமைப்பு வசதிகளை செய்வதன் மூலம் சாத்தியப்படலாம் என டிக் சொலமன் எனும் அறிஞர் குறிப்பிட்டுள்ளார்.

புதிய அரச நிறுவனங்கள் நிர்மாணிக்கப்படுதல், ஜனநாயகத்தை நிலை நிறுத்துதல், அதிகாரப் பகிர்வு, சட்டவாட்சி என்பவற்றின் மூலம் மோதலுக்குப் பின்னரான சமாதானத்தைக் கட்டியெழுப்ப முடியும் என ஜோன் லூயிஸ் எனும் அறிஞர் குறிப்பிட்டுள்ளார்.

கோடப் ாட்டு ரீதியாக மோதலுக்குப் பின்னரான சமாதானத்தைக் கடடி் யெழுப்ப பின்வரும் 3 விடயங்க ளை நடைமுறைப்படுத்தல் வேண்டும்.

01. நிவாரணம் வழங்குதல்

மோதலினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக மனிதாபிமான உதவிகளை வழங்குதல் வேண்டும். அகதி முகாம், தற்காலிக இருப்பிடங்களில் வாழும் மக்களுக்கு உணவு, மருத்துவ வசதிகளை பெற்றுக் கொடுத்தல் வேண்டும்

02. மீள் கட்டுமான வசதிகளை வழங்குதல்

மோதலினால் முழுமையாக பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தும் வகையில் போராளிகளை சமூகத்துடன் இணைத்தல், உளவள பயிற்சி வழங்குதல், நம்பிக்கையை கடடி் யெழுப்புதல், ஜனநாயகத்தை நிலை நாட்டல் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

03. அபிவிருத்தி செய்தல்

மோதலினால் பாதிக்கப்பட்ட பிரதேசத்தை குறுங்கால, நீண்டகால ரீதியில் பாரிய பல அபிவிருத்திகளை மேற்கொள்ளல். இதன் மூலம் மோதல் இடம்பெற்ற காரணிகளை முற்றாக நீக்கி சமாதான சூழலை உருவாக்குதலாகும். இலங்கையில் 2009 யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர் இலங்கை அரசாங்கம் கிழக்கின் உதயம், வடக்கின் வசந்தம் எனும் அபிவிருத்தி திட்டங்களை அறிமுகம் செய்தமையைக் குறிப்பிடலாம்.

மோதலின் போது அழிவடைந்த பிரதேசங்கள், சமூகத்தை மீளக்கட்டியெழுப்புதல், புணர்வாழ்வளித்தல, மீள அபிவிருத்தி, மக்களுக்கு நிவாரணம் வழங்தல், நீதியை பெற்றுக்கொடுத்தல், புரிந்துணர்வைக் கடடி் யெழுப்புதல் என்பன மோதலுக்குப் பின்னரான சமாதானத்தைக் கடடி் யெழுப்புதல் செயற்பாடுகளில் உள்ளடங்குப்வையாகும். இவற்றின் மூலம் பாதிக்கப்பட்ட மக்களின் மனநிலையில் மாற்றத்தை ஏற்படுத்தி மீண்டும் மோதல் ஏற்படாமல் தடுப்பதை நோக்கமாகக் கொணட் தாகும்.

முரண்பாட்டுத் தீர்வு

முரண்பாடு த் தீர்வு எனும் பதம் மோதல் கற்கையில் மட்டுமன்றி மோதலுடன் தொடர்புடைய சகல துறைகளிலும் பரவலாக பயன்படுத்தப்பட்டு வருகின்றது. மோதல் தீர்வு என்பது குறுகிய மட்டத்தில் மோதலுக்கு வழிவகுத்த காரணிகளை அகற்றுதல் அல்லது நீக்குதல் என்பதைக் குறிக்கும். மோதலுக்கான உடனடியாக அறிந்து கொள்ள முடியாத, ஆழமாக வேரூன்றிய காரணிகளே மோதல்கள் ஏற்பட காரணமாகின்றன. இவ் ஆழவேரூன்றிய காரணிகளாக சமூக, பொருளாதார, அரசியல், கலாசாரம் என்பன காணப்படலாம். எனவே, அக்காரணிகளே நீண்டகாலமாகப் பரிணாமம் அடைந்து பல மோதல்கள் ஏற்பட்டுள்ளதை காணலாம். எனவே, இக்காரணிகளை மிகத் தீவிரமாக ஆராய்ந்து அவற்றினை தீர்த்தலாகும்.

பொதுவாக மோதல் தீர்வு என்பது மோதலில் ஈடுபட்ட இரு தரபப் ினரில் ஒரு தரப்பினரின் வெற்றியினூடாக மாத்திரம் முடிவுக்கு கொண்டு வருவதை நோக்கமாகக் கொண்டதல்ல. மாறாக இரு தரப்பினரினதும் மோதலுக்கான காரணிகளை பரஸ்பரம் தீவிர ஆராய்ந்து முடிவுக்கு கொண்டு வருதலாகும்.

முரண்பாட்டுத் தீர்வு செயன்முறையின் பண்புகள்

01. மோதலுக்கான அடிப்படை காரணிகளை வேரோடு களையச் செய்தல்.

02. மோதல், வன்முறை மீண்டும் தலைதூக்குவதற்கான சாத்தியங்களை நீக்குதல்.

03. மோதல் தரப்பினரிடையே புதிய உறவினை கட்டியெழுப்புதல்.

04. மனப்பாங்கு, நடத்தைகளில் மாற்றத்தை கொண்டுவரல்.

பொதுவாக முரண்பாடு த் தீர்வு என்பது மோதலுக்கான அடிப்படைக் காரணிகளை ஆழமாக ஆராய்ந்து அவற்றை தீர்ப்பதற்காக செயற்படுவது எனலாம். மேலும் மோதல் தரபப் ினரிடையே துணடி் க்கப்பட்ட தொடர்புகளை மீண்டும் மலரச் செய்தல், மோதல் மீண்டும் ஏற்படுவதற்கான காரணிகளை நீக்கி நிலையான சமாதானத்தை முடிவுக்கு கொண்டு வந்து சமாதானத்தை கட்டியெழுப்பக்கூடிய நீண்டகால செயற்பாடாகும்.

09ம் வினா (பிரிவு வினா)

I. **சர்வதேச அரசியல்**
II. **பொதுக்கொள்கை உருவாக்கமும் அதன் பண்புகளும்**
III. **இலங்கையின் வெளியுறவுக் கொள்கையில் பாதிப்புச் செலுத்தும் காரணிகள்**
IV. **இலங்கை அரசியற்கட்சிகளின் அண்மைக்கால போக்குகள்**

09. இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையை தீர்மானிக்கும் காரணிகள்

- இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையானது இரணடு வகையில் பிரித்து நோக்கப்படுகின்றது.
- உதாரணமாக :- சுதந்திரத்திற்கு முன்னரான வெளிநாட்டுக் கொள்கை, சுதந்திரத்திற்கு பினன் ரான வெளிநாட்டுக் கொள்கை
- சுதந்திரத்திற்கு பின்னர் காலத்திற்கு காலம் மாற்றமடையக் கூடிய அரசியல் சூழ்நிலைக்கு ஏற்றவாறு இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கைகளும் மாற்றமடைந்து செல்வதை அவதானிக்க முடிகின்றது. அவற்றை நோக்குவோமாயின்

01. புவியியல் சார் அரசியல் அமைவிடம்

- இலங்கை இந்து சமுத்திரத்தின் மத்தியில் அமைந்துளள் தீவொன்றாகையால் வெளி உலகுக்கு எப்போதும் திறந்துவிடப்படடு ள்ள இயல்பினைக் காண முடிகின்றது.
- ஆரம்பத்தில் இருந்து இந்தியா ஒடடு மொத்த ஆசிய அரசுகள் மற்றும் ஐரோப்பிய அதிகாரங்கள் பலவற்றுடன் பேணிச்சென்ற இயங்கியல் தொடர்புகளுக்கு இந்து சமுத்திரத்தின் உபாய முறையான மத்திய நிலையமாக இலங்கை காணப்பட்டமையே இதற்கான அடிப்படை காரணமாகியது.
- தென்னாசிய பிராந்தியத்தில் அமைந்துள்ளமை இலங்கையின் பிராந்திய தொடர்புகளுகக் ான அடிப்படையாக உளள் து.
- இந்து சமுத்திரத்தில் ஒரு தீவாக அமைந்திருப்பதால் கடல் சார் அரசியல் மற்றும் பொருளாதார தொடர்புகளில் கட்டாய அங்கத்தவராக மாறியுள்ளது.

02. சமூக மற்றும் கலாசார சாதனங்கள்

- பல்லின சமூகமொன்றாக விருத்தியடைந்துளள் இலங்கையின் கலாசார மற்றும் சமூகசாதனங்கள் வெளிநாட்டுக் கொள்கையின் இயல்புகளை தீர்மானிப்பதில் தாக்கம் செலுத்தியுள்ளது.
- இந்தியாவுடனான தொடர்த்தேட்சையான கலாசாரப் பிணைப்புகளால் ஆரம்பத்தில் இருந்து இன்றுவரையில் இதன் கலாசார சாதனங்களும் தாக்கம் செலுத்தியுள்ளது.
- இது இதுவரையில் வெளிநாட்டுக் கொள்கை ஒன்றாக மட்டுமின்றி உள்ளக அரசியலைத் தீர்மானிப்பதில் பிரபலமான சாதனம் ஒன்றாகவும் முன்னிலைப் பெறுகின்றது.
- நாடொன்றின் வெளிநாட்டுக் கொள்கையானது உள்ளக சமூக-பொருளாதார மற்றும் பொருளாதார அசைவியக்கங்களின் தொடர்ச்சி ஒன்றேயன்றி அதிலிருந்து முற்றிலுமாக விலகியதொன்றல்ல.
- இதனால் மேற்குறிப்பிட்ட உள்ளக அரசியல்-கலாசார மற்றும் சமூக அசைவுகள் வெளிநாட்டுக் கொள்கையின் இயல்பினைத் தீர்மானிப்பதில் நேரடியான தாக்கத்தினை ஏற்படுத்துகின்து.

03. அரசியல் பொருளாதாரம்

- ஆட்சியாளர்களின் அரசியல் பொருளாதார கொள்கைகளும ் வெளிநாட்டுக் கொள்கைளில் செல்வாகக் செலுத்துகின்றது.
- உதாரணம் :- ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க ஆட்சிகாலத்தில் இலங்கை மூடிய பொருளாதாரக் கொள்கையை பின்பற்றியது.
- 1977 இன் பின்னர் திறந்த பொருளாதாரக் கொள்கையை அறிமுகப்படுத்தியதன் பின்னர் இலங்கையின் வெளிநாட்டுக்கொள்கை இதற்கு முன்னர் காணப்பட்ட கொளல் கயில் இருந்து மாறிய இயல்பினைப் பெற்றது.
- சுதந்திர இலங்கையின் ஆரம்ப காலங்களில் இலங்கை பொதுநலவாய அமைப்புக்களுடன் இணைந்து பிரித்தானியாவிற்கு சார்பான நிலையைக் கடைப்பிடித்தமை பொருளாதார நலனக் ளை ஈட்டிக் கொள்ளவேயாகும்.
- அத்தோடு அபிவிருத்தி மற்றும் பொருளாதார அபிலாசைகளும் வெளிநாட்டுக் கொள்கையுடன் நேரடியாக இணைந்துளள் து.

04. ஆட்சியாளர்களின் அரசியல் அபிலாசைகள்

- ஆட்சியை வழிநடத்தும் அரசியல் கட்சி அல்லது குழுவின் கொள்கைகள் மற்றும் அபிலாசைகளும் வெளிநாட்டுக் கொள்கையின் இயல்புகளைத் தீர்மானிப்பதில் நிச்சயமான தாகக்த்தினை ஏற்படுத்தியுள்ளது.
- 1948-1956 வரையிலும் அதிகாரத்துக்கு வந்த ஐக்கிய தேசியக் கட்சியானது பிரித்தானியாவுடன் நல்லுறவை பேணியதுடன் இந்தியாவுடன் நெருக்கமற்ற உறவினைக் கொண்டிருந்தது.
- 1956-1965 வரை சுதந்திரக் கட்சி தலைமையிலான மக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கம் நடுவழிப் போக்குடைய கம்யூனிச சார்பு கொள்கையை கடைப்பிடித்தது
- 1965-1970 வரை சம'ஸ்டி கட்சியுடன் இணைந்து ஐக்கிய தேசியக் கட்சி மேற்கு சார்புக் கொள்கையை கடைப்பிடித்தது.
- 1970-1977 வரை சுதந்திரக் கட்சி தலைமையிலான இடதுசாரிகள் கூட்டிணைந்த அரசாங்கம் அணிசேரோக் கொள்கை மற்றும் கம்யூனிச சார்புக் கொள்கையை கடைப்பிடித்தது.
- 1977-1989 வரை ஐக்கிய தேசியக் கட்சியானது அமெரிக்க சார்பு மேற்குலக கொள்கையை கடைப்பிடித்தது.
- 1989-1994 வரை ஐக்கிய தேசியக் கட்சியானது மேற்கு சாராத வெளியுறவுக் கொள்கையை கடைப்பிடித்தது.
- 1944-2001 வரை பொதுஜன ஐக்கிய முன்னணி புதிய பரிமானமாக மேற்கு சார்பு, கம்யூனிச சார்பு கொள்கையையும் கடைப்பிடித்தது.
- 2001-2004 வரை ஐக்கிய தேசிய கட்சி சர்வ தேச ஆதிக்க நாடுகளுடன் சுமூகமான உறவையும் மற்றும் 2005-2015 வரை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு தேசியக் கொள்கைக்கு முதன்மையளிக்கும் வெளிநாட்டுக் கொள்கையை கடைப்பிடித்தது.
- தொடர்ந்து 2015ம் ஆண்டு தெரிவு செய்யப்பட்ட இணக்கப்பாடான அரசாங்கமானது சர்வதேச நாடுகளுடன் ஓர் சுமுகமான உறவைப் பேணுவதைக் காணலாம்.

05. பிராந்திய மற்றும் சர்வதேச வலுச்சமநிலை

- பிராந்திய மற்றும் சரவ் தேச அரசியல் அதிகாரம் நடைமுறைப்படுத்தும் இயல்பு மற்றும் இயங்கியல் தன்மை வெளிநாட்டுக் கொள்கையை தீர்மானிக்கும் சாதனமொன்றாகும்.
- தென்னாசிய பிராந்தியத்தில் இந்தியாவை முதன்மையாகக் கொண்ட வலுச்சமநிலையும், சர்வதேச சமூகத்தில்
    1. ஒருதுருவ (Uni - Polar)
    2. இருதுருவ (Bi - Plar)
    3. பல்துருவ (Multi - Polar) போனற் வலுச்சமநிலை எந்தவொரு அரசினதும் வெளிநாட்டுக் கொள்கையை தீர்மானிப்பதில் செல்வாக்குச் செலுத்துகின்றது.

06. மக்களின் எதிர்பார்ப்புகளும் ஆதிபத்திய கருத்தியலும்

- மக்களின் பொது எதிர்பார்ப்பு போலவே ஆதிக்கவாதத்துடன் (Hegemony) உருவாகக் ப்படுகினற் பார்வைகளும் வெளிநாட்டுக் கொள்கையின் இயல்பினைத் தீர்மானிப்பதில் செல்வாக்குச் செலுத்துகின்றது.
- சில "மேற்குசார் தங்குநிலை", "சீனாவுக்கு சார்பான" ,

"இந்தியாசார் தங்குநிலை" போனற் வகையில் சமூகத்தினுள் உருவாக்கப்பட்டுள்ள கருத்தாடல்கள் தொடர்பில் ஆட்சியாளர்கள் கவனம் செலுத்துவதைக் காண முடிகின்றது.

முடிவுரை

- மேற்கூறிய காரணங்களை அடிப்படையாகக் கொண்டே இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையானது தீர்மானிக்கப்படுகின்றது.

  Note :- வெளிநாட்டுக் கொள்கையின் தத்துவம் யாதெனில் ஒரு நாடு தனது சர்வதேச எல்லைகளைப் பாதுகாப்பதன் ஊடாக ஒவ்வொரு அரசும் அதன் அரசியல் சுதந்திரத்தையும் பாதுகாப்பையும் இலக்காகக் கொண்டதாகும். இத்தகைய வெளிநாட்டுக் கொள்கையானது பினவ் ரும் அம்சங்களைக் கொண்டிருக்க வேண்டும்.

    1. வரையறுக்கப்பட்ட கோட்பாடுகள், கொள்கைகள்
    2. நோக்கங்கள், தேசிய நலன் என்பவற்றை அடைதல்.
    3. பிற நாடுகளுடன் உறவு மேற்கொள்வதற்குரிய பொறிமுறைகள்
    4. ஒரு நாட்டின் வெற்றி தோல்வி பற்றிய மதிப்பீடு

5. தொடர்ந்தும் அவைகளை நிலை நாட்ட மேற்கொள்ளும் வழிகள்.

10ம் வினா (பிரிவு வினா)

I. **ஐக்கிய நாடுகள் தாபனமும் இலங்கையும்**
II. **பொதுநலவாயமும் இலங்கையும்**
III. **சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமும் இலங்கையும்**
IV. **அணிசேரா இயக்கமும் இலங்கையும்**

I0. ஐக்கிய நாடுகளும் இலங்கையும்

- 1955ம் ஆண்டு டிசம்பர் மாதம் 14ம் திகதி இலங்கை ஐக்கிய நாடுகள் சபையின் அங்கத்துவம் பெற்றது. (UNP யின் பிரதமராக இருந்த ஜோன் கொத்தலாவ அங்கத்துவத்தை பெற்றுக் கொடுத்தார்)
- 1952ம் ஆண்டு முதல் ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி வேலைத்திட்டம் (; United Nation Development Programe - UNDP) இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்டது.
- 1954ம் ஆண்டு டிசம்பர் மாதம் 16ம் திகதி ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணத்துவ அங்கத்துவ சபையான சரவ் தேச தொழிலாளர் அமைப்பு, கல்வி, விஞ்ஞான மற்றும் கலாசார அமைப்புக்கள், சரவ் தேச விமான சேவை அமைப்புக்கள், உலக சுகாதார நிறுவனம் ஆகிவற்றுடன் ஒப்பந்தம் செய்து கொண்டது.
- 1960 – 1965 வரை இலங்கை ஐக்கிய நாடுகள் தாபனத்தின் பாதுகாப்புச் சபையில் உத்தியோகப்பூர்வமற்ற அங்கத்துவத்தையும் பெற்றிருந்தது.
- தொடர்ந்தும் ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை கூட்டங்களில் பங்குபற்றியுள்ளதோடு 1976ம் ஆணடு கூட்டத்தில் முன்னிலைப் பெற்றது.
- அத்தோடு 1978ல் பொதுசபையில் நிராயுதபாணியாக்கலுக்கான பிரேரணையாளராகவும் இலங்கை இருந்தது.
- இதற்கு மேலாக பொருளாதார, சமூக மற்றும் கலாசார ஒத்துழைப்பு வேலைத்திட்டங்களின் அங்கத்தவர் என்றவகையில் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள், தொழிலாளர், சுற்றாடல் உரிமைகளுக்கான பிரகடனத்தை இலங்கை ஏற்றுக்கொண்டது.

ஐக்கிய நாடுகள் தாபனத்தினூடாக இலங்கைக்கு கிடைக்கும் மேலதிக உதவிகள்

- அரசுக்கு உதவுவதற்கும் அறிவுரை வழங்குவதற்கும் நிபுணத்துவ சேவைகளின் ஒத்தாசையை பெற்றுக்கொடுத்தல்.
- தேர்ந்தெடுத்த பிரதேசங்களில், செயலமர்வுகள், பயிற்சிநெறி வேலைத்திட்டங்கள், கணக் ாட்சிகள், வேலைத்திட்டங்கள் மற்றும் அதற்குத் தேவையான முற்பணிகள் போனற் வற்றை ஒழுங்குசெய்தல்.
- புலமைப் பரிசில் பிரதேசங்களில், உயர் புலமைப் பரிசில் வழங்கல். அரசினது ஐக்கிய நாடுகள் சபையினதும் அந்நியோனய் அங்கீகாரத்துடன் கைத்தொழில் உதவி வழங்குதல்.

I0. பொதுநலவாயமும் இலங்கையும்

அறிமுகம்

- அரசி எலிசபெத் அவர்களால் தாபிக்கப்பட்டது.
- பிரித்தானிய லண்டனில் உளள் ஆயசடடிழ சுழரபா ர்ழரளநல் அமைந்துளள் து.

- தற்போது 54 நாடுகள் அங்கத்துவம் வகிக்கின்றன.
- இதன் பிரதம நிறைவேற்று அதிகாரி செயலாளர ் நாயகம் ஆவார்.
- தற்போதைய செயலாளர் நாயகம் திரு. கமலேஸ் சரம் ா ஆவார்.
- 2009ம் ஆணடு இறுதியாக றுவாண்டா இணைந்துகொணட் து.

நோக்கங்கள்

- பொருளாதார, அரசியல், கலாசார துறைகளில் அந்நியோனய் ஒத்துழைப்பை வளர்த்தல்.
- தொழிநுட்ப அறிவைப் பகிர்ந்துகொள்ளல்.
- புலமைப் பரிசில்களைப் பகிர்ந்துகொள்ளல்.
- அங்கத்துவ நாடுகளிடையே வர்த்தகத் தொடர்புகளை வளர்த்தல்.

இலங்கையின் அங்கத்துவம்

- இலங்கை 1948ஆம் ஆணடு முதல் பொதுநலவாயத்தில் அங்கத்துவம் பெற்றுள்ளது.
- 1960களில் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க பிரதமர் என்றவகையில் பொதுநலவாய அமைப்பில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தினார்.
- தற்போது பொதுநலவாய அமைப்பு மற்றும் இலங்கைக்கிடையிலான தொடர்புகள் கல்வி, விளையாட்டு மற்றும் கலாசார உதவிகளை வழங்கலை மையப்படுத்தி விருத்தியடைந்துளள் து.
- 23வது பொதுநலவாய நாடுகளின் அரச தலைவர்களின் மாநாடு (GHOGM) 2013 நவம்பர் மாதம் இலங்கையில் நடைபெற்றது.

பொதுநலவாய அமைப்பின் விசேட இயல்புகள்

- பிரித்தானிய மகாராணி தலைமையில் இரணடு வருடத்திற்கு ஒரு முறை இவ்வமைப்பின் உறுப்பு நாடொன்றில் கூட்டத் தொடர் இடம்பெறுகிறது.
- படிமுறை ரீதியான வளர்ச்சியில் கட்டியெழுப்பப்பட்ட நிறுவனமாகும்.
- வரையறுக்கப்படட் அதிகாரங்களைக் கொண்டது.

10. *அணிசேரா இயக்கமும் இலங்கையும்*

❖ இரண்டாம் உலகமகா யுத்தத்தின் பின்னர் உலக நாடுகள் இரண்டு அணிகளாக பிரிந்தன.

1. உலக வலுச்சமநிலையில் அதிகாரத்தை நடைமுறைப்படுத்திய அமெரிக்கா மற்றும் மேற்கு ஐரோப்பிய தலைமையிலான முதலாளித்துவ பொருளாதார முறையினை பின்பற்றும் நாடுகள்.
2. ரஸ்யா தலைமையிலான கம்யூனிஸ கொள்கையினை பின்பற்றும் கிழக்கு அதிகாரம் மிக்க நாடுகள்.

❖ இந்த இரண்டு உதவி வழங்கும் பகுதியிலும் விரும்பியோ விரும்பாமலோ சார்பாகும் நிலை நிகழ்வது பிரித்தானியரிடமிருந்து சுதந்திரம் பெற்ற ஆபிரிக்க, ஆசிய நாடுகளின் சுயாதீனத்திற்கு பிரச்சினையாக இருந்தன.
❖ இதனால் எந்தவொரு அணியிலும் சேராமல் செயற்படும் நோக்குடன் 1961ம் ஆண்டு கூட்டுச் சேரா (அணி சேரா) நாடுகளின் அமைப்பு நிறுவப்பட்டது.
❖ இந்திய முன்னாள் பிரதமர் ஜவர்கலால் நேரு முன்னோடியாக திகழந்ததுடன் அப்போதைய யூகோஸ்லேவியாவின் ஜனாதிபதி மார்ஸல் டிட்டோ மற்றும் எகிப்திய ஜனாதிபதி அப்துல் கமால் நசார் ஆகியோர் உதவி புரிந்தனர்.
❖ இலங்கை அதன் ஆரம்ப உறுப்பினராவார்.
❖ 1976ல் இலங்கை ஐந்தாவது அணிசேரா நாடுகளின் மாநாட்டு அணுசரனையாளரானது.
❖ தற்போது அணிசேரா நாடுகள் பிரபலமான அரசியல் செயற்பாட்டில் ஈடுபடுகினற் இயக்கமாக இல்லையென்பது தெரிகிறது.
❖ எனினும் ஸ்ரீலங்க சுதந்திரக் கட்சி ஆட்சிக்கு வரும் காலத்தில் அணிசேரா நாடுகள் மற்றும் இலங்கைக்கு இடையில் தொடர்புகள் விருத்தியடைந்தமையை காணலாம்.

10. சார்க் அமைப்பும் இலங்கையும்

1985ல் உருவாகக் ப்பட்ட தென்னாசிய ஒத்துழைப்புக்கான சங்கத்தில் இலங்கை ஆரம்ப மற்றும் செயற்பாட்டு உறுப்பினராகும்.

தற்போதைய பிராந்திய வலுச்சமநிலைப் பிரச்சினைகள் காரணமாக ளுயுயுசுஊ அமைப்பின் அதிகாரம் மற்றும் செயற்பாடுகள் ஓரளவு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கை தென்னாசிய சுதந்திர வர்த்தக வலயம் (SAFTA) மற்றும் முன்னுரிமை தேர்வு ஒப்பந்தம்

(SAPTA) போனற் வேலைத்திட்டங்களின் அங்கத்தவராவதோடு சார்க் விளையாட்டு விழாவின் செயற்பாட்டு உறுப்பினராகும்.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் நோக்கம் மற்றும் செயற்பாடுகளை விபரிக்குக

ஆரம்பம்

- 1864ஆம் ஆண்டு ஏற்படுத்திக்கொண்ட ஜெனீவா உடன்படிக்கையின் பிரகாரம் செஞ்சிலுவைச் சங்கம் நிறுவப்பட்டது.
- இத்தாலிய நாட்டவரான ஹென்றி டுடான்ட் இதனை நிர்மாணித்தார்.
- 1859ஆம் ஆண்டு வட இத்தாலியில் நடைபெற்ற யுத்தத்தின்போது காயமுற்ற போர் வீரர்களின் துக்ககரமான நிலையைக் கண்ட இவர், அவ்வாறானவர்களுக்கு உதவும் நோக்குடன் 04 பேருடன் சேர்ந்து நிறுவினார்.
- 1864ஆம்' ஆண்டு ஜெனீவா சம்மேளனத்தில் இது சட்ட ரீதியாக ஏற்றுகொள்ளப்பட்டது.

நோக்கம்

எந்தவொரு இடத்திலும் மனித சமூகத்திற்கு நேருகின்ற துன்பகரமான நிகழ்வு களைத் தவிர்ப்பதற்கு அல்லது குறைப்பதற்கு முயற்சி செய்தல். மனித சமூகத்தின் கௌரவத்தை பேணும் வகையில் செயற்படல்.

அனைவரினதும் நம்பிக்கையினை பெறக்கூடியவாறு வாதங்களில் ஈடுபடுவதைத் தவிர்த்து பக்கச்சார்பற்ற முறையில் நடந்துகொள்ளல்.

இலாப நோக்கற்ற முறையில் தொண்டர் அடிப்படையில்நிவாரனம்வழங்குதல். ஒரு நாட்டில் ஒரு செஞ்சிலுவை சங்கக் கிளையொன்றை மாத்திரம் நிறுவுதல்.

செஞ்சிலுவை சங்கமானது நாட்டின் அனைத்து பிரசைகளுக்கும் பொதுவானதாகும். நாட்டு எல்லையினுள் மனித இனத்தின் நன்மை கருதி செயற்படும்.

இன, மத, வகுப்பு பேதமின்றி நபர்களின் தேவைகளை நிறைவேற்றுதல்.

நாடுகளின் சட்டத்திட்டங்களுக்கும் செஞ்சிலுவைச் சங்கத்தின் கொள்கைகளுக்கும் அமைவாகச் செயற்படல்.

அங்கத்துவம்

1863ஆம்' ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட சர்வதேச செஞ்சிலுவைச் சங்கமானது சுவீடன் நாட்டு 25 அங்கத்தவர்களை உள்ளடக்கியது. எந்தவொரு நாட்டுக்கும் செஞ்சிலுவை சங்கமொன்றை நிறுவ முடியும். அச்சங்கத்தில் நாட்டின் எந்தவொரு பிரசைக்கும் அங்கத்துவம் பெறமுடியும்.

அங்கத்தவர்கள் அமைப்பின் சட்டத்திட்டங்களுக்கும் குறித்த நாட்டின் சட்டத்திட்டங்களுக்கும் கீழ்படிதல் அவசியமாகும். தற்போது 300 மில்லியனுக்கும் மேற்பட்ட எண்ணிக்கையானோர் அங்கம் வகிக்கின்றனர். 146 நாடுகளில் செஞ்சிலுவை சங்கங்கள் நிறுவப்பட்டுள்ளன.

ஒழுங்கமைப்பு

இதன் பிரதான நிறுவனங்கள் மூன்றாகும்.

1. சர்வதேச செஞ்சிலுவை சம்மேளனம்
2. சர்வதேச செஞ்சிலுவை குழு
3. தேசிய செஞ்சிலுவை சமூகம்

சர்வதேச செஞ்சிலுவை சம்மேளனம்

- 1919ல் ஆரம்பிக்கப்பட்டது.
- 04 வருடங்களுக்கு ஒருமுறை கூடும்.
  - தேசிய மட்ட செஞ்சிலுவை சங்கங்களை நிறுவி அவற்றிடையே அந்நியோன்னிய தொடர்பைப் பேண உதவுதலும் தேசிய சமூகங்களுக்கு அறிவுரை, உதவி வழங்கல்.

சர்வதேச செஞ்சிலுவை குழு

- 1863ஆம் ஆண்டு நிறுவப்பட்ட இதில் சுவீடன் தேசத்தின் 25 உறுப்பினர்கள் அங்கத்தவர்களாவர்.
- சுவிஸர்லாந்து தேசிய அரசும் அந்தந்த நாட்டின் தேசிய மட்ட செஞ்சிலுவை சங்கங்களும் உதவி வழங்கும்.
- அமைப்பின் அடிப்படை கொள்கைகளைப் பேணல் அமைப்பின் பணியாகும்.

தேசிய செஞ்சிலுவை சமூகம்

- அந்தநத் நாட்டில் நிறுவப்பட்ட செஞ்சிலுவை சங்கங்கள் இதிலடங்கும்.
- நாட்டின் எந்தவொரு பிரசைக்கும் இதில் அங்கத்துவம் பெறமுடியும்.

இலங்கையும் செஞ்சிலுவைச் சங்கமும்

அறிமுகம்

- 1936ஆம் ஆண்டு பிரித்தானிய செஞசிலுவை சங்கத்தின் ஒரு கிளையாக இது ஆரம்பிக்கப்பட்டது.
- 1947ஆம் ஆண்டு இது இலங்கை செஞ்சிலுவை சங்கமாக மாறியது.
- 1952ஆம் ஆண்டு இது சர்வதேச செஞ்சிலுவை குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.
- எந்தவொரு பிரசைக்கும் இதில் அங்கத்துவம் பெறமுடியும்.
- தலைமைக் காரியாலயம் கொழும்பில் நிறுவப்பட்டுள்ளது.

இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் சேவைகள்

- முதலுதவிப் பயிற்சிகளும் சேவைகளும்
- ஆரம்ப சுகாதாரத்தைப் பேணல்
- வீட்டு தாதிச் சேவை
- பணியாளர் போக்குவரத்துச் சேவை
- இரத்த தானம் செய்பவர்களை சேர்துக்கொள்ளல்.
- விபத்துக்குள்ளானவர்களை தேடிப் பார்த்து தகவல் வழங்குதல்.
- இளைஞர் சேவை செயற்பாடுகள்
- போஸாகக் சேவைகள்
- மக்கள் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள்

